In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ இடபதேவர்

அருள்மிகு காளையப்பர்

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறை மணி காட்சிகளில் ரிஷப தேவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.22

உ

அனைத்தும் சிவமயம்

ஸ்ரீ இடபதேவர்

(அருள்மிகு காளையப்பர்)

(சிவபெருமானின் இடபவாகனம் பற்றிய செய்தித் தொகுப்பு)

சிவமஞ்சரிச் செம்மல, அருடபணிஅரசு, சிவசேவாரத்தினம்

பூசை. ச. அருணவசந்தன்

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ- அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் அருளாசியுடன்

ஸ்ரீநந்தன ஆண்டு மாசித்திங்கள் மகாசிவராத்திரி 10,03,2013
ஞாயிற்றுக்கிழமை நன்னாளில் வெளியிடப்பட்டது.

சிவசுந்தரி கலைக்கூடம்

ப. எண் 29, பிமன்னாமுதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலின் விவரம்

நூலின் பெயர்	ஸ்ரீ இடபதேவர்(அருள்மிகு காளையப்பர்)
நூலின் ஆசிரியர்	பூசை.ச.அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	முதற்பதிப்பு- 2013
உரிமை	ஆசிரியருக்கு
பதிப்பாளர்/ ஆசிரியர்	பூசை.ச.அருணவசந்தன்
முகவரி	ப.எண்.29,பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018 அலைபேசி 9941124964
பக்கங்கள்	6 + 74 ஆக 80 பக்கங்கள்
நூல் அளவு	கிரௌன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)
அச்சிட்டுள்ள பரப்பளவு	21.5 செ.மீ.X 15.2 செ.மீ.
பயன்படுத்தப்பட்டுள்ள தாள்	பலாப்பூர் 11.6கி.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	11.8 ஸ்ரீலிபி
மின் அச்சுக்கோவை	சிவசுந்தரி, 14, செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு [சி.பி.கோயில் தெரு], மயிலாப்பூர், சென்னை-4
மறுதோன்றி அச்சகம்	தேவா ஆப்செட் பிரின்ட்டஸ் சென்னை-600 005,
நூலின் பொருள்	சிவபெருமானின் காளை வாகனமான இடபதேவர் பற்றியும் சிவவழிபாட்டில் அவர் இடம் பெற்றுள்ள நடைமுறை வழக்காறுகள், புராணங்கள், தலபுராணங்கள், மகாபுராணங்கள் முதலியவற்றில் அவரைப் பற்றி காணப்படும் செய்திகள் ஆகியன இயன்றவரை தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.
விலை	ரூபாய் 100/-
நூலகக் குறியீட்டு எண்.	

அட்டையில்- ஸ்ரீமகா ரிஷபம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சர்வம் சிவகுக மயம்

திருச்சிற்றம்பலம்



அறிமுகவுரையும் நன்றி மலர்களும்

காலனை வென்ற காலகாலனாகவும், உயிர்களுக்கு அபயம் தந்து காத்தருள் புரியும் அபயமூர்த்தியாகவும் விளங்கும் சிவபெருமானின் பெருமைகளைப் பேசும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கும் சிவமஞ்சரி வரிசையில் அவரது ஒப்பற்ற வாகனமான இடப தேவரின் பற்றிய பல்வேறு செய்திகளைத் தாங்கிய **ஸ்ரீஇடபதேவர்** என்னும் இந்நூல்மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. ஆர்ப்பரித்து வரும் ஆற்றல் அடல்விடையாகவும், பெருமான் அன்பர்களுக்கு அருளவரும் போதெல்லாம் அவரைச் சுமந்து விரைந்து வருதுமான மகாரிஷபத்தின் பெருமைகள் இயன்றவரை இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த இனிய வேளையில் இந்நூல்மலர்ந்து மணம் பரப்பத் துணை நின்ற அனைவருக்கும் எனதுநெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது பணிகளுக்கு அருளாசி புரிந்து வரும் **திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் பொன்னார் திருவடிகளைப்** போற்றிப் பணிந்து வணங்குகின்றேன்.

எனதுசமயப் பணிகளுக்குப் பேருதவி புரிந்துவரும் எனது அன்பிற்கினிய **சகோதரி திருமதி. அனந்தலட்சுமி,** அவரது கணவர் **கயிலைமணி சிவத்திரு. வரத.வீரராகவன்** தம்பதியருக்கும், நுங்கம்பாக்கம் எல்.வி.ஜே.பில்டர்ஸ் உரிமையாளரும் சிவசுந்தரி அறக்கட்டளையின் நிறுவனருமான திருப் பணிச் செல்வர், அருட்பணி அரசு **எம்.வி.ஜெய்சங்கர்** அவர்களுக்கும் என் இனிய நன்றி உரித்தாகுக.திரு வீரராகவன் அவர்கள் அச்சுத்தாள்களுக்கான செலவை ஈடுகட்ட **திரு.V.சுந்தரம் - மைதிலி** தம்பதியர் மூலம் நன்கொடையாகப் பெற்றுத் தந்ததை இங்கே நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

மேனாள் விஞ்ஞானி சி.எல்.ஆர்.ஐ **சித்தாந்த ரத்தினம். விஸ்வ. ஆறுமுகம்** அவர்கள் இந்நூலாக்கத்திற்கு மேற்கண்ட பயணச் செலவுகளின்ஒருபகுதியைஅருட்கொடையாக அளித்ததுடன் அச்சுப் படிகளைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தியும்,உதவி புரிந் தார்கள்.இப் பயணங்களில் திரு. நாராயண. முருகன் அவர்கள் உடன் வந்து உதவி னார்கள்.

முதலில் நந்தியும் ரிஷபரும் என் னும் தலைப்பில் இந்நூலைத் தொடங்கி னோம். நந்திதேவரைப் பற்றிய செய்திகள் அதிகமாக இருப்பதால், திருநந்திதேவர் என்றும், மகாரிஷபர்(காளையப்பர்) என் னும் இரண்டு தலைப்புகளில் செய்தி களைத் தொகுத்து தனித்தனி நூலாக வெளியிட ஏற்பாடு செய்தோம். அவ் வகையில் ஆவணி மூல நாளில் வெளி யான திருநந்திதேவர்என்னும் நூலைத் தொடர்ந்து மகாசிவராத்திரி மலராக ஸ்ரீஇடபதேவர் என்னும் இந் நூல் இப்போது வெளிவருகிறது. .

பலஅன்பர்களின் பேருதவியா லேயே இந்நூல் மலர்ந்து மணம் வீசிக் கொண் டிருக்கிறது.இந்த இனியவேளையில் இவர்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த நன்றியைப் பணிந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவமஞ்சரியின் அச்சுப் பிரதிகளைப் படித்துச் செம்மைப்படுத்தி உபகரித்து வரும் அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ ஜி.எஸ்.நடராஜன் அவர்களை தண் டனிட்டு வணங்கி மகிழ்கிறேன். இவரு டைய குமாரர் என். பாலு (ம) பாலசுப்பிர மணியன் (ஸ்பீகள்பிரிண்டர்ஸ்) அவர்களும் அநேக உதவிகளைச் செய்து வருகின்றார்.

இந்நூலுக்குத் தேவையான ஓவி யங்களை வரைந்தளித்த மயிலை ஸ்ரீ காசி ஸ்தபதியார் தேவையான படங்களை வழங் கிய அன்பர்கள் யாவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருந்து வரும் டாக்டர் உ.வே.சாமிநாதைய்யர் நூலகத்தினர்க்கு எங்கள் நன்றி.

இந்நூல் அச்சிடுவதற்கு உதவி யாக கணினி தட்டச்சு செய்துதவிய திரு.கு.கதிர் வேலு அவர்களுக்கும்,நிழற் பிரதிகளைச் செய்து தந்த சத்தியா பிராஸஸ் திரு. ராதா கிருஷ்ணன் அவர்களுக்கும் நன் முறையில் அச்சிட்டளித்த தேவா பிரிண்டர்ஸ் உரிமை யா ளர்கள் ஆகியோருக்கும் எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. கே. வசந்தா எனது அனைத்துச் சிவப் பணிகளும் நன்கு நடைபெறுவதற்கு ஏது வாக இல்லப் பொறுப்புகள் அனைத் தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவி யாக இருந்து வருகிறாள். அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பர்கள் அனைவருக்கும் உண் ணாமுலை அம்பிகை உடனாகிய அண் ணாமலை யெம்மண்ணல்சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து அருள்பாலிக்கவேண்டுமென்று அவரு டைய பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றேன்.

கற்றவர்கள் தொழுதேத்த காளை மேல் வரும் கபாலிநாதன் அருளும் புன்னை மர நிழலில் வளர் பொற் கொடியான கற்பகவல்லி எங்கும் நிறைந்து எல்லோரை யும் மகிழ்ச்சியுடன் வாழ வைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
என்றும் சிவப்பணியில்,
பூசை.ச.அருணவசந்தன்
(எ)பூசை.ச.ஆட்சிலிங்கம்

ஸ்ரீநந்தன மகாசிவராத்திரி
10.03.2013 ஞாயிற்றுக்கிழமை



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி மலர்கள்

சிவபெருமான் திருவருளால் மலரும் இந்த ஸ்ரீஇடபதேவர் இந்நூல் வெளி வரும் வேளையில்,இதற்கென செய்திதிரட்டுதல், தலயாத்திரைமேற் கொள்ளுதல், படம் சேகரித்தல், ஓவியம்தீட்டுதல் முதலிய பல்வேறு பணிகளுக்குத் துணை நின்றும்,அருட்கொடை வழங்கியும் சிறப்பித்த பின்வரும் அன்பர்களுக்கு எமது இனிய இதயங்கனிந்த நன்றி.

வாழி நலம் சூழ! அன்பன் பூசை ச. அருணவசந்தன்

திரு.V.சுந்தரம் - மைதிலி தம்பதியர்
டி.டி.கே.சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 18

சித்தாந்த ரத்தினம். டாக்டர் விஸ்வ. ஆறுமுகம்,
மேனாள் விஞ்ஞானி, சி.எல்.ஆர்.ஐ.கிண்டி

ஸ்ரீமதி கோமதி ஹரிகரன் அஸ்தினாபுரம்
ஸ்ரீ மல்லிகார்ஜுனா சேவா டிரஸ்ட்,

திரு..M.S.முத்துக்குமார முதலியார்
மதுரவாயல்

திருமதி. விமலா சுப்ரமணியன்,
சித்தாந்தப் பேராசிரியை, தூத்துக்குடி

இருமொழிச்சீராளர்.திருவையாறு வே. ரமணன்
இருப்பு சிதம்பரம்

ப்ரம்மஸ்ரீ P.B.வெங்கட்ராமன்
ஆஷியானா சென்னை-18

திருமதி. பிரேமா வெங்கட்ராமன்
ஈஞ்சம்பாக்கம், சென்னை-41.

திரு.டி.கே. நீலகண்டன்,
அமைந்தகரை, சென்னை-29

சிதம்பரம் சீனு.அருணாசலம்
(அமைப்பாளர், சைவசித்தாந்தபயிற்சி மையம்)

திரு.ஏ.வெங்கடேசன்
கோரல் மினார், சென்னை-28

மோகனசம்பத், ராஜசிம்ம மகேந்திரன்
பெருமாளகரம், சென்னை



சிவத்திரு.எம்.சச்சிதானந்தம்,
தனலட்சுமி வங்கி, சென்னை

சித்தாந்த ரத்தினம். S. ரவீந்திரன்
தனலட்சுமி வங்கி, சென்னை

திருமதி. S. பத்மா.தனலட்சுமி வங்கி, சென்னை

திரு. ஜி.டி. நாடியன் செல்வன்.பெங்களூரு

திருமதி. சியாமளா ஸ்ரீநிவாசகோபாலன்
மேனாள் எஸ்.பி.ஐ. அதிகாரி, சென்னை

தில்லை. கார்த்திகேயன்
பொரசங்குறிச்சி, கள்ளக்குறிச்சி

திரு. என்.கார்த்திகேயன், திருவல்லிக்கேணி

சித்தாந்த ரத்தினம் டாக்டர் C.ரவிகுமார்
சற்குரு பல் மருத்துவமனை, புதுவை

திருமிகு.இரா.இராமச்சந்திரன்
நாம்பல்.சென்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேராசிரியர்.சத்யநாராயணா
ஐ.ஐ.டி. கிண்டி, சென்னை

சிற்பஸ்ரீ சாமி. சுப்பையா ஸ்தபதியார் (குமாரர்)
சிவஸ்ரீ. சுவாமிநாதன்(சிவா)காஞ்சிபுரம்

திரு. மல்லி. ஜினேந்திரதாஸ்
துணை இயக்குநர் சி.எல்.ஆர்.ஐ. சென்னை

திருமிகு. எம்.எஸ். ராமகிருஷ்ணன் பாண்டிச்சேரி

திருமிகு.டாக்டர். T.K.தேவராஜன்
திருமழிசை,சென்னை-124

குருஜி. கே.கே. கோபாலன்சர்மா,
பரமேஸ்வரி நகர், அடையாறு,சென்னை-20

பிரம்மஸ்ரீ .சுந்தர. கிருஷ்ணமூர்த்தி
டிரஸ்டுஸ்கொயர், அயன்புரம்.சென்னை

திரு.L.ஆறுமுகம்,
(மேனாள் சுகாதாரஅதிகாரி, சென்னை மாநகராட்சி)

ஓங்கலை தஞ்சாவூர் ஓவியக்கலைஞர், திரு.சீனிவாசன்
சைதாப்பேட்டை, சென்னை-15

திருமிகு.இரா.முத்துக்குமாரசிவாச்சாரியார்
ஸ்ரீபாலவிநாயகர் ஆலயம், வாரன் ரோடு.சென்னை

திருமிகு.ப.கணேசராஜ குருக்கள்
நல்லூர், இலங்கை

திருமிகு.மகாலிங்கசர்மா
கடவர்த்தா,இலங்கை

திரு. வி. சி.கோபிநாத்,
ஸ்ரீம் மங்களம்,புதுவை-1

திரு. தங்கவேலன்,
ஜேவிஎஸ்.ஜுவல்லரி,சேலம்

சிவஸ்ரீ. வி. ராம்குமார்,ஸ்ரீவத்சம்,
கோடம்பாக்கம், சென்னை-24

சிவஸ்ரீ. ஆர்.ராஜ்
மயிலாப்பூர்,சென்னை-4

சிவஸ்ரீ. ஞானகுருபரன்
செஞ்சிலுவைச் சங்கம்,தமிழ்நாடு(சென்னை)

அடுத்த வெளியீடு !

சிவபெருமான் ஏறிவரும் வாகனமாக காளையப்பர், சிவபெருமானே காளை வடிவில் வந்து அருள்பாலித்தல், ரிஷபதானம், ரிஷபமுத்திரை முதலிய எண்ணற்ற செய்திகளைத் தாங்கிவெளிவரும் இந்நூலைத் தொடர்ந்து வெளிவரும் அடுத்த நூல்

அருள்மிகு சண்டேஸ்வரர்

என்பதாகும். இந்நூலில் சிவபெருமானின் அனைத்து தொண்டரான சண்டிகேஸ்வரர் வரலாறு சிவாலயங்களில் அவர் பெற்றுள்ள இடம். அவருக்கான திருவிழாக்கள் போன்ற அனேக செய்திகள் இடம் பெறுகின்றன.

வான்தோயும் வெள்ளிமலையென வருவிடை ஏறும் அண்ணலே போற்றி !!
ஆன்ஏறு உகந்தாய் போற்றி! ஆற்றல் விடையாய் போற்றி!அருளாய விடையவனே போற்றி போற்றி!!

ஸ்ரீ இடபதேவர்
(அருள்மிகு காளையப்பர்)

முழுமுதற் கடவுளான சிவபெருமானை எப்பொழுதும் பிரியாதிருப்பதுடன், அவருக்கு ஊர்தியாகவும் இருப்பவர் இடபதேவர். அவர் சிவபெருமானை முதுகில் சுமந்து உலகினை வலம் வரும் பேறு பெற்றவர். உறுதிமிக்க காளை வடிவினர். தமிழில் காளையப்பர், ஆனேறு, இடபதேவர் எனப் பலவாறு அழைக்கப்படுபவர். வடமொழியில் ரிஷபதேவர் என்று அழைக்கின்றனர். அனைத்துச் சிவாலயங்களிலும் சிவபெருமானுக்கு எதிரே அவரை நோக்கியவாறு ரிஷபதேவர் எழுந்தருளியிருக்கிறார்.

சிவபெருமான் இடபத்தினை வாகனமாகவும், கொடியாகவும் கொண்டுள்ளார். இலக்கியங்கள் அவரை இடபவாகனன், இடபக்கொடியோன், ரிஷபத்துவஜன் என்று போற்றுகின்றன. இடபத்தை இலச்சினையாகக் கொண்டிருப்பதால் ரிஷபலாஞ்சனன் என்றும் அழைக்கப்படுகிறார்.மேலும், ரிஷபவாகனத்தின் பெயரால் ரிஷபாந்திகர், ரிஷபதாண்டவர், ரிஷபாருடர் எனப் பலவாறான பெயர்களையும் பெற்றுள்ளார்.

இத்தகைய சிறப்புமிக்க ரிஷபதேவரின் வடிவழகு, அவருடைய பெருமைகள் சிவாலயங்களில் இடம்பெற்றுள்ள இடப தேவர்களின் வரலாறுகள், பெருமானின் இடபக்கொடி, இடபமுத்திரை,ரிஷபதேவர் உண்டாக்கிய ரிஷபதீர்த்தங்கள் முதலிய பல செய்திகள் இம்மலரில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. மேலும், சிவபெருமான் தானே இடப வடிவம் கொண்டு அன்பர்களுக்கு அருள்பாலித்தது, அசுரர்களை அழித்தது முதலான செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

இடபதேவர் பற்றிய அரிய செய்திகளைத் தாங்கியுள்ள இந்நூல் மலர்ந்து தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

இடபக்கொடியேந்தி, மலைமகளான கற்பகவல்லியுடன்காளைமேல்வரும் கண்ணுதற்கடவுளான கபாலீசர் அனைவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வைத் தந்து மகிழ்வுடன் வாழவைக்கவேண்டும் என்று அவரது பொற்பாதங்களில் பணிந்து வேண்டுகிறோம். எங்கும் மங்கலம் பொங்குக. தங்குக.வாழி நலம் சூழ!

- சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்டமங்கலங்களின் ஒன்றாக இடப தேவர் வடிவம்

உலகில் எண்ணற்ற பொருட்கள் மங்கலச் சின்னமாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் போற்றி வழிபட இயலாது என்பதால்அவற்றுள் எட்டைத் தேர்ந்தெடுத்து அஷ்டமங்கலம் என்று அழைத்து விழா மேடைகளிலும் வழிபாட்டு மேடைகளிலும் அமைக்கின்றனர். அவற்றிற்குச் சிறப்புப் பூசைகளும் செய்யப்படு கின்றன. சிவவழிபாட்டில் 1.கண்ணாடி, 2.பூரணகும்பம், 3.ரிஷபம், 4.இரட்டைச் சாமரம், 5.ஸ்ரீவத்சம் 6.சுவஸ்திகம், 7.சங்கு, 8.அடுக்குதீபம் எனும் எட்டு பொருட்கள் மங்கலப் பொருட்களாகக் கொள்ளப் பட்டுள்ளன.

குடமுழுக்கு போன்ற பெருவேள்வி விழாக்களின்போது வேதிகையினைச் சுற்றி இந்த அஷ்ட மங்கலங்களை அமைக்கின்றனர். இவற்றைத் தனியாக அமைக்காமல், அஷ்டரம்பையரான தேவலோகப் பெண்கள் ஏந்தியி ருப்பதாக அமைக்கின்றனர். ரம்பை என்னும் அரம்பை இடபதேவர் வடிவை ஏந்தியவாறு வேள்விச்சாலையில் கிழக்கு திக்கில் நிற்கின்றாள். சைவ சமயத்தில் மட்டுமின்றி சமண, பௌத்த சமயங்களிலும் ரிஷபத்தின் வடிவம் மங்கலச் சின்னமாகக் கொள்ளப்பட்டுள்ளன. ஜினமாதா கனவில் தோன்றும் பதினாறு மங்கலப் பொருட்களில் இடபமும் ஒன்றாக இருக்கிறது.

மேலே காணப்படும்அஷ்ட மங்கலங்கள் தஞ்சைப் பெரிய கோயிலின் வடக்கு வாயிலின் மீது புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளவை. ❀

நாகநந்தி ❀❀❀❀❀❀

பாம்பும் இடபமும் சிவபெருமானை விட்டு நீங்காது இருப்பவை. வடநாட்டுத் திருத்தலங்களில் ரிஷபத்தின் முதுகில் உள்ள திமிலில் பாம்பு உடலைச் சுற்றிக் கொண்டு அதன் கொம்புகளுக்கு இடையே படம் எடுத்தவாறு இறைவனை நோக்கியவாறு இருக்கும் வகையில் அமைந்த திருவுருவங்கள் அதிக அளவில் உள்ளன. காசி விசுவநாதர் ஆலயத்தில் இருக் கும் பிரதோஷ ரிஷபம் இத்தகையதாகும்.

நாகத்தைத் தாங்கியுள்ள இந்த நந்தியை நாகநந்தி என்று அழைக்கின்றனர். இதில் பாம்பும், ரிஷபமும் சதா காலமும் யோகத்தில் நிலைத்திருந்து சிவபெரு மானைத் தியானித்துக் கொண்டிருப்பதாகக் கூறு கின்றனர்.இந்தப் பாம்பின் பெயர் அற்புதன் என்பதாகும். ❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்தியும் ரிஷபரும்

சிவாலயங்களில் கருவறைக்கு நேர் எதிரில் காளை வடிவில் படுத்திருக்கும் சிவபெருமானின் வாகனத்திற்கு வ்ருஷப தேவர் என்பது பெயர்.வ்ருஷபம் என்பது காளையைக் குறிக்கும் வடசொல்லாகும். தமிழில் இது இடபம்எனப்படும். ஆலயங் களில் சிவபெருமான் காளையின் மீது அமர்ந்து வருவதை ரிஷப வாகன சேவை (இடப வாகன சேவை) என்று அழைக்கின்றனர்.

இடப வடிவம் கொண்டுள்ள அவர், சிவபெருமானை முதுகில் சுமந்து வலம் வருவதால் பெற்றுள்ள பெருமைகளை அறிந்த திருமால், பிரமன், தருமதேவதை, உருத்திரன் முதலியோர் தாமும் அவ்வடிவம் கொண்டு பெருமானைச் சுமந்தவாறு மூவு லகையும் வலம்வந்து பேறு பெற்றுள்ளனர்.

நாம் நடைமுறையில் ரிஷபதேவரை நந்தி என அழைக்கிறோம். நந்தி என்பவர்கள் வேறான வர்கள். ரிஷபமும் நந்தி தேவரும் தனித்தனியான சிறப்புக்களைக் கொண் டவர்கள்.

நந்தி என்பதற்கு வளர்வது என்பது பொருள். (அழிவென்பதும் மற் றோர் பொருள்) புராணங் களின்படி நந்தி என்ப வர்கள் சிவனருள் பெற்று சிவஞானப்பேரின்ப வெள்ளத்துள் மூழ்கி, சிவ ஞானமயமாகி, சிவனரு ளையே சிந்தித்துக் கொண் டிருக்கும் அருளாளர்க ள் ஆவர்.இவர்கள் மானுட வடிவம் கொண்ட வர்கள். சிவஞானம் பெற்றுச், சிவசந்நிதி யில்வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்,சிவ ஞானத்தை மண்மேல் வந்து மக்களுக்கு உபதேசித்துக் கொண்டிருக்கும் இந்த ஞானி கள் கூட்டம், நந்திகணம் என்று அழைக்கப் படுகிறது. இவர்களின் தலைவனாக இருப் பதால், சிவபெருமானுக்கும் நந்தி என்பது பெயராயிற்று.

திருமூலர், பல இடங்களில் சிவபெரு மானை நந்தி என்ற சொல்லாலேயே குறிக் கின்றார். அத்துடன் விநாயகப் பெருமானை நந்தி மகன்என்றும், சிவபெருமானிடம் உபதேசம் பெற்றுக் கொண்டிருக்கும் சனகாதி முனிவர்களை, நந்திகள் நால்வர் என்றும், போற்றுகின்றார் . நந்தி கணத்தினர் அழகிய முகமும், இரண்டு தோள்களும் கொண்ட தேவ வடிவினர். இவர்களுடைய தலைவர் அதிகார நந்தியா வார். இவர் திருக்கயிலை மலை யில் சிவபெருமானின் திரு மாளிகைவாயிலைக் காக் கும் அதிகாரம் பெற்றவர் . பூஜா பத்ததி நூல்கள் கூறும் அஷ்டபரிவாரங்களில், சிவ பெருமானுக்குக் கிழக்கில் நந்தி தேவரும்,மேற்கில் ரிஷப தேவரும் இருப்பதாகக் கூறப் பட்டுள்ளது.

சாதாரண மக்கள் நந்தி, ரிஷபம் என்ற வேறுபாடு களை அறிந்திருக்கவில்லை. ரிஷபதேவரையே நந்தி என அழைக்கின்றனர். இப்படிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறுவது மக்களின் நெடுநாள் வழக்கமாகி விட்டது ரிஷபத்தைக் குறிக்குமிடங்களில் நந்தி என்ற சொல்லையும், நந்தியைக் குறிக்கும் பலஇடங்களில் ரிஷபம் என்ற சொல்லையும் மாற்றிப் மாற்றிப் பயன்படுத் துகின்றனர். இடம் நோக்கிப் பொருள் அறிந்து இவர்களைப் பிரித்து அறிந்து கொள்ள வேண்டி உள்ளது.

எடுத்துக்காட்டாக, ரிஷபவாகனன், ரிஷபத்துவஜன் என்பதை, நந்திவாகனன் என்றும், நந்திக் கொடியோன் என்றும் பல இடங்களில் எழுதியிருக்கிறார்கள். இந்நூ லிலும் வேண்டிய இடங்களில் காளையைக் குறிக்கும்போது நந்தி என்றும், மனித வடி வில் விளங்கும் நந்தியைக் குறிக்கும் போது நந்திதேவர் என்றும், இயன்ற வரை குறித்து விளக்கியுள்ளோம்.

காளைக்கு நந்தி எனும் பெயர் வழங் குவதற்குரிய காரணத்தைச் சிலர் விளக்கி யுள்ளனர். இதன்படி பசுக்குலத்திற்கு நந்த குலம் என்பது பெயர். அது அடுத்தடுத்து வளர்ந்து கொண்டே இருப்பதாலும், செல்வத்தை வழங்குவதாலும் அப்பெயர் பெற்றது. பசுக்களை மேய்ப்பவர்கள் நந்த கோபாலர் என்று அழைக்கப்பட்டனர். நந்தினி என்பது பெண் மாடான பசுவின் பெயர். அதையொட்டி ஆண் மாட்டிற்கு (காளைக்கு) நந்தி என்று பெயராயிற்று. நடை முறையில் காளை வாகனத்தை நந்தி என அழைக்கிறோம். பெருமளவில் சிவாலயங் களில் விளங்கும் காளையை நந்தி தேவர் என்றே அழைக்கின்றனர். ❀

தேவாரத்துள்சிவபெருமானின் வாகனமான காளை

தேவாரத்துள் சிவபெருமானின் வாகனமான காளை மாடானது பசு, விடை, இடபம், எருது, ஏறு, சே, புல்லகம், பெற்றம், பெற்றி என்ற சொற்களால் குறிக்கப்படுகிறது. இதிலும் ஏறு, விடை என்னும் சொற்களே அதிக அளவு பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு அவை வலிய ஆண் இனமான காளைக்குப் பெயராக வழங்கப்பட்டுள்ளன. மேலும் அது ஒன்று என்னும் சொல்லாலும் குறிக்கப்படுகிறது. அது அழகியது, வலியது, போர்த்தினவு கொண்டது. வீரம் விளைப்பது; விளையாடி மகிழ்வது; இளமையும், எழிலும், விரைந்து செல்லும் நலன்களும் உடையது; கழுத்திலும் முதுகிலும்மணிகள் அரசிலை ஆகியவற்றை அணிந்து கால்களில் கட்டப்பட்டுள்ள சலங்கைகள் ஒலிக்க வருவது.

சிவபெருமானின் வாகனமான காளையைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ள மேற்குறித்த சொற்களில் பசு, புல்லகம், பெற்றம் என்பவை மாட்டினத்தின் பெண்பாலான பசுக்களைக் குறிப்பதென்கின்றனர். இப்பெயர்களால் பசுவின் மீது வரும் பசுபதி, பெற்றம் ஏறும் பெருமான் என்ற சொற்களால் பெருமான் குறிக்கப்படுகிறான். சிவபெருமானின் வாகனம் வீரமும் மதர்ப்பும் மிக்க ஆண் மாடே ஆகும். இலக்கிய நோக்கில் அதை பெண் பெயராலும் அழைத்தனர். நடைமுறையிலும் பெண்பால் வாகனங்களில் ஆண்பால் தெய்வங்களை ஏற்றி வைத்து விழாக் கொண்டாடும் வழக்கமில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அம்பிகைக் குரிய வாகனமான மாடும் காளையேயாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபதேவர் (காளை)

சிவபெருமான் உலகைப் படைத்த பின் மக்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்து, அவர்களை நல்வழிப்படுத்தும் சத்யம் என்னும் தருமத்தைப் படைத்தார். சத்யமான தருமம் ரிஷப(காளை)வடிவுடன் வெளிப்பட்டது.

மகாவீரரும், போர்க்களங்களில் வெற்றியை மட்டுமே அடைபவரும், மகாபல சாலியுமான சிவபெருமான் அந்தக் காளையை ஊர்தியாகக் கொண்டதுடன் தனது கொடியில் இலச்சினையாகவும் வைத்துக் கொண்டார். அன்று முதல் அவர் ரிஷபத்துவஜர் என்று அழைக்கப்படுகிறார். அதையே அடையாளச் சின்னமாகவும் கொண்டார். அதனால் "ரிஷப லாஞ்சனன் என்றும் அழைக்கப்படுகிறார். சிவபெருமானின் வாகனமாக விளங்கும் அந்தக் காளையிலிருந்து பல காளைகள் தோன்றி உலகெங்கும் பரவின.

அந்தக் காளைகள் உறுதிமிக்க உடல் கொண்டதாகவும்,அஞ்சா நெஞ்சம் கொண்டவைகளாகவும், போர்த்தினவு மிக்கவைகளாகவும் விளங்கின.

அவை உறுதி மிக்க நான்கு கால்களையும்,பருத்த உடலையும் கூரிய இரண்டு கொம்புகளையும் நீண்ட வாலையும் அதன் நுனியில் சாமரம் போல் அடர்ந்த மயிராலான குஞ்சத்தையும்,விடைத்து நிற்கும் காதுகளையும் கொண்டிருந்தன. அவற்றின் முதுகின் மீது பருத்த திமில் இருந்தது. செவ்வரி ஓடிய நீலநிறக் கண்களும், கருமையான குளம்புகளும் கொண்ட அந்தக் காளைகள் தூய வெண்ணிறத்துடன் பிரகாசமாக இருந்தன.

தேவாரத்துள், அனேக இடங்களில், சிவபெருமானின் வாகனமான ரிஷபம், சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது. அதன் வடிவம் வெள்ளிப் பனிமலை போல் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

தருமத்தின் வடிவமான காளை அவர் முன்னே அமர்ந்து அவரையே தியானித்துக் கொண்டிருக்கிறது. அதையொட்டியே சிவாலயங்களில் கருவறைக்கு நேர் எதிரில் அமர்ந்திருக்கும் கோலத்தில் அதை எழுந்தருளுவித்து வழிபடுகின்றனர்.

மேலும்,அந்த ரிஷபம் வாயில்கள், மதில்மீதும் கோபுரமூலைகள், விமானங்கள் ஆகியவற் றிலும் வைக்கப்பட்டிருக்கின்றது.

சிவபெருமானை வணங்கச் செல்லும் அன்பர்கள் முதலில் அவருக்கு முன்பாகப் படுத்திருக்கும் காளையை வணங்கி அதனிடம் உத்தரவு பெற்றுக் கொள்வர். சிவபெருமானை வலம் வந்த பின், காளையின் பின்புறம் நின்று அதன் இரண்டு கொம்புகளின் இடைவெளி வழியாகச் சிவலிங்கத்தைக் கண்டு வணங்குவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபம் வெண்மையான வலம்புரிச் சங்கை நடுநாயகமாகக் கொண்ட மணி களால் ஆன மாலைகளை அணிந்துள்ளது. அதிலுள்ள சங்கிற்கு மகரமுகம் கொண்ட பூண் அணிவிக்கப்பட்டிருக்கின்றது. காளை யின்முதுகில் பொன்சரிகைகளால் பூவேலை கள் செய்யப்பட்ட பட்டுத்துணி இட்டு, அதன் மீது புலித்தோல் விரிக்கப்பட்டிருக் கிறது. கால்களில் பொற்சதங்கைகளும், கொம்புகளில் இரத்தினங்கள் இழைத்த குப்பிகளும், காதுகளில் வெண்சாமரங் களும், நெற்றியில் அகன்ற முகபடாமும் அலங்கரிக்கின்றன.

பெரும்பாலும் இவரது திருவுருவம் கல்லால் சமைக்கப்படுகிறது. பெரிய தலங் களில் கல் நந்திகளின் வரிசையில் செம்பு அல்லது பித்தளையால் செய்யப்பட்ட வடிவமும் இடம் பெற்றுள்ளது.

ரிஷபர் மகா சிவயோகி, சதா சிவபெரு மானைச் சிந்தித்துக் கொண்டு அவரையே தியானித்துக் கொண்டிருப்பவர். அவரது மூச்சுக்காற்று சிவலிங்கத்தில் பட்டு மீண்டும் அவரிடமே வருகிறது என்று கூறுகின்றனர். அதற்கு இடையூறு செய்யாதிருக்கவே நந்திக்கும் சிவலிங்கத்திற்கும் நடுவில் போகக் கூடாது என்கின்றனர். ❀

ஏறான காளைப்பிரான்

ஏர் என்பது பயிர்த் தொழிலுக்காக நிலத்தைப் பண்படுத்தும் கருவி. ஏறு என்பது அத்தொழிலில் ஏரை இழுக்கப் பயன்படும் காளையைக் குறிக்கும் சொல். திருமுறைகளிலும் தமிழ் இலக்கியங்களிலும் காளையானது ஏறு என்னும் சொல்லாலேயே அழைக்கப்படுகிறது. சிவபெருமான் ஏற்றுக்கொடியான். ஏறூர்ந்த செல்வன், ஏறதேறும் இறைவன், எறுதேறி ஏழையுடன் வருவோன் என்று திரும்பத் திரும்ப ஏற்றின் பெயரால் அழைக்கப்படுகிறான். மணிவாசகர், ஏறதேறும் பிரான், ஏற்றுயர் கொடி உடையான் என்று பெருமானைப் போற்றுகின்றார்.

ஏறான இடபம் சிவபெருமானை வழிபட்ட தலம் ஏறனூர் என்று அழைக் கப் படுகிறது. ஏற்றினை உடையான் ஊரே ஏற்றானூர் ஆனதென்பர். சுந்தரர் தேவாரத் தைக் கொண்டு இத்தலத்தை வைப்புத்தல வரிசையில் வைத்துப் போற்றுகின்றனர். கேரளாவிலுள்ள ஏட்டுமானூர் என்னும் தலமே சுந்தரால் போற்றப்படும் ஏற்றானூர் என்று அறிஞர்கள் குறித்துள்ளனர். ஆதியில் ஏற்றுமானூர் என்று அழைக்கப்பட்ட தலம் இந்நாளில் எட்டுமானூர் என்று அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

இடபம் பூசித்த தலம் இடவை என வழங்குகிறது. இதுவும் வைப்புத்தலமாகும். அறிஞர்கள் இடைமருதூரையே இடவை என்கின்றனர். ❀

ரிஷபர் அருவமாக விளங்கும் தலம் பிரபஞ்சத்தின் குறியீடாக விளங்கும் ஆவுடையார் கோயிலின் கருவறையில் சிவபெருமான் அருவவடிவில் ஆன்ம ஜோதீசுவராகப் பிரகா சித்தவாறு அருள் புரிகின்றார். அவருக்குரிய இடபதேவரும் அங்கு அருவ வடிவில் விளங் குவதால் அவரை நமது கண்களால் காணமுடிவதில்லை. இத்தலத்தில் கொடிமரம் இல்லை. விழாவின் தொடக்கத்தில் சிவலிங்கம், பிரணவம், இடபம் ஆகிய மூன்று சின்னங்கள் பொறித்த கொடிகளையே இராஜகோபுரத்தின் உச்சியில் பொறுத்திப் பறக்கவிடுகின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடபேச்சுரங்கள்

சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட தருமதேவதை அவருடைய விருப்பத்தின் படி, காளை வடிவுடன் வெளிப்பட்டு அவருக்கு வாகனமானது. அந்தக் காளை பூமியில் வந்து மகேசனைப் பூசிக்க விரும்பியது.

அதை அறிந்த சிவபெருமான் அதற்கு விடை கொடுத்து அனுப்பினார்.அது மண் மேல் வந்து தவஆற்றலால் சிவாலயங்களை அமைத்தும், தனது பெயரால் தீர்த்தங்களை உருவாக்கியும் சிவபூசை செய்து மகிழ்ந் தது. சிவபெருமான் அதற்கு அருள் புரிந்ததுடன், அதன் பெயரால் காளையப்பர், ரிஷப நாதர், ரிஷபேசுவரர் என்னும் பெயர்களையும் தரித்துக்கொண்டார். காளை (இடபம்) வழிபட்ட தலங்கள் இடபேச்சரங்கள் என்று அழைக்கப்பட்டன.

"சே" என்பதும் காளைக்குரிய பெயராகும் அப்பெயரால் சேவூர் என்னும் தலமும் அமைந்துள்ளது. இனி, இடபம் வழிபட்ட இடபேச்சரங்கள் சிலவற்றை இங்கே அறிந்து மகிழலாம்.

1. செங்கம் இடபேசுவரம்.

திருவண்ணாமலைக்கு மேற்கே 35 கி.மீ. தொலைவில், கிழக்கு மலைத் தொடரின் அடிவாரத்தில் செங்கம் என்னும் நகரம் உள்ளது. இம்மலைத் தொடரில் உற்பத்தியாகும் சேயாறு இவ்வூரை ஒட்டி ஓடுகிறது. ஏறத்தாழ 3 ஏக்கர் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள இந்த ஆலயம் கல்வெட்டுக்களில் இடபேச்சுரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. மூலவர் ரிஷப புரீசுவரர்,அம்பிகை அனுபாம்பிகை. சுவாமியும் அம்பிகையும் ஒரே வரிசையில் கிழக்கு நோக்கியுள்ளனர். இருவர் சந்நிதிகளுக்கும் இடையே முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இரண்டு கால பூசையுடன் பெருந்திருவிழாக்களும் நடத்தப் படுகின்றன.

2. மேல்சேவூர் இடபேச்சுரம்

செஞ்சிக்குத் தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் மேல்சேவூர் உள்ளது. இதன் புராணப் பெயர் ரிஷபாபுரி தமிழில் விடையூர் என்று வழங்குகிறது. வராகநதிக் கரையில் உள்ள இத்தலம், வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. இறைவன்: இடப புரீசர், அம்பிகை மங்காளம்பிகை.

காஞ்சிமாநகர் இடபேச்சரம்

தர்ம தேவதை இடப வடிவம் கொண்டு பூசித்த சிவாலயம் இடபேச்சுரம் என்னும் பெயரில் காஞ்சிபுரத்தில் உள்ளது. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்துள் ரிஷி கோபுரத்திற்கு அருகில் (இன்றையஅலுவலகத்திற்குப் பின்புறம்)மேற்கு நோக்கியவாறு உள்ளது. இந்தச் சிறிய ஆலயத்துள் பெரிய லிங்கத்தின் உருத்திரபாகம் மட்டும் நிலைப் படுத்தப்பட்டுள்ளது.

பின்சுவரில் உருத்திரரும் உருத்திராணியும்உள்ளனர். இவர்கள் காளாமுகர்க



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ளால் வணங்கப்பட்ட மூர்த்தங்களாவர். முன்னாளில் இத்திருவுருவங்கள் திருக்கச்சி மயானத்து ஆலயத்தில் இருந்தது என்றும், அதைப் புதுப்பித்தபோது அங்கிருந்து பெயர்த்து வந்து இங்கே நிலைப்படுத்தி உள்ளனர் என்றும் கூறுகின்றனர்.

சேவூர் மேவிய மாட்டீசர்

அவிநாசிக்கு வடக்கே 8 கி.மீ. தொலைவில் சேவூர் உள்ளது. இப்பெருமானிடம் சுந்தரர், **'மாட்டூர் அறவா மறவாது உன்னைப் பாடப் பணியாயே'** என்று கேட்கிறார்.

கல்வெட்டுக்களில் இக்கோயில் கபாலீச்சரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்நாளில் இக்கோயில் பெருமான் வாலீசுவரர் என்று அழைக்கப்படுகிறார். வாலி வழிபடும் ஐதீகச் சிற்பம் ஒன்று இக்கோயிலில் உள்ளது. அம்பிகை அறம் வளர்த்த நாயகி. இது தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது.

"சே" என்ற சொல் மாட்டைக் குறிக்கிறது. தேவாரத்துள் சிவபெருமான் காளை வாகனத்தில் வருவதை **சேவின் மேல் வரு செல்வன்** என்றும், **சேவினை ஆட்சி கொண்டார்,** என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ஆண் கன்றைச் சேங்கன்று எனஅழைக்கின்றனர். தர்மதேவதை காளை மாடு வடிவில் வழிபட்ட தலமாதலின் இத்தலம் மாட்டூர் என்று அழைக்கப்பட்டது. இந்நாளில் சேவூர் என அழைக்கப்படுகிறது. ❀

விடை(காளை) வழிபட்ட விஜயமங்கை

இடபதேவர் வழிபட்டுப் பேறுபெற்ற சில தலங்கள் அவர் பெயராலன்றி வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

காவிரி தென்கரைத் தலமான **கோவிந்த புத்தூர்** காளை வழிபட்டுப் பேறுபெற்ற தலமாகும். திருநாவுக்கரசர், இத்தலத்தில் தருமதேவதை வெள்விடை வடிவில் நின்று வழிபட்டு சிவன் அருள்பெற்றதை,

கொள்ளிடக்கரையில் கோவந்தபுத்தூரில்
வெள்விடைக்கு அருள் செய்விஜயமங்கை
(உருத்திரன்) என்றும், அதை வாகனமாக ஏற்று, அதன்மேல் பூதங்கள் சூழப் பொலிந்து வந்ததை,

'ஆதி நாதன் அடல் விடைமேல் அமர்
பூதநாதன் (விஜயமங்கை உள்ளான்)'

என்றும்,காளையைக் கொடியாகக் கொண்டதைக்

'கோல்லை ஏற்றுக் கொடியான்'



என்றும் அருளிச் செய்துள்ளார். இந்தப் பதிகத்தில் இடபம் வழிபட்டது, அவருக்கு வாகனமாக விளங்குவது, கொடியில் சின்னமாக இருப்பது ஆகிய மூன்று நிலைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தரும், இத் தலத்தைப் பாடிப் பரவியுள்ளார். இறைவன் கங்கா ஜடேசுவரர்;அம்பிகை மங்களாம்பிகை. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடபாரூடர்
(காளை மேல் அமர்ந்து வரும் கண்ணுதலோன்)

சிவபெருமான் உமையவளோடு விடையின் மேல் அமர்ந்து பவனி வரும் கோலம் இடபாரூடர் என்றழைக்கப் படுகிறது. பெருமான் அடியவர்களுக்கு அருள்புரிய வரும் போது அழிவற்றதாக விளங்கும் அடல் விடையான காளையின் மீது அவன் உமையோடு வருகின்றான். இக்கோலத் தில் அழகிய அணிமணிகள் பூண்டு மிடுக்குடன் நடக்கும் இடபத்தை யும், அதன்மீது உமையுடன் அமர்ந்திருக்கும் பெருமா னையும் காண்கிறோம்.

அனைத்துச் சிவாலயங்களின் முகப் பிலும் இடபாரூடர் வடிவம் அழகிய சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இது மங்கல வடிவம். அருள்புரியவரும் வடிவம் என்பதால், திருமண அழைப்பிதழ் கள் முதலான மங்கல அழைப் பிதழ் களின் மேல்பகுதியிலும் இது பதிக் கப்படுகிறது.

திருமுறைகளில், சிவபெருமான் உமையுடன் விடைமேல் வரும் காட்சி நூற்றுக்கணக்கான இடங்களில் குறிக்கப் பட்டுள்ளது.

"அலங்கல் விடைமேல் வருவார் ஆசை தீரக் கொடுப்பார்" என வரும் தேவாரத் தொடர்கள் இதனை விளக்குகின்றன.

சேக்கிழார் பெரியபுராணத்தில் அடிய வர்களுக்கு அவர் காட்சிதர வந்தபோதெல்லாம் காளைமீது உமா தேவியுடன் வந்ததாகவே கூறியுள் ளது சிந்திக்கத்தக்கதாகும்.

திருநீலகண்டருக்கு ரிஷபாரூ டராகக் காட்சி தந்தமையினை,

துன்னிய விசுன் ஊடு துணையுடன்
விடைமேற் கண்டார்

எனவும் இயற்பகை நாயனார் புராணத்தில்,

பொன்திகழ் குன்று வெள்ளிப்பொருப்பின்மேற்
பொலிந்த தென்னன்தன்துணையுடனே வானில்
தலைவனை விடைமேற்கண்டார்

எனவும், இளையான்குடிமாற நாயனார் புராணத்தில்

ஏலவார் குழலாள் தன்னொடு
இடப வாகனனாய்த் தோன்றி

எனவும், மானக்கஞ்சாற நாயனார் புராணத் தில், **விடைமேற்கொண்டு நின்றவர்முன்என்றும்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரிவாட்டாய நாயனார் புராணத்தில்

என்றவர்போற்றிசெய்ய இடப வாகனராய்த்தோன்றி

எனவும், ஆனாய நாயனார் வரலாற்றில்

ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடைய தவவல்லியுடன்
கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாளும் சடைதாழ

எனவும், திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்துள்

தேனிறைந்த மலர் இதழித் திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும் வெளிநின்றார்

எனவும், சண்டேசர் வரலாற்றில்

செறிந்த சடைநீள் முடியாரும்
தேவி யொடும் விடையேறி

எனவும், சம்பந்தர் புராணத்துள்

பொன்மலை வல்லியும் தாமும்
பொருவிடைமேல் எழுந்தருளிச்
சென்னிஇளம் பிறை திகழச்
செழும்பொய்கை மருங்கணைந்தார்

எனவும், சாக்கிய நாயனார் புராணத்தில்

தொண்டர் எதிர் நெடும் விசும்பில்துணைவியொடும்
தோன்றினார்மழவிடைமேல் எழுந்தருளி
வந்ததொரு செயலாலே

எனவும், குறித்துக் காட்டியுள்ள சேக்கிழார் சிறுத்தொண்ட நாய னார் புராணத்துள் உமை யம்மையோடு கந்தக் கடவுளுடன் சோமாஸ் கந்த மூர்த்தமாக விடைமேல் காட்சி தந்த மையினை,

"மலைபயந்த தையலொடும் சரவணத்துத்
தனயரொடும் தாம் அணைவார்
தனிவெள் விடைமேல் நெடுவிசும்பில்தலைவர்"

என வருந்தொடர்களால் குறித்துள்ளார்.

இரண்டாம் ராஜராஜன் தான் புதிதாகக் கட்டிய தாராசுரம் ஐராவதே சுவரர் ஆலயத் தில் ஸ்ரீ விமானத்தின் அடிச்சுவரில் வரிசை யாக அறுபத்து மூவர் வரலாற்றுச் சிற்பத் தொடரை அமைத்துள்ளான். பெரிய புரா ணத்தை அடியொற்றி அமைக்கப் பட்டுள்ள இச்சிற்பத் தொகுதியில் நாயன்மார் களுக் குச் சிவபெருமான் காட்சிதரும் இடபாரு டக் கோலம் சிறப்புடன் அமைக்கப்பட் டுள்ளது.



மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் உள்ள கோபுரங்களில் எழுபதுக்கும் மேற் பட்ட இடங்களில் பெரிய வடிவிலான இடபாரூடர் சிற்பங்கள் அமைந்துள்ளன.

பெருந்திருவிழாவில் ஐந்தாம் நாள் இரவு சிவபெருமான் இடபவாகனத்தில் பவனி வந்து காட்சி அளிக்கின்றார்.

இடபாரூடராகப் பவனிவரும் பெரு மானை சில ஆலயங்களில் கற்திருமேனிய ராகவும் அமைத்துள்ளனர். நெல்லை மாவட் டத்தில் பாபவிநாசம், பாபவிநாசர் ஆலயம், திருக் குற்றாலம் குற்றால நாதர் கோயில், புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர் ணம், கோகர்ணேசுவரர் ஆலயம் முதலிய வற்றில் மூன்று மீட்டர் உயரமுள்ள கல் திருமேனியாக இடபாரூடர் அமைக்கப் பட்டுள்ளார். இவருக்கு நாட்பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இதில் பெரிய இடபத்தின் மீது சிவ னும் உமையும் வீற்றிருக்க, அவர்களைச் சுற்றி பிரபா வளி யும் அமைக்கப்பட்டுள்ளது. சில தலங்க ளில் இவர்களுக்கு நீண்ட காம்புடன் கூடிய குடையைப் பிடிக்கும் பூதத்தையும் அமைத் துள்ளனர். விடையின் மேல் வரும் சிவ பெரு மானின் திருக்கோலம் அன்பர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சமூர்த்திகள் பவனிவரும் பஞ்ச ரிஷபங்கள்

சிவாலயங்களில் நடைபெறும் திரு விழாக்களில் சிவபெருமானும் அவரது பரி வாரங்களும் பல்வேறு வாகனங்களில் பவனி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிக் கின்றனர். குறிப்பாக, பஞ்சமூர்த்தி தரிசனம் என்னும் ஐந்திருமேனிகள் காட்சியில் விநாயகர் பெருச்சாளி மீதும், முருகன் மயில் மீதும், சிவன், அம்பிகை, சண்டேசுவரர் ஆகிய மூவரும் தனித்தனியே ரிஷப வாகனங் களிலும் பவனி வருகின்றனர்.

சிவபெருமான் ஏறி வரும் ரிஷபத்திற்கு மகாநந்தி அல்லது மகாரிஷபம் என்பது பெயர். அழிவற்றதாகிய தர்மமே இங்கு வெள்விடையாக இருக்கிறது. அதனால், அது தருமநந்தி (தருமவெள்விடை)என்று அழைக் கப்படுகிறது. வேதமே ரிஷபராக இருப்ப தாகவும் கூறுவர்.

அம்பிகை ஏறி வரும் இடபத்திற்குச் சோம நந்தி என்பது பெயர். பெரிய முனி வராக விளங்கித் தவம் செய்து மேன்மை பெற்ற அரசன் ஒருவன், பின்னர் சாபத்தால் புலியாக மாறிக் கயிலைமலைச் சாரலில் திரிந்து வந்தான்.கேதாரத்தில் அம்பிகை தவம் செய்த போது, அப்புலி அம்பிகையின் தவத்திற்குக் காவலாக இருந்தது. சிவ பெருமான் அம்பிகைக்குத் தரிசனம் அளித்து அருள்புரிந்த போது,அம்பிகை அந்தப் புலிக்கும் அருள்புரியும்படி வேண்டினாள். அவளது வேண்டுகோளை ஏற்றுச் சிவபெரு மான் அந்தப் புலிக்கு இடப வடிவம் அளித்துத் தனது இடப கணத்துள் ஒன்றாக் கினார். அந்த இடபம் அம்பிகைக்கு வாகன மானது. அதற்குச் சோமநந்தி என்பது பெய ராகும்.

சிவாலயங்களில், அம்பிகையின் சந்நி திக்கு முன்னிருப்பதும், விழாவில் அம்பி கையைத் தாங்கி வலம் வருவதும் அந்தச் சோமநந்தியேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகனைக் குமரனடியார்கள் சிவ சுப்பிரமணியனாகப் போற்றுகின்றனர். அவர் சிவசுப்பிரமணியனாகவும் விளங்கும் போது இடப வாகனத்தில் காட்சியளிக்கிறார். சிக்கில் சிங்காரவேலர் ஆலயத்தில் முருகன் வெள்ளி இடபத்தில் பவனி வருவதைக் காண்கிறோம். மயில் வாகனமாக விளங்கும் சூரனே இடப வாகனத்தின் பெருமைகளை உணர்ந்து சிவனருள் பெற்று இடபவடிவம் கொண்டு முருகனைத் தாங்குகின்றான் என்கின்றனர். இதனை மயூர ரிஷபம் எனவும் அழைப்பர். (மயிலக் காளை என்பர்)

சிதம்பரத்தில் நடைபெறும், ஆனித் திருமஞ்சனம், மார்கழித் திருவாதிரைப் பெருந்திருவிழாக்களில் சிவபெருமான் கயிலாச வாகனத்தில் பவனி வரும் போது அவருடன் முருகன் இடப வாகனத்தில் பவனி வருகிறார்.

சிவனது அணுக்கத் தொண்டராகவும், தொண்டர்களுக்கு நாயகனாகவும் திகழ்பவர் சண்டீசுவரர். அவரும் சிவனைப் போலவே இடப வாகனத்தில் பவனி வருகிறார். சண்டீசர் பவனி வரும் நந்திக்குச் சண்ட நந்தி என்பது பெயர். இந்த இடபம் சண்ட பதவியில் இருப்பதால் இப்பெயர் பெற்றது.

விநாயகர் ஆலயங்களில் நடை பெறும் பெருந்திருவிழாவில் வெள்ளி இடப வாகனத்தில் விநாயகர் பவனி வருகின்றார். இதை பூத நந்தி என்றும் கூறுவர். பிள்ளையார் பட்டியில் நடைபெறும் திருவிழாவில் விநாயகர் வெள்ளி இடப வாகனத்தில் பவனி வருகிறார். மயிலாடுதுறையிலும் பெருந் திருவிழாவில் வெள்ளி ரிஷபத்தில் விநாயகர் பவனி வருகிறார்.

இவ்வகையில் விநாயகர், முருகன் உட்பட பஞ்சமூர்த்திகளும் இடப வாகனத்தில் பவனி வருகின்றனர். முருகன் மட்டுமின்றி அவனது தேவியரும் இடபவாகனத்தில் பவனி வருகின்றனர். இலங்கை, யாழ்ப்பாணத்து, நல்லூர் முருகன் ஆலயத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவில் வெற்றி வேலாயுத சுவாமியான முருகன் இடப வாகனத்தில் வலம் வரும் போது அவனது இருபெரும் தேவியரான வள்ளி, தெய்வயானை தேவியரும் தனித்தனி ரிஷப வாகனத்தில் பவனி வருகின்றனர். மூவரையும் ஒரு சேர சகோபுரத்தில் எழுந்தருளச் செய்து உலாவரச் செய்கின்றனர்

தொண்டனுக்கு அதிபதினான சண்டீசர் ரிஷபத்தில் பவனி வருவதைப் போலவே பக்த சிகாமணியான மணிவாசகப் பெருமானும் ரிஷபத்தில் பவனி வருகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பெருந்துறையில் நடைபெறும் சகோபுரக் காட்சியில் மணிவாசகப் பெருமான் வெள்ளி ரிஷபத்தில் வருவது காணற்கரிய காட்சியாகத் திகழ்கிறது. சிந்தையே சிவமாகி நிற்கும் மணிவாசகப் பெருமானை சிவமாகவே போற்றி ரிஷபவாகனத்தில் வலம் வரச் செய்து விழா கொண்டாடுகின்றனர்.

சிவபெருமானும் அவரது பரிவாரங்கள் மட்டுமே ரிஷபவாகனங்களில் வலம் வந்ததைப் பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன.

என்றாலும், சிவபெருமானின் அம்சமாகத் தோன்றி வடதிசைக்கு அதிபதி யாகத் திகழும் ஈசான மூர்த்தியும், அஷ்டபைரவர்களுள் ஒருவனான ருரு பைரவரும் இடப வாகனத்தில் வந்து அருள்புரிகின்றனர்.

இடபம், அஞ்சாமை, வீரம்,அளவில்லா ஆற்றல், தூய்மை முதலியவற்றின் இருப்பிடமாக இருப்பதால், தென்னகத் தெய்வங்கள் அதைத் தமது வாகனமாகக் கொண்டுள்ளன.

ரிஷபம் தருமத்தின் வடிவம் என்பதாலும் தெய்வங்கள் யாவும் தருமத்தைக் காக்கின்றன என்ற கொள்கையாலும் மாரியம்மன், ஐயனார் முதலிய தெய்வங்களையும் தருமக்காளை வாகனத்தில் வலம் வரச் செய்யும் வழக்கம் வந்துவிட்டது என்பது அறிஞர்கள் கருத்தாகும்.

இடப வாகனத்தில் ஏலவார்குழலி காஞ்சிபுரம்

நாகை, தஞ்சை மாவட்டத்தில் மாரியம்மன் ரிஷப வாகனத்தில் பவனி வருவதைக் காணலாம். பெரிய மாரியம்மன் ஆலயங்களில் வெள்ளியாலான ரிஷபவாகனங்களும் உள்ளன. காளை வாகனங்கள் யாவும் தோற்றத்தில் ஒன்றாக இருந்தாலும், அவை இடத்திற்கேற்பப் பெயரையும், தன்மைகளையும் கொண்டவைகளாகும். ❀

விடைப்பாகன்

சிவபெருமானுக்குரிய பெயர்களில் ஒன்று விடைப்பாகன் என்பது. பாகன் என்பதற்குச் செலுத்துவன், அடக்கி ஆள்பவன் என்பது பொருள். எடுத்துக்காட்டாக வலிய விலங்கான யானையைச் செலுத்துபவன் யானைப்பாகன் எனப்படுகிறான். அதுபோலவே ஆற்றல், அடல் விடையான தருமக் காளையை அடக்கி, அதன்மீது பவனிவரும் சிவபெருமான் விடைப்பாகன் எனப்படுகின்றான். சக்தியின் வடிவைத் தம்முள் அடக்கிக் கொண்டிருப்பதால் உமைபாகன் என்றும், மாதொருபாகன் என்றும் அழைக்கப்படுவதுபோல், திருமுறைகளில், பல இடங்களில் சிவபெருமான் விடைப்பாகன் என்று போற்றப்படுகிறான். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகோபுரக் காட்சியில் வெற்றி வேலாயுதசுவாமியும், வள்ளி, தெய்வயானையரும் தனித்தனியே ரிஷப வாகனத்தில் வலம் வரும் காட்சி. இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோயில்.



சகோபுரக் காட்சியில் இடப வாகன சேவை

கோபுர தரிசனம் பாவ விமோசனம் என்பது பழமொழி. இதற்குக் கோயில்களில் வாயிலின் மீதுள்ள கோபுரங்களைத் தரிசிப்பது புண்ணியம் என்பது பொதுப் பொருள். இருந்தாலும், அத்துடன் பெருந் திருவிழாவில் கோபுரத்தின் வாயிலுக்கு நடுவில் நிற்கும் பெருமானுக்கு மலர் தூவித் தீபாராதனை செய்யும் போது தரிசிப்பது புண்ணியம் என்பதும், பொருளாகும். சிவபெருமான் வாகனத்துடன் பெரிய வாயிலின் வழியாக வெளிப்படும் போதும், உள்ளே செல்லும் போதும் காண்பது பெரும் புண்ணியம் தருவதாகும். இவை இரண்டுமே கோபுர தரிசனம் எனப்படும்.

கோபுர தரிசனத்தை வீதியில் உள்ளோர் காணும்படிபெருமானைப் பவனிவரும்படிச் செய்வதே சகோபுரக் காட்சியாகும். பனை ஓலைகளையும், சரிகைகளையும் கொண்டு ராஜகோபுரம் போல் படல் ஒன்றைத் தயாரித்து, சக்கரங்களின் மீது அமைக்கப் பட்ட பந்தல் போன்ற அமைப்பின் முன்புறம் அதை அமைக்கின்றனர். இந்தப் பந்தலில் மூன்று அறைகள் அமைக்கப் பட்டு, நடுவில் ரிஷபவாகனத்தில் சிவ பெருமானும், அவருக்கு வலப்புறத்தில் ரிஷபத்தில் அம்பிகையும், வலப்பாகத்தில் மயிலில் முருகனையும் எழுந்தருளச் செய்வர். இது கோபுரத்துடன் சிவபெருமான் வீதியில் பவனி வருவதைக் குறிக்கிற தென்பர்.

திருப்பெருந்துறையில் மணிவாசகர் ரிஷப வாகனத்தில் ஏழாம் திருநாள் இரவில் சகோபுரக் காட்சியில் எழுந்தருளுகின்றார்.ரிஷப வாகனக் காட்சியை சகோபுரத்துடன் இணைத்து விழாக் காணும் மரபு சோழ நாட்டுத் தலங்களில் நெடுங்காலமாக உள்ளது.

ஆலயத்திற்கு வர இயலாதவர்களுக்குப் பெருமான் சகோபுரத்துடன் வீதியில் வந்து காட்சியளிப்பதை இது குறிக்கிற தென்பர்.

இரவில் வண்ண விளக்குகளுடன் வீதிகளில் சகோபுரம் பவனி வருவது காணற்கினிய காட்சியாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரைலோக்கி ரிஷபாரூடர்

(அமர்ந்த இடபத்தின் மீது ஆரோகணித்திருக்கும் உமை மணவாளன்)

சிவபெருமான் உமையுடன் எழுந்தருளியிருக்கும் இடபவாகனம் எப்போதும் நின்ற நிலைலேயே அமைக்கப் படுகிறது. மேலும் அது நடந்து சென்று கொண்டிருக்கிறது என்பதைக் குறிக்க முன் வலது காலைத் தூக்கி அடியெடுத்து வைக்கும் கோலத்தில் அமைக் கப்படுகிறது.

படுத்திருக்கும் கோலத்தில் உள்ள ரிஷபத்தின்மீது சிவபெரு மானை உமையுடன் அமர்ந் திருக்கும் கோலத்தில் அமைக் கும் வழக்கமில்லை. சாளுக்கி யர்எனப்படும் அரசவம்சத்தினர் அமைத்த உமாமகேசுவரர் வடிவங்களில் சிவனும் உமை யும் அமர்ந்திருக்க அவர்கள் சாய்ந்து கொள்ள வசதியாக அவர்களுக்குப் பின்புறம்ரிஷபம் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அவர்களும் படுத் திருக்கும் ரிஷபத்தின்மீது சிவ பார்வதியரை அமைத்ததா தெரியவில்லை. ஆனாலும் அவர்கள் கலைப்பாணியில் சிவ னும் பார்வதியும் அமர்ந்தி ருக் கும் ரிஷபத்தின்மீது வீற்றிருப் பதைக் குறிக்கும் சிற்பம் ஒன்று "திரைலோக்கி" என்னும் ஊரில் உள்ளன. இது சோழர்கள் நுளம்பர்களை வெற்றி கொண்டு அவர்கள் நாட்டிலிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டுவந்து நிலைப்படுத் திய சிற்பம் என்கின்றனர். இது கலையெழில் கொஞ்சும் சிற்பமாகவுள்ளது.

ரிஷபர் படுத்திருக்கின்றார். அணிமணி ஆபரணங்கள் அவரது திருமேனியில் பொலிவுடன் விளங்குகின்றன. முதுகின் மீது அம்பாரி போன்ற அமைப்பு உள்ளது. அதில் உமையும் சிவனும் வீற்றிருக்கின்றனர். அம்பாரியின் பின்புறம் சிவலிங்கம் செதுக்கப்பட்டுள்ளது. அருகில் குரு கிரக பகவானின் திருவுருவம் அமைந்துள்ளது.

இச்சிற்பம் அமைந்துள்ள திரைலோக்கி வரலாற்றுப் புகழ்பெற்ற தலமாகும். இவ்வூரில் உள்ள சுந்தரேசுவரர் ஆலயத்தில்தான் மேற்குறித்த சிற்பம் அமைந்துள்ளது.

திரைலோக்கி திருவிடைமருதூருக்கு வடக்கே உள்ளது கோட்டூர். திரைலோக்கி, துகிலி, திருவிசலூர் முதலியவை அருகருகே உள்ள ஊர்களாகும். கோட்டூரை துகிலிக் கோட்டூர் என அழைக்கின்றனர். கோட்டூரை அடுத்திருப்பதால் திரைலோக்கியை கோடைத்திரைலோக்கி என அழைக்கின்றனர். இவ்வூர்இறைவன்மீதுமாபெரும் சித்தரான **கருவூர்த்தேவர்** திருவிசைப்பா பாடியுள்ளார். அதில் கோடைத் திரைலோக்கிய சுந்தரன் என்று இத்தலத்து இறைவனைக் குறித்துள்ளார்.

கலையழகுமிக்க உமாமகேசுவரர் வடிவுடன் நுளம்பர்காலத்திய நெடிய மன்மதன் இரதி சிற்பமொன்றும் இக்கோயிலில் உள்ளது. இதுவும் அரிய கலைப் படைப்பாகும்.

கைமணிகள் மீது விளங்கும் நந்தி

மணியோசை தெய்வீகம் நிறைந்ததாகும். ஆகம நூல்கள் மணியோசையால் தேவர்கள் கவரப்பட்டுப் பூசைசெய்யும் இடத்திற்கு வருகிறார்கள் என்றும் தீயதேவதைகள் அவ்வொலி யால் துரத்தப்பட்டு ஓடுகிறார்கள் என்றும் கூறுகின்றன. மணியை ஒலிக்காமல் செய்யும் பூசையால் பயன் உண்டாவதில்லை.



பூஜை மணிகளின்மீது இடபத்தின் வடிவம் அமைக்கப்படுகிறது. நந்தி வடிவம் தருமத்தின் வடிவம் மணியோசை தருமத்தின் ஓசையாக இருக்கிறது என்பதைக் குறிக்கவே மணிகள்மீது நந்தி வடிவம் அமைக்கப்பட்டன. மணிக்குச் செய்யும் பூசையானது தருமத்திற்குச் செய்யும் பூசையாகும். மணியோசை காவல் காக்கும் ஓசையாக உள்ளது. காவலின் அடையாளமாக இருப்பதாலும் ரிஷபர் அதன் மீது அமைக்கப்படுகிறார்.

சமாதித் தலங்களில் ரிஷபதேவர்

சமயக் குருமார்கள், சிவஞானிகள், முதலிய சிறப்புக்குரியோர் சிவப்பேறு பெற்ற பின்னர் அவர்கள் உடலைச் சமாதி வைத்து அதன் மீது அரசமரம், சிவலிங்கம், ஆகியவற்றில் ஒன்றை வைக்க வேண்டும் என்பது மரபு. பெரும்பான்மையாக சமாதி மீது சிவலிங்கம் அமைத்து வழிபடும் வழக்கம் உள்ளது. அத்தகையோரின் முதன்மைச் சீடர்கள் சிவப்பேறு பெற்றதும் அவர்கள் உடலைச் சிவலிங்கத்திற்கு நேர் எதிரில் சமாதிப்படுத்தி அதன்மீது நந்தியின் உருவம் அமைக்கப்படும் வழக்கம் சில இடங்களில் உள்ளது. வீரசைவ ஆசாரியர்கள், வேதாந்த குருமார்கள் சமாதிக்கு முன்பாகச் சீடர்களின் சமாதி அமைக்கப்பட்டு, அதன் மீது நந்தி, பலிபீடம் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானின் விவசாயி கோலமும் வெள்ளருது வாகனமும்



காளைமாடு விவசாயிகளின் தோழன். வேளாண்மைப் பணிகளான ஏர் ஓட்டுதல், பரம்படித்தல் (நிலத்தைச் சமன்படுத்துதல்), சுமைகளை ஏற்றிச் செல்லுதல் முதலான அனைத்துப் பணிகளுக்கும் காளை மாடுகளின் துணை தேவையாக இருந்ததால் அது விவசாயிகளின் தோழன் எனப்பட்டது. அறுவடைக்கால விழாவான பொங்கல் பண்டிகையின்போது முதல்நாள் மருதநிலத்தின் அதிதேவதையான இந்திரனுக்கும், இரண்டாம் நாள் ஒளியும் வெப்பமும் தந்து பயிர்களைக் கொழிக்கச் செய்பவனான சூரியனுக்கும், மூன்றாம்நாள் வேளாண்மைப் பணிகளுக்குத் துணைநின்ற மாடுகளுக்கும், நான்காம் நாள் இல்லுறை தெய்வங்களுக்கும் குலதெய்வங்களுக்கும் விழா நடத்தப்படுகிறது.

மாட்டுப் பொங்கல் நாளில் வீடுகளில் வளர்க்கும் மாடுகளுக்கு நீராட்டி மலர் சூட்டி பொங்கல் அளித்து மகிழ்கின்றனர். அத்துடன் சிவாலயங்களில் கருவறைக்கு முன்பாக வீற்றிருக்கும் ரிஷபங்களுக்கும் சிறப்பு விழாக்காகச் செய்கின்றனர். அன்னாபிஷேகத்திற்கு இணையாக உண்பொருளைக் கொண்டும் பழங்களைக் கொண்டும் ரிஷபதேவரை அலங்கரித்து, சிறப்புத் தீபாராதனைகளைச் செய்கின்றனர்.

சோழநாட்டுத் திருக்கோயில்களில் விவசாய வேலைக்குச் செல்லும் பள்ளனாகச் சிவபெருமான்,தேவியுடன் செல்லும் கோலத்தைக் குறிக்கும் செப்புத் திருமேனிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களுடன் மிடுக்கான இடபமும் உள் ளது. பெருமான் தனது வலது கரத்தை காளையின் தலை மீது வைத்திருக்கிறான்.

திருவாரூர், நாகப்பட்டணம், திருவெண்காடு முதலிய தலங்களில் காளையுடன் விவசாயியாக விளங்கும் சிவபெருமானைக் காண்கிறோம். இவற் றில் காணப்படும் சிவபெருமானின் தலையலங்காரம் சிறப்புமிக்கது. சடையை விவசாயி தலைப் பாகைக் கட்டுவது போல் கட்டியுள் ளான். குனிந்து வேலைசெய்யும்போது சந்திரன் விழுந்து விடாதிருக்கக் கடைக்குள் அவனை வைத்துக் கட்டியுள்ளது பார்த்து மகிழத்தக்கதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வடிவங்களைக் காட்சி கொடுத்த நாயகர் என்கின்றனர். காட்சி கொடுத்த நாயகர் வடிவங்கள் விவசாயிகளையும் அவர்தம் காளையையும் போற்றுவதாக அமைந்துள்ளன.

(மாப்பிள்ளை சாமி கோலங்கள் இதனின்று வேறானதாகும் அதைத் தொடர்ந்து வரும் கட்டுரையில் காண்க.)

மணக்கோலப்பிரானும் மாகாளையும்

திருவீழிமிழலை, திருமுல்லைவாயில், திருமழிசை, குடந்தை (காளத்தீசுவரர் ஆலயம்) போன்ற தலங்களில் சிவனும் பார்வதியும் நின்றிருக்கப் பின்னணியில் இடபம் நிற்பதைக் காண்கிறோம். இவற்றில் பெருமானின் வலது கைக்குக் கீழாக ரிஷபம் தனது தலையை வைத்திருக்கிறது. சிவபெருமான் தனது வலது கையை அதன் முதுகில் ஊன்றி உள்ளங்கையை அதன் கொம்புகளுக்கு நடுவே வைத்துள்ளார்.

இக்கோலத்தை மாப்பிள்ளை சுவாமி என்கின்றனர். திருமணம் முடிந்து மணமேடையில், வைக்கப்பட்ட பாலிகைகளை நீரில் விடச்செல்லும் கோலமாக இது உள்ளது. அந்நாளில் தென்னகத்து பாலிகை விடுச்செல்லும் மணச்சடங்குகளில் மணமக்களோடு காளையையும் அழைத்துச் செல்லும் வழக்கம் இருந்ததை யொட்டி இத்திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது என்கின்றனர். இதில் காளைக்குத் தனிச்சிறப்பு அளிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீ கார்த்தியாயினி சமேத ஸ்ரீ கல்யாண சுந்தரேஸ்வரர்
திருவீழிமிழலை

கருவறையில் இடபத்துடன் விளங்கும் பெருமான்

சிவாலயங்களின் கருவறையில் சிவலிங்கத்தை மட்டுமே வைத்து வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. சிறப்பு கருதி சில தலங்களில் உமாமகேசுவரர், சந்திரசேகரர் வடிவங்களை வைத்து வழிபடுகின்றனர். இடபாரூடர், இடபாந்திகள் வடிவங்களை வைத்து வழிபடும் வழக்கம் இல்லை என்றாலும் பழவேற்காட்டில் சிவலிங்கத்திற்குப் பின்புறம் இடபாரூடரும், அவளிவள் நல்லூரில் இடபாந்திகர் வடிவமும் அமைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன.

கோவை மாவட்டத்துக் களத்தூர் ஆலயத்திலுள்ள அம்பிகை சந்நிதியில் அம்பிகை காளையுடன் காணப்படுகிறாள். இந்தக் காளை வடிவத்தைப் பசு என்றும் சிலர் கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷப வாகனங்கள்

சிவபெருமானும் அவரது பரிவாரங்களும், சிவாலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பவனி வருவதற்காக மரத்தால் செய்து வண்ணம் தீட்டப்பட்ட காளை (ரிஷப) வாகனங்கள் உள்ளன.

பெரிய கோயில்களில் மரத்தால் செய்து வெள்ளித் தகட்டால் பொதிந்த வெள்ளி ரிஷபவாகனங்கள் உள்ளன இவற்றை வெள்ளி ரிஷபங்கள் என அழைக்கின்றனர். சிவபெருமானுக்குப் பெரிய வெள்ளி ரிஷபமும், அம்பிகைக்கு அதைவிடச் சிறிய ரிஷபமும், சண்டேசருக்குச் சிறிய அளவிலான ரிஷப மும் உள்ளன.

சில தலங்களில் தங்க ரிஷப வாகனங்களும் உள்ளன. வேதம், ஞானம், தருமம் ஆகியவற்றை வெள்ளை நிறத்தால் குறிப்பதால் அவற்றின் வடிவாக விளங்கும் ரிஷபத்தையும் வெள்ளைநிறம்கொண்ட வெள்ளியால் செய்வதே உத்தமமானதென்பது ஆன்றோர்கள் கருத்தாகும். அதை யொட்டி வெள்ளி ரிஷப வாகனக் காட்சியே மிக உயர்ந்ததாகக் கொண்டாடப்படுகிறது. சிவபெருமான் வெள்ளி ரிஷபத்திலும் அம்பிகை தங்க ரிஷபத்திலும் வலம் வரும் காட்சியைச் சில தலங்களில் காணலாம்.



பிரதோஷ காலத்தில் பெருமான் சிறிய ரிஷபத்தில் பவனி வருகிறார். பெரிய தலங்களில் பிரதோஷ ரிஷப வாகனங்கள் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட் டுள்ளன. சென்னை பெசன்ட்நகர் இரத்தின கிரீசர் கோயில், திருவண்ணாமலையார் ஆலயம் போன்ற சில ஆலயங் களில் தங்கத்தாலான பிரதோஷ ரிஷப வாகனங்கள் உள்ளன. திருவண்ணாமலையில் அளவால் பெரிய வெள்ளி, தங்க ரிஷப வாகனங்களும் வண்ணம் தீட்டப்பட்ட ரிஷப வாகனங்களும் உள்ளன.

ரிஷப வாகனங்கள் கலை நயத்துடன் செய்யப்பட்டுள்ளன. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்ச ரிஷபங்கள்

சிவாலயங்களில், கருவறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நோக்கியவாறு ஒவ்வொரு பிராகாரத்திலும் ரிஷப தேவர் வீற்றிருக்கின்றார். இவருக்குப் பின்புறம் பலிபீடம், அமைந்திருக்கிறது. இந்த ரிஷபர்கள் எல்லோரும் ஒரே நேர்க் கோட்டில் அமைத்திருக்கின்றனர்.

பெரிய ஆலயங்களில் ஐந்து பிராகாரங்கள் அமைந்திருப்பதுடன், அவை ஒவ்வொன்றிலும் கருவறைக்கு நேராக ரிஷபமும் பலிபீடமும் அமைந்திருக்கின்றன.

பெரிய ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த பஞ்ச ரிஷபங்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

இந்திர ரிஷபம்

ராஜகோபுரத்திற்கு வெளியே சந்நிதித் தெருவின் நடுவில் பெரியதாக அமைக்கப் பட்டிருக்கும் ரிஷபத்திற்கு இந்திர ரிஷபம் என்பது பெயர். இந்திரன் காளை வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கிப் பேறு பெற்றதைக் குறிக்கும் வகையில், இந்த நந்தி

பிரம்ம ரிஷபம் - காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைக்கப்பட்டுள்ளது. இந்திர போகங்களில் திளைத்திருப்பதைக் குறிக்கும் வகையில் இந்த ரிஷபம் பெரிய அணி மணி அலங்காரங்களுடன் திகழ்கிறது.

பிரம்மரிஷபம் (பிரம்மநந்தி)

அடுத்ததாக, ராஜ கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் அளவால் பெரிய தாகவும், வண்ணங்கள் தீட்டி, வனப்பூட்டப் பட்டதாகவும் இருப்பது பிரம்ம நந்தியாகும். வேதனான பிரம்ம தேவன் காளை வடிவம் கொண்டு பெருமானைச் சுமந்தும் வழிபடும் பேறு பெற்றதைப் பிரம்ம ரிஷபம் குறிக்கிறது. பெரும்பாலும் இது சுதையால் செய்து வண்ணம் தீட்டப்பட்டு, அழகாகக் காட்சியளிக்கிறது. பிரம்மதேவனுக்குப் பூசை இல்லாததைப் போலவே இதற்குப் பூசைகள் செய்யப்படுவதில்லை. இது அலங்கார ரிஷபமாகவே உள்ளது. திரு விடைமருதூர், காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில், கயிலாசநாதர் கோயில், சுசீந்திரம், நெல்லை, இராமேசுவரம் முதலிய பெரிய தலங்களில் பிரம்ம ரிஷபம் சிறப்புடன் உள்ளது.

ஆத்ம ரிஷபம்

மூன்றாவதாக, கொடிமரத்தின் முன்பாக இருக்கும் இடபத்திற்கு ஆத்ம ரிஷபம் என்பது பெயர். பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் (உயிர்கள்) எல்லாவற்றிற்கும் பிரதிநிதியாக இந்த ரிஷபம் உள்ளது. இதுவே பஞ்ச ரிஷபங்களில் முதன்மை பெற்றது. தினப்பூசையிலும், பிரதோஷ காலத்திலும் பூசிக்கப்படுவது.

மால்விடை-விஷ்ணு ரிஷபம்

நான்காவதாக இருப்பது மால்விடை. இது அமைந்துள்ள பதம் சக்தி பதமாகும். திரிபுரதகனத்திற்கு முன்பாக சிவன் தேவர்கள் அளித்த தேரில் ஏறினார். அதில் அவர் கால் வைத்ததுமே அது சடசடத்து வீழ்ந்த தூள்தூளானது. தேவர்கள் தமது

திரிபுர தகனக் காட்சிகளில் சிவபெருமானின் தேரின் பக்கவாட்டில் திருமால் ரிஷபமாக இருத்தல்– திருவதிகை

சக்தியைத் திரட்டிச் செய்த தேர் சிவபெருமானின் திருவடி ஊன்றலுக்குத் தாளாது நொறுங்கித் தூளானதைக் கண்டு பயந்தனர். அப்போது திருமால் இடப வடிவம் கொண்டு விரைந்து சென்றுஅவரைத் தாங்கினார்.

திரிபுர தகனக் காட்சிகளில் சிவபெருமானின் தேரின் பக்கவாட்டில் திருமால் ரிஷபமாக இருக்கக் காணலாம். திருவதிகை தலத்தில் நடைபெறும் திரிபுர தகன ஐதீகத் திருவிழாவில் தேரின் அருகில் இவ்வூரிலுள்ள சரநாராயணன் பெருமாள் திருவுருவம் எழுந்தருளுவிக்கப்பட்டு இவ்வரலாறு நினைவு கூரப்படுகிறது.

திருவாசகத்தில், தடமதில்கள் அவை மூன்றும் தழல் எரித்த அந்நாளில் இடபம் அது ஆகி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாங்கினான் திருமால் காண் சாழலோ, என்று மணி வாசகர் குறித்துள்ளது சிந்திக்கத்தக்கதாகும்.

தருமவிடை

ஐந்தாவதாக, இருப்பது கருவறைக்கு முன்னாக உள்ள தருமநந்தியாகும். தரும தேவதையே இங்கு ரிஷபமாக இருந்து சதா சிவபெருமானைத் தியானித்துக் கொண் டிருக்கிறது என்கின்றனர்.

தருமநந்தியோடு உலோகத்தால் ஆன நந்தியொன்றும் இடம் பெற்றிருக்கும். இது கருவறையின் உள்ளே சிவலிங்கத்தோடு இருக்கும் போகசக்தி அம்மனுக்குரியது என் கின்றனர். குடமுழுக்கு விழாவின்போது போக சக்தி அம்மனை வேள்விச் சாலையில் எழுந்தருளச் செய்வது போலவே இந்த ரிஷபத்தையும் எழுந்தருளச் செய்யும் வழக்கம் இருந்ததாகக் கூறுகின்றனர். (இது பற்றிய மேலும் விவரம் சரியாகத் தெரிய வில்லை)

இந்திர ரிஷபம், நீலநிறமானதாகவும், பிரம்மநந்தி பொன் நிறம் கொண்டதாகவும், ஆன்ம ரிஷபம் (ருத்ர ரிஷபம்) செந்நிறம் கொண்டதாகவும், மால் ரிஷபம் கருநிறம் கொண்டதாகவும், தருமரிஷபம் வெள்ளை நிறம் கொண்டதாகவும் இருக்கிறதென்பர்.

உலோகத்தாலான போக ரிஷபம் போக சக்தியைப் போலவே பச்சைவண்ணம் கொண்டதாகக் கூறப்படுகிறது.

ஆன்ம ரிஷபத்தை ருத்ர ரிஷபம் என்றும் கூறுவர். மகாருத்திரரே இடப வடிவம் கொண்டு இங்கே தியானத்தில் வீற்றிருக்கின்றார் என்றும் கூறுவர் ❀

இடபத்தை உவந்துஅதன் மீது ஏறிவரும் ஈசன்

போற்றத்தக்க சிறப்பு மிக்க யானை-குதிரை, தேர், பல்லக்கு முதலிய வாகனங்கள் இருந்தபோதிலும், சிவபெருமான் காளை வாகனத்தையே மிக விரும்பி அதன்மீது அமர்ந்து பவனி வருகிறான். ஆயிரம் மடங்கு சிறப்புக்களைக் கொண்டதும், ஆயிரம் தந்தங்களை உடையதும் மலை போன்றதுமான ஐராவணம் என்னும் யானை தன்னி டமிருந்த போதிலும், அதன்மீது ஏறாது, ஆன்ஏறான வெண்மைநிறம் கொண்ட காளை மீது பவனி வருகிறான் ஆரூர்த் தியாகேசன் என்கிறார் அப்பர் சுவாமிகள். இதனை,

"ஐராவணம் ஏறி அமரர் நாடாளாதேஆனேறு ஏறி ஆரூர் ஆண்ட அரசு "

என்று வரும் தேவார வரிகளால் அறியலாம். மேலும்,**"பிடிமதவாரணம் பேணும் துரகம் "நிற்கப் பெரிய இடிகுரல் வெள்ஏறுதேறும் இது என்னை கொல்எம்மிறையே"** என்கிறார். இதற்குத் துணையோடு கூடி நிற்கும் பெரிய யானைகளும் பெருங்குதிரைகளும் இருக்க இடி போன்ற வலிய குரல் கொண்டதும் வெள்ளை நிறம் கொண்டதுமான காளை மீது ஏறி வருவதை விரும்புகிறாயே. இதை என்ன சொல்வது என்பது பொருளாகும். இதே கருத்தைத் திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான்

"கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம் உகந்து ஏறியவாறுஏன் எனக்கு இயம்பேடி"

என்று குறிக்கின்றார். இவற்றின் மூலம் தேர், யானை, குதிரை முதலியவை இருந்தாலும் அவற்றை விரும்பாமல் அழகிய வலிய காளை மீது அம்பிகையுடன் ஏறி பவனி வருவதையே பெருமான் விரும்புகிறான் என்பதை அறிய முடிகிறது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசந்நிதியிலிருந்து சற்று விலகியிருக்கும் இடபதேவர்கள்

சிவாலயங்களில் கருவறையில் வீற்றிருக்கும் சிவலிங்க மூர்த்தியைத் தியானித்தவாறு கருவறைக்கு நேராக இடபதேவர் வீற்றிருக்கின்றார். சிவலிங்கம், இடபதேவர், பலிபீடம், கொடிமரம், தலைமைக் கோபுர வாயில் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில் அமைந்திருக்க வேண்டும். சில தலங்களில் இடபதேவர் சிவலிங்கத்திற்கு நேராக இல்லாமல் சற்று விலகி வீற்றிருக்கின்றார். இவருக்கு ஏற்பப் பலிபீடங்களும் கொடிமரமும் கூட விலகியுள்ளன. திருப்புன்கூர், திருப்பட்டீச்சரம், கீழ்வேளூர் முதலிய சில தலங்களில் இடபதேவர் விலகி வீற்றிருக்கின்றார். இவர் இப்படியிருப்பதற்கான காரணத்தைத் தலபுராணங்கள் விவரிக்கின்றன.

திருப்புன்கூரில் விலகியிருக்கும் இடபதேவர்

ஆதனூர் என்னும் தலத்தில் பஞ்சமர் குலத்தில் தோன்றியவர் நந்தனார். இயல்பிலேயே சிவபக்தி வாய்ந்தவராக இருந்த அவர் திருத்தலங்கள் தோறும் சென்று தன்னால் இயன்ற பணிகளைச் செய்து வந்தார். கோயில்களில் இசைக்கப்படும் மேளம், பறை முதலிய வற்றிற்குத் தேவையான தோல், வார்கள் போன்ற வற்றைக் கொடுப்பதும் திருமேனி மேற்பூச்சுக்குக் கோரோசனைக் கொடுப்பதும் அவரது வழக்கம். அந்நாளில் பஞ்சமர்களுக்குக் கோயிலுக்குள் செல்ல அனுமதி யில்லாததால் அவர் தெரு முனை யில் இருந்தே பெருமானைத் தரிசிப்பார். ஒரு சமயம் திருப்புன் கூரின்பெருமைகளைக் கேள் வியுற்ற நந்தனார் அங்கு வீற்றிருக்கும் சிவலோக நாதனை வழிபட விரும்பி அங்கு சென்றார். இத்தலத்தில் படுத்திருக்கும் ரிஷபம் பெரியதாக இருந்ததால் அது கருவறையில் உள்ள பெருமானை அவர் தரிசிக்க வொட்டாமல் மறைத்துத் தடுத்திருந்தது.

நந்தனார் தம்மைத் தரிசிக்க முடியாமல் வருந்துவதைவதைக் கண்ட சிவபெருமான்,



In Public domain. Digitization Muthulakshmi Research Academy



"ரிஷபத் திடம் "சற்றே விலகியிரும் பிள்ளாய்" "என்றார். அதைக்கேட்ட நந்திதேவர் சற்று வடக்கில் நகர்ந்து கொண்டார். நந்தனார் பெருமானைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந் தார். அவருக்காக விலகிய ரிஷபம் அக் கோலத்திலேயே இன்றும் உள்ளது.

நந்தனார் சிலகாலம் அங்கே தங்கி யிருந்து அத்தலத்திலுள்ள திருக்குளத்தைத் திருத்தினார். அப்பணியில் அவருக்குத் துணை நின்று உதவிய பிள்ளையார் குளம் வெட்டிய பிள்ளையார் என்னும் பெயரில் அக்குளத்தின் கரையில் உள்ளார். பின்னா ளில் சிதம்பரம் சென்ற நந்தனார் நடராசப் பெருமானுடன் இரண்டறக் கலந்தார். அறுபத்துமூன்று நாயன்மார்கள் வரிசை யில் நந்தனார்" திருநாளைப் போவார்," என்னும் பெயருடன் இடம் பெற்றுள்ளார்.

கீழ்வேளூர் இடபதேவர்

திருவாரூர் நாகப்பட்டினம் சாலையில் உள்ள கீவளூர் தேவாரத்தில் "கீழ்வேளூர்" என்று அழைக்கப்படுகிறது.இது மாடக் கோயில்வகையைச் சார்ந்தது. இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமான் கேடிலியப்பர் (அட்சயலிங்கர்) என்று அழைக்கப்படு கிறார். இவருக்கு முன்புறம் அமைந் துள்ள முற்றத்தில் பெரிய சுதையா லான இடபதேவர் எழுந்தருளி உள் ளார். இவர் சற்று தள்ளி இருப்பதற் கான காரணத்தைக் கூறும் புராணக் கதை வருமாறு:

இத்தலத்தில் அளவற்ற சிவ பக்தி கொண்ட பெண்பக்தை ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவளது கணவன் அக்கோயிலில் அர்ச்சக னாக இருந்து வந்தான்.ஒருசமயம் பொருள் ஈட்டுவதற்காக வெளியூர் சென்ற அவன் நெடுநாட்களாகத் திரும்பவில்லை.

அவள் வாழ வகையின்றி வருந்தித் துன் புற்றாள். தனது துயரத்தைக் கீழ்வேளூர்ப் பெருமானிடம் முறையிட்டாள். அவளது வாட்டத்தைப் போக்க விரும்பிய சிவபெரு மான்,அவளது கனவில் தோன்றி "பெண்ணே! நான் தினமும் ஒரு பொற்காசினைப் பலி பீடத்தின் மீது வைக்கிறேன். அதை எடுத்து உனது குடும்பத்தை நடத்தி வருக" என்று கூறி மறைந்தார். அதன்படியே தினமும் ஒரு பொற்காசு பலிபீடத்தில் இருக்க, அப்பெண் அதை எடுத்து, அமைதியாக வாழ்க்கை நடத்திவந்தாள். சுற்றத்தினர் அவளுடைய வாழ்வைக் கண்டு பொறாமை அடைந்தனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவளுடைய கணவன் ஊர் திரும்பினான். அவள் சிவன ருளால்தான் தினமும் காசுபெற்று வாழ்க்கை நடத்தியதைக் கூறினாள்.சுற்றத்தினரோ அவளுடைய கணவனிடம் அவன் மனைவி தகாத வழியில் சென்று பொருளீட்டினாள் என்றனர். அதைக் கேட்டு மனம் வருந்திய அப்பெண் பெருமானிடம் சென்று முறை யிட்டாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் தமது வலது கரத்திலிருந்து மழுவை வீசினார். அது கரகர வென்று சுழன்று பாய்ந்து சென்று தீமொழி கூறிய சுற்றத்தினரை வெட்டிச் சாய்த்தது. மழு பாய்ந்து சென்ற போது நடுவிலிருந்து ரிஷபர் சற்று ஒதுங்கினார். அந்த நிகழ்ச்சியை நினைவூட்ட என்றுமே விலகியிருப்பாய் என்று சிவபெருமான் கூறினார் என்பர். அதன்படியே இன்றும் கீழ்வேளூரில் ரிஷபம் விலகி யிருப்பதைக் காணலாம்.

திருப்பட்டீச்சுரத்து இடபதேவர்கள்

சோழநாட்டுத் திருத்தலமான பட்டீச்சரம் வரலாற்றுப் புகழ் பெற்ற தலம். சோழ மன்னர்கள்,வாழ்ந்த பெருமை கொண்டது. பழையாறை, பட்டீச்சரம், முழையூர், வலஞ்சுழி, சக்திமுற்றம் முதலி யவை சேர்ந்து முன்னாளில் ஒரு பெரிய நகரமாக இருந்தது. காலப்போக்கில் அவை தனித்தனி ஊர்களாகி விட்டன.

பட்டீசுவரத்தில் வீற்றிருக்கும் பெருமானைக் காமதேனுவும் அதன் கன்று களும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

சீர்காழியில் சிவனருளால் உமையம்மையின் திருமுலைப் பாலுண்டு சிவ ஞானம் கைவரப் பெற்ற திருஞான சம்பந்தப்பெருமான் பட்டீசுவரத்திற்கு எழுந்தருளினார்.அந்தக் காலம் கோடையாக இருந்ததால், சூரிய வெப்பம் சுட்டெரித்தது. அடியவர்கள் வெப்பத்தால் வருந்திச் சோர்ந்தனர். அதைக் கண்ட சிவபெருமான் தன் கணங்களிடம் அவருக்கு முத்துப் பந்தல் அளிக்கும்படிக் கூறினார்.

திருஞானசம்பந்தர் பட்டீசுவரம் ஆலயத்திற்கு எழுந்தருளினார். சந்நிதித் தெரு முனையில் வரும்போதே அவர் வரும் அழகைக் காண விரும்பிய சிவபெருமான் சந்நிதிக்கு நேராக இருந்த இடபங்களை விலகியிருக்கும்படிக் கூறினார். அவரது ஆணைப்படியே சந்நிதிக்கு நேராக இருந்த பஞ்ச(ரிஷபங்களை) நந்திகளும் சற்று தென்புறம் விலகினர்.

முத்துப் பந்தருடன், முத்துச் சிவிகையில் ஏறிவரும் திருஞான சம்பந்தரின் பவனியை சிவபெருமான்,கண்டு மகிழ்ந்தார். திருஞானசம்பந்தரும் தெரு முனையில் இருந்தவாறே சிவபெரு மானைத் தரிசித்து மகிழ்ந்தார்.

இதுபோல்பல தலங்களில் சந்நிதியை விட்டு விலகி இருக்கும் ரிஷபர்களையும் அதற்காகப் புராணங்கள் கூறும் காரணங் களையும் காண்கிறோம். ❀

ரிஷபமும்-கோமுகமும்-சிவலிங்கத்தில் உள்ள கோமுகம் சிவபெருமானின் அருளை வெளியிடும் வாயிலாகக் கூறுவர். அதையொட்டியே கோமுகத்தை வணங்கும் வழக்கம் உள்ளது. தென்னக ஆலயங்களில் கோமுகம் வடக்கு அல்லது கிழக்கு நோக்கியிருக்கும்படி அமைக்கப்படுகிறது. வடநாட்டில் கோமுகம் வாயிலை நோக்கியிருக்கும்படியும், அதை நோக்கியவாறு மகா மண்டபத்தில் ரிஷபரும் உள்ளனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபுர வாயிலுக்கு நேராகத் திரும்பி இருக்கும் ரிஷபதேவர்கள்

சிவாலயங்களில் எப்போதும் கருவறையில் வீற்றிருக்கும் பெருமானைத் தியானித்தவாறு அவரை நோக்கியிருக்கும் இடபதேவர், சில தலங்களில் கருவறையை நோக்கியிராமல் வாயிலை நோக்கியவாறு திரும்பிப் படுத்திருக்கிறார். திருஒத்தூர், திருஒத்தூரை அடுத்த காமூர் வீரட்டேசுவரர் கோயில், திருவலம் வில்வநாதர் கோயில், சோமங்கலம் சோமநாதீசுவரர் கோயில். திருமுல்லை வாயில் முல்லை வனநாதர் கோயில் திருப்பெண்ணாடகம் பிரளயகாலேஸ்வரர் கோயில், முதலிய தலங்களில் இவ்வாறு காணப்படுகிறார். அவர் அவ்வாறு இருப்பதற்கான காரணத்தைத் தலபுராணங்கள் சிறப்புடன் விவரிக்கின்றன.

திருமுல்லைவாயில் இடபதேவர்

தொண்டை நாட்டுத் தலங்களில் ஒன்றான திருமுல்லைவாயில் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பட்ட தலம். அருண கிரி நாதரால் திருப்புகழ் அருளப்பட்ட தலம்.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவன் தொண்டை மான். அந்நாளில் வடபுலத்தில் வாழ்ந்த குரும்பர்கள் என்னும் இனத்தவர் அவனுக்கு ஓயாது தொல்லை கொடுத்து வந்தனர். அவர்களை அடக்கித் தண்டிக்க விரும்பிய தொண்டைமான் பெரும் படையுடன் புறப்பட்டான். வழியில் முல்லை வனம் ஒன்றைக் கடக்கும்போது வழியில் இருந்த முல்லைக் கொடியொன்று கண நேரத் தில் அவனது யானையின் கால்களைச்



சிவபெருமான் தொண்டைமான் களிற்றைச் சூழ் கொடி முல்லையால் கட்டி அவன் மூலம் வெளிப்பட்டுக் கோயில் கொண்ட வரலாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுற்றிக் கொண்டு அதை மேலே நகர விடாமல் தடுத்து விட்டது.

தொண்டைமான் அக்கொடிகளை வெட்டினான். அங்கே ரத்தம் தெரித்தது. மன்னன் கீழே இறங்கி புதரை விலக்கிப் பார்த்தான். அங்கு சிவலிங்கம் ஒன்று இருப்பதையும், தனது வாள் அதை வெட்டிய இடத்திலிருந்து இரத்தம் வெளிப் படுவதையும் கண்டான். சிவ அபராதம் செய்து விட்டோமே என்று அஞ்சித் தன்னை மாய்த்துக் கொள்ள முயன்றான்.

சிவபெருமான் தடுத்து, அவனை ஆட் கொண்டதுடன், குரும்பர்களை அடக்க ரிஷப தேவரையும் துணைக்கு அனுப் பினார். மன்னன் விரைந்து சென்று குரும்பர்களை அடக்கிய பின் முல்லை வனத்திற்கு வந்து வனத்தைத் திருத்தி அங்கிருந்த சிவலிங்கத் திற்கு ஆலயம் அமைத்தான். சிவபெரு மானுக்கு முல்லை வனநாதர் என்றும், அம்பிகைக்குக் கொடியிடைநாயகி என்றும் பெயர் சூட்டினான். ரிஷபதேவர் அவனுக் குத் துணை சென்றதன் நினைவாகக் கருவறை யை நோக்காமல் கிழக்கு நோக்கி அமைந்துள்ளார்.

சிவபெருமான் தொண்டைமான் களிற்றைச் சூழ் கொடி முல்லையால் கட்டி அவன் மூலம் வெளிப்பட்டுக் கோயில் கொண்ட இவ்வரலாற்றைச் சுந்தரர் இவ்வூர் தேவாரத்துள் குறித்துள்ளார்.

திருப்பெண்ணாகடம் இடபதேவர்

நடுநாட்டுத் தலமான பெண்ணாகடம் தேவரம்பையர், தெய்வயானை, காமதேனு முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் சூல இடப முத்திரைகளையிட்டு அருள் புரிந்த தலம். இங்குள்ள ஆலயம் தூங்கானை மாட



வடிவினது. அதையொட்டிக் கடந்தைத் தூங்கானை மாடம் என்று அது அழைக்கப் படுகிறது.

இங்கு வீற்றிருக்கும் பெருமானுக்கு பிரளயகாலேசுவரர் என்பது பெயர். ஒரு சமயம் பிரளயகாலம் தோன்றிக் கடல் பொங்கியது. உலகை அழிக்கப் பொங்கிப் பெருகும் பிரளய வெள்ளத்தைக் கண்டு அஞ்சிய தேவர்களும் உயிர்களும் சிவ பெருமானே, சிவபெருமானே என்று ஓலமிட் டன. சிவபெருமான் அவர்களுக்கு அடைக் கலம் தந்து அருள்புரிந்தார்.

இடப தேவரை நோக்கி,"பிரளய வெள்ளத்தை அடக்குக" என்றார். ரிஷப தேவர், பெரியதாக ஹுங்காரம்செய்தார். அந்த அதட்டல் ஒலியைக் கேட்டு பொங் கிய கடல்களும், ஆர்ப்பரித்த வெள்ளமும் அடங்கி ஒடுங்கிவிட்டன. எல்லோரும் மகிழ்ந்தனர்.

அதை நினைவூட்டும் வகையில் இத் தலத்தில் இடபதேவர் கிழக்கு நோக்கிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவலத்து இடபதேவர் Vallam

வாறு படுத்துள்ளார். இவரைப் பிரளய கால நந்தி என்று அழைக்கின்றனர்.

இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குப் பிரளயகாலேசுவரர் என்பது பெயர்.

திருவலத்து இடபதேவர்

தொண்டைநாட்டுத்தலமான திருவல்லம், இந்நாளில் திருவலம் என்று அழைக்கப்படுகிறது. கல்வெட்டுக்கள் இத்தலத்தைத் தீக்காலி வல்லம் என்று அழைக்கின்றன.

இத்தலத்தில் கஞ்சன் என்னும் அசுரன் வாழ்ந்து வந்தான். அவன் செய்த கொடுஞ் செயலால் அனைவரும் அஞ்சி நடுங்கி ஏதும் செய்ய வழியின்றிச் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர் இடப தேவரை அனுப்பி அவனை வென்று அழிக்கும்படிக் கூறினார். அதன்படி இடபதேவர் பாய்ந்து சென்று அரக்கனையும், அவனது சேனைகளையும் அழித்து மீண்டார். அதை நினைவூட்டும் வகையில் இடபதேவர் இங்கு வாயிலை நோக்கியவாறு படுத்திருக்கிறார். சுதையால் அமைக்கப்பட்டுப் பொலிவுடன் விளங்கும் பெரிய ரிஷபங்கள் கிழக்கு நோக்கியிருப்பதை இங்கே காண்கிறோம்.

திருவைகாவூர் யமனை எதிர்த்த ரிஷபம்

கும்பகோணத்தை அடுத்த பாப நாசத்திலிருந்து வடக்கே 12 கி.மீ. சென்றால் திருவைகாவூரை அடையலாம். வேட்டையாடிக் கொண்டிருந்தவேடன் ஒருவன் தன்னைத் துரத்தி வந்த புலிக்குப் பயந்து வில்வமரத்தின் மேல் ஏறிக் கொண்டான். அவனைத் துரத்தி வந்து புலியும் அம்மரத்தின் கீழேயே தங்கிவிட்டது. இரவு நேரம் தொடங்கிவிட்டது. மரத்தின் மேல் இருந்த வேடன் தூங்கிக் கீழே விழுந்து விடாதிருக்க அம்மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். அம்மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அவன் பறித்துப் போட்ட வில்வ இலைகள் சிவலிங்கத்தின் மீது விழுந்தன. அன்றைய நாள் சிவராத்திரியாக இருந்தது.

தன்னையறியாமலும், சிவபூசை என்னும் சிந்தனையில்லாமலும் வேடன் தன் மீது வில்வ இலைகளை இட்டிருந்தாலும் அதைச் சிவபெருமான் தனக்குச் செய்த சிவராத்திரி பூசையாகவே ஏற்றுக் கொண்டார். பொழுது விடிந்தது. அன்று அவனது ஆயுள் முடிந்து விட்டதால் அவனைத் தேடி யமதூதர் வந்தனர். அப்போது சிவபெருமான் ரிஷபதேவரை அனுப்பி, யமதூதர்களை விலக்கி அவனை அழைத்து வரும் படிச் செய்து முத்தி கொடுத்தார். வேடனை அழைத்துவரச் சென்றதை நினைவூட்டும் வகையில் வாயிலை நோக்கியவாறு இடபதேவர் அமைந்துள்ளார்.

ரிஷபதேவர் திரும்பியிருக்கும் தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யோக ரிஷபமும் போக ரிஷபமும்



யோக ரிஷபம்



போக ரிஷபம்

யோகம் என்பதற்கு இணைப்பது என்பது பொருள்.யோக நிலை என்பது உயர்ந்த பொருளோடு இணைந்திருக்கும் நிலையாகும். அதாவது அன்பர்கள் இறைவன் நினைவில் பிரிவின்றி நிலை பெற்று இருத்தலே யோகம் ஆகும்.

மேலும், யோகம் என்பதற்கு எல்லா விதமான செல்வங்களையும் அடைதல் என்பதும் பொருள். எல்லா விதமான செல்வங்களையும் அன்பர்கள் அடையச் செய்யும் சிவபெருமான் யோக நந்தீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். அடைந்த செல்வங்களை உயிர்கள் அனுபவித்து அதன்மூலம் பலவிதமான இன்பங்களை அடைவதற்கான வகையில் அருளைப் புரியும் சிவபெருமான் போக நந்தீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார்.

இறைவன் யோக நந்தீசுவரராகவும் போக நந்தீசுவரராகவும் வீற்றிருக்குமிடம் ஆந்திர மாநிலத்திலுள்ள நந்தியால் என்னுமிடமாகும். அவரைப் போலவே அவரது வாகனமான காளைப் பெருமா னும் யோக ரிஷபமாகவும் போக ரிஷபமாகவும் காட்சி தருகிறார்.

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று அச்சிறுபாக்கம். இங்குள்ள ஆட்சீசுவரர் ஆலயத்தில் ஆட்சீசுவரர், உமையாட்சீசுவரர் என்னும் இரண்டு திருநாமங்களுடன் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார். உமையாட்சீசுவரர் சந்நிதிக்கு எதிராகவும், ஆட்சீசுவரர் சந்நிதி முன்பாகவும் அழகிய (இடப) நந்திதேவர் திருவுருவங்கள் உள்ளன.

உமையாட்சீசுவரர் சந்நிதிக்கு எதிரிலுள்ள நந்திக்கு யோக இடபர் என்றும், ஆட்சீசுவரர் முன்னுள்ள நந்திக்குப் போக இடபர் என்பதும் பெயர்.

உமையாட்சீசுவரருக்கு எதிரிலுள்ள நந்திதேவர் திருவுருவத்தின் கீழ் திரிநேத்திரதாரி என்னும் முனிகுமாரன் சமாதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலையில் இருக்கிறான் என்று நம்பப் படுகிறது.அவர் சிவபெருமானின் அருள் பெற்று நந்தி கணத்துள் ஒருவராகி சதா யோக நிலையில் இருப்பதாகக் கூறுவர். திரிநேத்திரதாரி உமையாட்சீசுவரரை வணங்கி, அவர் முன்பாக சமாதித் தலம் கொண்டுள்ளதைக் குறிக்கும் வகை யில் அந்த சமாதி மீது யோக நிலையில் ஆழ்ந்தி ருக்கும் இடபத்தின் திருவுருவம் அமைக் கப்பட்டுள்ளது என்கின்றனர்.

பொதுவாக இடப வடிவங்களில் கழுத்தில் மணிமாலைகளும் முதுகில் விரிப்பும், கால்களில் சதங்கையும் அமைக் கப்படும். இந்த நந்தி யோகீசுவரராக இருப் பதால், இவர் அணிமணிகள் ஏதுமின்றி கழுத்தில் கயிற்றில் கட்டப்பட்ட ஒற்றை மணியுடன் எளிய நிலையில் காட்சியளிக் கிறார். கண்கள் யோகத்தில் நிலை பெற்றி ருப்பதைக் குறிக்கும் வகையில் ஆழ்ந்த மோனத்தில் இருப்பது போல் அமைக்கப் பட்டுள்ளன. இத்தகைய நந்தியின் வடிவம் வேறெங்கும் இல்லையென்று கூறுகின் றனர்.

இவருக்கு மாறாக,ஆட்சீசுவரர் எதிரி லுள்ள போகநந்தி செல்வத்தில் நிலை பெற் றிருப்பதைக் குறிக்கும் வகையில் உயர்ந்த அலங்காரத்துடன் விளங்குகிறார். காதுக ளில் செவிப்பூக்கள், கழுத்தில் வரிசை மணி மாலைகள் அத்துடன் சிங்கமுக சங்குமணி கால்களில் மகரவளை,முதுகில் புலித் தோல் போர்த்திய விரிப்பு என அலங்கார மாக விளங்குகிறார்.

சிவபெருமானைப் போலவே அவரது வாகனமான, ரிஷப தேவரும் பெருமானும் யோக ரிஷபமாகவும், போக ரிஷபமாகவும் காட்சி யளிப்பது கண்டு மகிழத்தக்கதாகும்.

ரிஷப தீபம்

ஆலயங்களில் நடைபெறும் பெரிய தீபாராத னைகளில் விலங்குகள் பறவைகள் ஆகியவற்றின் திருவுருவங்கள் அமைந்த தீபங்களைக் கொண்டு ஆராதனை செய்கின்றனர். இத்தகைய தீப வரிசையில் ஆமை, மயில், யானை, குதிரை, சிங்கம், புலி, பாம்பு, அன்னம் முதலியவற்றின் உருவங்களில் அமைந்த தீபங்கள் உள்ளன. இதில், இடபத்தின் உருவம் கொண்ட தீபமும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. இந்த இடபம் தருமதேவதையாகப் போற்றப்படுகின்றது.

இத்தீபங்களைத் தெய்வத்தின் முன்பாகச் சுழற்றி ஆராதிக்கும் போது அவற்றிற்குரிய காயத்ரி ஓதப்படும். அல்லது அதைக் குறிக்கும் வேதவாக்கியங்கள் ஓதப்படும்.

இடபதீபத்தைக் காட்டும் போது ரிஷப காயத்திரி ஓதப்படுவதுடன் தரும தேவதைக்கான மந்திரங்களும் ஓதப்படுகின்றன.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவெண்காட்டு திண்போர் ஏறு
(வலிமைமிகு போர்காளை)

வீரர்கள் எல்லோருக்கும் தலைமைத் தானம் வகிக்கும் மகாவீரனாகச் சிவபெருமான் இருக்கிறார். அவர் வல்லசுரர்களை அழித்து உலகைக் காப்பவர். அவரைப் போலவே அவருடைய இடபவாகனமும் போர்க்குணம் மிக்கதாக உள்ளது.

திருமுறைகள் ரிஷபத்தைக் காய் சினத்த விடை (கடும் கோபத்தை உடைய ரிஷபம்) (திருக்கருகாவூர்); செண்டுசேர் விடை செண்டு கொண்ட ரிஷபம்(மயேந்திரபள்ளி); தாரிடும் போர் விடை, செறுபோர் வெள்விடை, போர்விடை (திருநள்ளாறு) பொருவிடை; ஆற்றல் அடல் விடை என்று குறிக்கின்றன.

போரில் காயங்கள் ஏற்படுவது இயல்பானதாகும். அந்தக் காயங்களை விழுப் புண்கள் என்பர்.(விழு என்பதற்கு மேன்மை மிக்கது என்பது பொருள்) வீரர்களுக்குப் போர்க் காயங்களால் ஏற்பட்ட தழும்புகள் அவர்களது வீரத்திற்கு அடையாளமாகத் திகழ்கின்றது.போரில் ஏற்பட்டவீரத் தழும்புகளுடன் கூடிய ரிஷபத்தைத் திருவெண் காட்டில் காண்கிறோம்.

ஒரு காலத்தில் மருத்துவன் என்னும் அசுரன் பெரும் அட்டகாசம் புரிந்து வந்தான். சிவபெருமான் இடபத்திடம் "நீ சென்ற அவனை அடக்கி வருக" என்றார். இடபம் ஆர்ப்பரிப்புடன் பெரும் வடிவுகொண்டு விரைந்து சென்று அவனோடு போரிட்டது. அதன் வலிமைக்கு ஈடுகொடுக்க முடியாத அவன் சிவன் அளித்த சூலாயுதத்தை அதன் மீது செலுத்தினான். அதை எதிர்க்கக் கூடாது என்பதால் இடபம் அதை வணங்கி அமைதியாக இருந்தது. அச்சூலம் அதைச் சுற்றி வலம் வந்து மறைந்து போனது.அந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொண்ட மருத்துவன் அதன் உடலில் ஒன்பது இடங்களில் குத்திக் காயப்படுத்தியதுடன், கொம்புகளை உடைத்து அதன் காதுகளை அறுத்து விரட்டினான்.

இடபம், திரும்பி சிவனிடத்திற்கு வந்தது.இடபத்தைக் காயப்படுத்திய மருத்துவன் மேல்சிவ பெருமான் கோபம் கொண்டார். நெடிய சூலத்தை ஏந்தி அகோர மூர்த்தியாக வெளிப்பட்டார். மருத்துவன் இருக்கும் இடத்திற்கு விரைந்து சென்றார். இடபமும் அவரைத் தொடர்ந்தது. மருத்துவன் ஆங்காரத்துடன் சிவபெருமானை எதிர்த்து வந்தான். சிவபெருமான் ஒரு நொடியில் அவனை அழிக்கும் ஆற்றல் பெற்றிருந்தாலும், அவனது வீரத்தைக் காண அவனுடன் போர் புரிந்தார். அவனது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடங்காத ஆண்மை மிக்க வீரத்தால் மகிழ்ந்தார். இறுதியில் அவனைச் சூலத்தால் குத்தி வதைத்தார்.

அவன் மாண்டபின் வீரசுவர்க்கமடைந் தான். சிவபெருமான் இடபத்தைத் தடவிக் கொடுத்தார். அதன் காதுகள், கொம்புகள் முன் போலாயின. உடலில் காயங்கள் மறைந்தன. அது புத்துணர்ச்சியைப் பெற்றது.

சீர்காழியை அடுத்து அமைந்துள்ள திருவெண்காடு மூன்று மூர்த்திகள், மூன்று குளங்கள் கொண்ட தலம். சிவபெருமான் மருத்துவாசூரனை அழித்த அகோர மூர்த்தி யாக எழுந்தருளியுள்ளார். இவருடைய திருவுருவத்தின் பீடத்தில் இடப தேவரும், போரிட்டு மாய்ந்த மருத்துவனும் இடம் பெற்றுள்ளனர். இடபம் தனது தலையைத் தூக்கிப் பெருமானின் விசுவரூப வடிவைக் காண்பதாக அமைந்துள்ளது.

கருவறைக்கு நேர்எதிரில் மருத்து வனிடம் தோற்றுச் சிவபெருமானைத் தஞ்சம் அடைந்த கோலத்தில் இடபம் உள்ளது. அதன் உடலில் விழுப் புண்ணைக் குறிக்கும் ஒன்பது துளைகள் காணப்ப டுகின்றன.

சிவபெருமானின் போர்க்கோலங்கள் பலவற்றில் இடபமும் சேர்த்தே அமைக்கப் பட்டுள்ளது.

உழவாரப் படையில் ரிஷப வடிவம்

சிவபெருமானின் செங்கோல், செண்டு ஆகிய வற்றில் மட்டுமின்றி, ஆலவட்டம், குடை, தியாகப் பதா கைகள் முதலியவற்றிலும் ரிஷபத்தின் உருவம் அமைக் கப்படுகிறது. சிவனடியார்கள் போற்றும் உழவாரப் படை என்ற ஆயுதத்திலும், ரிஷபம் இடம் பெறுகிறது. காளை யின் வடிவம் உழைப்பின் சின்னமாக இருப்பதால், உழைப்பின் அடிப்படையில் தோன்றிய உழவாரப் படைக்கலங்களிலும் அதன் உருவத்தை அமைக்கின் றனர். உடல்உழைப்பைச் சிவப்பணியாகத் தரும் முறையைத் தோற்றுவித்தவர் அப்பர்சுவாமிகள்.

சிவாலயங்களில் முளைத்துள்ள செடிகொடிகளைச் செதுக்கி எடுத்துத் தூய்மை செய்ய அவரால் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்ட கருவி உழவாரப் படை யாகும். இதையொட்டி, கோயில்களில் மேற்கொள்ளப்படும் பணிகள் உழவாரப் பணிகள் என்றழைக்கப்படுகின்றன. சிவாலயங்களில் எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ள திருநாவுக்கரசு நாயனார் உருவங்களில் அவர் உழவாரப் படை ஏந்தியிருக்கிறார். அப்படைக்கலத்தில் ரிஷபவடிவம் அமைந்துள்ளதைக் காணலாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செண்டாடும் விடை

செண்டு என்பதற்கு இரட்டை, பந்து சுற்றிக்கட்டப்பட்டது. சிதைப்பது வட்ட மடித்து ஆடுவது, தூக்கியெறிந்து ஆடுவது எனப் பல பொருட்கள் உள்ளன. பந்தாடுவது செண்டாடல் எனப்பட்டது. அம்பிகை பந்தாடுவது செண்டாடல் என்று குறிக்கப் படுகிறது.அவளுக்குச் **செண்டாடும் பிராட்டி** என்றும், **பந்தாடும் நாயகி** என்றும் பெயர் வழங்குகிறது.

ஆதிபராசக்தி பந்தாடுகிறாள். அது சாதாரணமான பந்தாடுதல் இல்லை. அண்டப்பெருவெளியில் கிரகங்களையும், நட்சத்திரங்களையும் அவள் பந்துபோல் வீசி ஆடிக் களிக்கிறாளாம்.இதை அனேக இலக்கியங்கள் கூறுகின்றன. பெண்கள் உடற்பயிற்சி, மனப்பயிற்சி மனமகிழ்ச்சி ஆகியவற்றிற்காகப் பந்தாடுகின்றனர்.

வீரர்களோ, போர்களத்தில் பகைவர்களின் தலைகளைப் பந்தாக்கி விளையாடிக் களிக்கின்றனர். இதற்கும் செண்டாடல் என்பது பெயர். ஐயனார் செண்டாயுதம் ஏந்தியிருப்பதால் செண்டாயுதன் என்று அழைக்கப்படுவதுடன், பகைவர்களின் தலைகளைப் பந்தாடி மகிழ்வதாலும் அப்பெயர் பெற்றுள்ளார்.

சிவபெருமானின்விடைவாகனமும் போர்த்தினவு கொண்டு போர்க் களத்தில் சுழன்று சுழன்று தாக்குதல், பகைவர்களின் உடலைக் கொம்புகளால் குத்தி வானில் வீசியெறிதல், வெட்டுண்ட வீரர்களின் தலைகளை உதைத்து விளையாடுதல் முதலிய செயல்களைப் புரிவதால் செண்டாடும் விடை எனப்பட்டது.



வெற்றிக் களிப்பால் உண்டான தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தச் சுழன்று ஆடுவதாலும் அதற்குச் செண்டாடும் விடை என்றபெயர் வழங்குகிறது. தேவாரத்துள் பல இடங்களில் செண்டாடும் விடை என்று அது போற்றப்பட்டுள்ளது குறிக்கப்பட்டுள்ளது.

பெங்களூருக்கு அருகில் அமைந்துள்ள நந்திமலைத் தொடரின் அடிவாரத்தில் போக நந்தீசுவரர் ஆலயம் உள்ளது. இங்குள்ள வெற்றித் தூணில் போரில் வெட்டுண்ட வீரனின் தலை மீது கால் வைத்துக்கொண்டு கம்பீரமாக நிற்கும் காளையின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.

இடபம் அமைதிக்கும், ஆழ்ந்த யோக நிலைக்கும் அடையாளமாக இருப்பதைப் போலவே ஆற்றல் மிக்கதாகவும், போர்க் குணம் மிக்கதாகவும் வெற்றியை விரும்புவதாகவும் உள்ளதைத் திருமுறைகளில் கண்டு மகிழ்கிறோம். ❀

செந்தூர ரிஷபம்

விநாயகப் பெருமானின் வடிவங்களில் ஒன்று செந்தூரகணபதி. அதையொட்டி வடநாட்டினர் செந்தூரத்தை அவர் திருமேனியில் பூசுகின்றனர்.வீர அனுமனுக்கும்செந்தூரத்தை அணிவிக்கின்றனர்.

அவர்களைப்போலவே செந்தூரம் பூசிய இடபத்தைக் காசிவிசுவநாதர் ஆலயத்தில் காண்கிறோம்.இது அளவில் பெரியதாகும் ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடபத்தின் மீது தாண்டவம்



போர்க்களத்தில் வெற்றி பெற்ற வீரன் தான் பெற்ற வெற்றியின் களிப்பால் நடனமாடுவான். தேர்த்தட்டின் மீதுநின்றும், வீரர்களின் தோள்கள் மீது நின்றும், ஆனை மீது நின்றும் உவகையால் ஆடுவான். தனக்கு வெற்றி தந்த வாளைச் சுழற்றியவாறு, அவன் ஆடும் ஆட்டத்தை "வாளோர் ஆடும் அமலை" என்று புறப்பொருள் வெண்பாமாலை என்னும் சங்க இலக்கியம் கூறுகிறது.

சிவபெருமான், திரிபுராதிகளை எரித்து அழித்தபின் அங்கு எழுந்த சாம்பலானது எங்கும் படிந்து, அந்த இடம் வெண்மையாகக் காட்சிதந்தது. அந்த வெண்களத்தின் நடுவே தேர்த்தட்டின் மீது நின்று அவன் ஆடினான். தேர்முன் நின்ற திசைமுகன் காண பாரதி ஆடிய வியன் பாண்டரங்கம் என்று அந்த ஆட்டத்தைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

பாரதி என்றதும், எல்லோருக்கும் சரஸ்வதி நினைவுக்கு வருகிறாள். அவள் வெண்ணிறமாக இருப்பதால் பாரதி என்று அழைக்கப்படுகிறாள். இங்கு பாரதி என்பது சிவபெருமானைக் குறிக்கிறது. திரு நீறும், திரிபுரத்துச் சாம்பலும் படிந்து வெண்ணிற மேனியனாக இருந்ததால், அவன் பாரதி எனப்பட்டான். பாண்டு என்பதற்கும் வெண்மை என்பதே பொருள். வெண்ணிறமான அரங்கம் பாண்டரங்கம் எனப்பட்டது.

அதில் சிவபெருமான் வாளைச் சுழற்றியவாறு தனது ஊர்தியான இடபத்தின் மீது நின்று ஆடுகின்றான். பத்து திசைகளையும் வென்றதை உணர்த்தும் வகையில் பத்துக் கரங்களுடன் அவன் ஆடிக்கொண்டிருக்கின்றான். சுற்றிலும் கணங்கள் ஆடிப்பாடியவாறு உள்ளனர். ஒரிசாவில் பல இடங்களில் இத்தகைய காட்சியை விளக்கும் பல சிற்பங்கள் உள்ளன.

ரிஷபத்தின் மீது பெருமான் ஆடும் அற்புத நடனத்தைச் சித்திரிக்கும் உலோகத் திருமேனி ஒன்று தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தை அடுத்த மேலக்கடம்பூர் அமிர்தகடேசுவர சுவாமி ஆலயத்தில் உள்ளது.

சோமசித்தாந்தியும், இக்கோயிலைச் சோழப்பேரரசர்களின் நல்லாதரவுடன் நிர்வகித்து வந்தவருமான உமாபதி சிவாச்சாரியார் வழிபட்டு வந்த திருவுருவமாக இது இருந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபதேவரிடம்
அன்னமும் - கருடனும் அடைந்த கர்வபங்கம்

கயிலையில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருமாளிகையின் நேர் எதிரில் பெரிய மண்டபத்துள் ரிஷபதேவர் வீற்றிருக்கிறார் அவர் சதாகாலமும் சிவனை எண்ணி யோகத்தில் மூழ்கி இன்பத்தில் களித்திருப்பவர். சிவனது ஆணையை மட்டுமே ஏற்பவர். மற்றவர்களை அவர் ஏறெடுத்துப்பார்ப்பதும் இல்லை, பணிவதும் இல்லை.

சிவபெருமானைத் தரிசிக்கவரும் வேளையில் திருமாலும், பிரமனும் தமது வாகனங்களான கருடனையும் அன்னத்தையும் மாளிகைக்கு வெளியே விட்டுச் செல்வது வழக்கம்.

அன்னத்திற்கு தனக்கு ஒப்பான அழகுடையவர் எவருமில்லை என்றும், கருடனுக்கு தனக்கு மிஞ்சிய வலிமை படைத்தவர் எவருமில்லை என்றும் கர்வம் இருந்தது. அந்த கர்வம் எல்லை தாண்டித் தலைக்கேறும் போது அவர்கள் அடுத்தவர்களை இழித்துப்பேசி மட்டம் தட்டுவது வழக்கம். திருக்கயிலைக்கு வரும் சமயங்களில் அவர்கள் ரிஷபதேவரையும் மட்டம் தட்டி பேசி மகிழ்வதை வாடிக்கையாகக் கொண்டனர். அத்துடன் அவரது யோக நிலையைக் கலைக்கும் முயற்சி யிலும் அடிக்கடி ஈடுபடும் வழக்கத்தையும் கொண்டனர். ரிஷபதேவர் அவர்களை ஒரு பொருட்டாது மதிக்காது அலட்சியம் செய்து விடுவார்.

ஒரு சமயம் அவர்களது செய்கை எல்லை மீறியதால் ரிஷபதேவர் கோபம் கொண்டார். அவர்களைத் தண்டிக்க விரும்பினார். தனது உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டார். அவர்களைத் தனது மூச்சுக் காற்றால் அருகில் இழுத்தார். மூச்சை வேகமாக இழுத்துவிடத் தொடங்கினார் மூச்சுக் காற்றின் புயல் வேகத்திற்குள் சிக்கிக்கொண்ட அவர்கள், அவர் மூச்சை உள்ளிழுக்கும்போது மூக்கில் தாவிவந்து மோதிக் கொள்வதும், வேகமாக விடும் போது பூமியில் வீழ்ந்து மோதுவதும் என மாறிமாறி அலைப்புண்டு துன்பம் அனுபவித்தனர். ஆற்றல்மிக்க கருடனால் அவரது மூச்சுக் காற்றின் வேகத்திலிருந்து விடுபட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியேற முடியவில்லை. அவன் தனது கர்வம் அழிந்து நிலைகுலைந்தான்.

அழகால் செருக்குற்றிருந்த அன்னத்தின் நிலையோ பரிதாபமாகி விட்டது. புயல் போன்ற மூச்சுக்காற்றால் அதற்கு அழகு கூட்டும் சிறகுகள் பிய்ந்துப் பறந்து விட உடல் ரத்தக்களறியாகி, அது மரணத்தின் விளிம்புக்கே போய்விட்டது. பிரமனும் திருமாலும் சிவபெருமானைத் தரிசித்து விட்டு வெளியே வந்தனர்.

அவர்கள் பெரிய வடிவுடன் தோன்றும் ரிஷப தேவனையும் அவனது மூச்சுக் காற்றில் சிக்கிச் சிதைந்து கொண்டிருக்கும் தமது வாகனங்களையும் கண்டு துன்ப மடைந்தனர். ரிஷபதேவரிடம் எந்தப் பிழை நேர்ந்திருந்தாலும் அப்பிழையை அக்கணமே பொறுத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

ரிஷபதேவர் மூச்சுக்காற்றைச் சீராக்கிக் கொண்டதுடன் இயல்பான வடிவத்தை அடைந்தார். பூமியில் வீழ்ந்து தத்தளித்த கருடனையும் அன்னத்தையும் நோக்கினார். அவர்கள் கர்வம் காணாமல் போயிருந்தது. அவர்கள் ரிஷபதேவரை வணங்கி நின்றனர். அவர்கள் மீது கருணைகொண்ட ரிஷப தேவர் சிவபெருமானின் அருளைத் துணை கொண்டு அவர்களின் துன்பத்தை மாற்றி மனமகிழ்ச்சியுடன் முன்போலவே அழகிய உடலையும் அடையச் செய்தார். அன்று முதல் ரிஷபதேவரை அம்ச கருட கர்வ பங்க மூர்த்தி என்று அழைக்கின்றனர். சிவபராக்கிரமத்தில் இந்த வரலாறு இடம் பெற்றுள்ளது. ❀

மயிலைக் காளை

'மயில' "என்பதற்கு சுதந்திரமானது என்பதுபொருள். திருமண பந்தத்தை விரும்பாமல் சுதந்தரமாக வாழும் பெண்கள் மயிலாட்டிகள் என்று அழைக்கப்பட்டனர். அதுபோல் சுதந்திரமாகத் திரியும் வலிய காளைகள் மயிலைக் காளைகள் என்று அழைக்கப்பட்டன. இந்தக் காளைகள் பருவ வயது வந்தவுடன் அருகிலுள்ள காட்டுக்குள் விடப்படும். அவை, அங்கேயே சுதந்திரமாக வளரும். காட்டுக்குள் மேயச் செல்லும் பசுக் கூட்டத்திலிருந்து சில பசுக்கள் பிரிந்து இதனுடன் சேர்ந்து இரண்டு,மூன்று நாட்கள் சுற்றித் திரிந்துவிட்டு மீண்டும் வந்துவிடும். இவ்வாறு செல்லும் பசுக்கள் மயிலை காளை யுடன்சேர்ந்து கருவடையும்.(சினை யாகும்) அப்படி உற்பத்தியாகும் கன்றுகள் வலிமையானதாகவும்,வீரியமானதாகவும் இருக்கும். மயிலக் காளைகள் ஊருக்குள் வந்தால் தீனி அளித்து தண்ணீர் காட்டி மீண்டும் காட்டுக்குள் விரட்டிவிடுவர். வலிய, திண்மையான காளைகளையும், பசுக்களையும் பெற முன்னாளில் மயிலைக் காளைகளை வளர்க்கும் இத்தகைய ஏற்பாடு இருந்து வந்தது.

மயிலைக் காளை என்பதற்குக் கருஞ்சாம்பல் நிறமுள்ள பசு என்று இலக்கியங்கள் பொருள் கூறுகின்றன. பொன்வண்ணம் மின்னும் கருமை நிறமும் மடி, முகம் ஆகிய வற் றில் வெண்மை நிறமும் கொண்ட பசுக்களைக் கபிலை என்று அழைப்பது போலவே கருஞ்சாம்பல் நிறமுள்ள எருதுகள் மயிலைக் காளைகள் என அழைக்கப்பட்டன. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபம் கொண்ட கர்வமும் சிவபிரான் அதை அடக்கி ஆட்கொண்டதும்.
(மயிலாடுதுறை காவிரியில் காளைத்துறை)

சிவபெருமானின் ஆணையால் மயில் வடிவம் பெற்ற பார்வதிதேவியார், மண்மேல் வந்து காவிரிக்கரையில் இருந்த மாஞ் சோலை ஒன்றில் தங்கி சிவபெரு மானை வழிபட்டு வந்தாள். அவளது பக்தி நிறைந்த பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்கு அருள்புரிய எண்ணினார். தமது காளைமீது ஏறி அதனிடம் "காவிரிக்கரையில் அம்பிகை என்னை நோக்கிப் பூசைசெய்யும் இடத்திற்கு விரைந்து செல்லுக" என்று கூறினார்.

ரிஷபம் மிடுக்காகவும் விரைவாகவும் நடந்தது. அதனைத் தொடர்ந்து வந்த பிரமன், திருமால், இந்திரன், தேவர்கள் முதலியோர் ஏறிவந்த அன்னம், கருடன், ஐராவதம் முதலிய வாகனங்கள் அதன் வேகத்திற்கு ஈடுகட்ட முடியாமல் பின்தங்கி விட்டன. அதைக்கண்ட ரிஷபம் பெரிய கர்வம் கொண்டது. அதை அறிந்த சிவபெரு மான் அதன் முதுகில் தனது வலதுகால் விரலை ஊன்றினார். அந்த அழுத்தத்தைத் தாளாது அது பாதாளத்தில் சென்று விழுந்தது.

அப்போதுதான் அதற்குத் தனது ஆற்றல் மிகமிகக் குறைவு என்ற அறிவு உண்டா யிற்று. அதன் கர்வம் போன இடம் தெரியா மல் சென்று மறைந்தது. அது வருந்திச் சிவபெருமானைச் சரணடைந்து துதித்தது. அதன் துதியால் மகிழ்ந்த சிவபெருமான் மகிழ்ந்து அதற்கு அருள்புரிந்தார். பூமிமீது வரும்படிப் பணித்தார். விடைவாகனம் காவிரியாற்றின் நடுவே தோன்றி நீர்மேல் நின்றது. சிவபெருமான் அதை அழைத்துத் தழுவி மகிழ்ந்தார்.

காவிரியாற்றின் நடுவே அதன் கூற்றில் ஒரு பங்கு நிலையாக இருக்கும்படியும், காவிரியின் அப்பகுதிக்கு இடபத்துறை என்ற பெயர் வழங்கும்படியும், துலா மாதத்தில் அத்துறையில் மூழ்கித் தம்மை வழிபடுவோர்க்கு உரிய வரங்களைத் தரும் பேற்றையும் அதற்கு அளித்தார்.

அப்போது காளை அவரைப் பணிந்து தனக்கு ஞானஉபதேசம் செய்யும்படிக் கேட்டுக் கொண்டது. அவர் காவிரியின்



மயிலாடுதுறையில் இறைவன் இடபத் தை அடக்கி அறிவுறுத்தி அருள் புரிந்ததைப் போலவே அம்பிகை இடபத்தை அடக்கி அருள்புரிந்த தலம் ராமநதீச்சரமாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடகரையில் தவம் செய்யும்படி கூறினார். அவ்வாறே தவம் செய்த ரிஷபத்திற்கு அருள்புரிந்து ஞானஉபதேசமும் செய்தார். அவ்விடமே இப்போது வள்ளலார் கோயில் என வழங்குகிறது. அக்கோயிலில் இடபத் தின் மீது அமர்ந்தவாறு அவருக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் தட்சிணா மூர்த்தியின் வடிவம் அமைந்து வழிபடப் படுகிறது.

அம்பிகை, மயில் வடிவில் பூசித்த அந்த காவிரிக்கரை மாங்காடே பின்னாளில் மயிலாடுதுறை எனப் பெயர் பெற்றது. அங்கு அம்பிகை வழிபட்டுப் பேறு பெற்ற சிவலிங்கம் அமைந்த ஆலயமே மாயூரநாதர் ஆலயம் ஆனது.

அங்கு ஓடும் காவிரியின் நடுவில் அமைந்துள்ள சிறிய மண்டபத்தில் இடபம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதனை ஒட்டிய பகுதி இடபத்துறை எனப்படுகிறது. அது முன்னாளில் துலாக்கட்டம் என்று அழைக்கப்பட்டு இப்போது லாகடம் என வழங்குகிறது.

திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்தில் சாம்பவி தட்சிணாமூர்த்தி என்னும் பெயருடன் உமாமகேசர் வடிவம் உள்ளது. இதன் திருவடியிலும் இடபதேவர் வீற்றிருந்து உபதேசம் கேட்கும் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளார். ❀

ஒட்டிக் கொண்டிருக்கும் மூன்று ரிஷபங்கள்

இரட்டை வாழைப்பழம், மூன்று வாழைப்பழம் என்பது வாழைப்பழங்களில் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இரண்டு உடல்களும் ஒரு தலையும் கொண்ட நந்திகளை ஸ்ரீவிமானத்தின் மூலைகளில் பார்க்கலாம். மூன்று ரிஷபங்கள் ஒட்டிக் கொண்டிருப்பது கர்நாடக மாநிலக்கோயில்கள் சிலவற்றில் உள்ளன. ❀

சிவசைலம் (நந்தி) ரிஷபம்

ஸ்ரீ சைலமான திருப்பருப்பதத்தில் நந்தி தேவர் மலை வடிவில் விளங்குகிறார் என்று புராணங்கள் கூறுகின்றன. இதை நந்தி பர்வதம் என்றும் அழைக்கின்றனர். தென்னகத்து ஸ்ரீசைலமான சிவசைலத்திலும் நந்தி(ரிஷபர்)வழிபாடு சிறப்பாக உள்ளது. இங்குள்ள சிவசைலநாதர் ஆலயத்து ரிஷபதேவர் கலையழகு மிக் கவர். கம்பீரமான தோற்றம் கொண்ட வர்.கார்த்திகை சோமவாரங்களில் களபம் சாத்துதல் என்னும் சந்தனக்காப்பு செய்யப் படு கிறது.முழுக்காப்பு என்னும் பெயரில் சந்தனக்காப்பு நடத்தப்படுகிறது.

இப்பகுதியில் காளை மாடுகள், பசுக் களை வாங்குவோர் அவற்றை இவரது முன்னிலை யில் நிறுத்தி, இவரது அபிஷேகத் தீர்த்தத்தை அவற்றின் மீது தெளித்த பின்னரே வீட்டுக்கு அழைத் துச் செல்கின்றனர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகே காளைகளை வண்டிகளில் பூட்டுதல், ஏரில் பூட்டுதல் முதலியன செய்யப்படுகின்றன.இவ்வூரில் நடைபெறும் ரிஷப வாகனக் காட்சி யும் தனிச் சிறப்பு மிக்க தாகும். சுவாமி சிவசைலநாதரையும், அம்பிகை பரம கல்யாணி யையும் தனித் தனி ரிஷப வாகனங்களில் அமர்த்தி அலங் கரித்து இணையாக நிறுத்தி, ரத ஆரத்தி காட்டுகின்றனர். அக்காட்சியைக் காண ஏராளமான மக்கள் கூடுகின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாயப்பசுவை வதைத்த மாகாளையப்பர்



அனந்தகுண பாண்டியன் பாண்டி நாட்டை ஆண்டு வந்த வேளையில் அங்கு சமணர்கள் பெருஞ்செல்வாக்கு பெற்றிருந் தனர். அப்போது சைவம் தழைக்கத் தொடங்கியது. மன்னனும் சைவம் சார்ந் தான். அவனை அச்சுறுத்தவும் சமணத்தின் செல்வாக்கைப் பழையபடியே நிலை நாட்டவும், சமண சமயத்தினர் அபிசார வேள்வி ஒன்றைச் செய்து அதிலிருந்து தோன்றி யானையை மந்திரித்து மதுரையை அழித்துவருமாறு அனுப்பினர். அளவற்ற சீற்றத்துடன் வந்த அந்த யானைனைக் கண்டு மன்னனும் மக்களும் அஞ்சி மதுரை சோமசுந்தரப் பெருமானைத் தஞ்சம் அடைந்து தம்மைக் காக்குமாறு வேண் டினர். சோமசுந்தரர் அவர்களுக்கு அபயம் அளித்து தாமே வில்லேந்திய வீரனாகப் புறப்பட்டு வந்து அந்த மாய யானையை மாளச் செய்தார். அலறி வீழ்ந்து மாண்ட அதன் உடலை பெரிய மலையாகும்படிச் செய்தார். அதுவே இந்நாளில் யானைமலை எனும் பெயரில் மதுரைக்கு அருகில் உள்ளது.

யானை மாண்டு மலையாகிப் போனதை அறிந்த சமணர்கள் மீண்டும் உக்கிரமான வேள்வியைச் செய்து அந்த வேள்வியில் இருந்து தோன்றிய கொடிய நாகத்தை அனுப்பினர். மலைபோல் வந்த அந்த மாயப் பாம்பையும் சிவபெருமான் கூரம்பால் கொன்று கூறிட்டு, மலை யாக்கினார். அதுவே நாகமலை என்னும் பெயரில் மதுரைக்கு அருகே இருக்கிறது.

மாய யானையையும், மாயநாகமும் தோற்று மலை வடிவம் பெற்றதைக் கண்டு மனம் அயர்ந்த சமணர்கள் கூடிப் பேசினர்.

சைவர்கள் சிவபெருமானுக்கு ஆனைந் தைத் தரும் பசுவைப்போற்றுபவர்கள். அது எதைச் செய்தாலும் ஏற்றுக்கொள்வதுடன், அதற்குத் துன்பம் இழைக்கமாட்டார்கள். அதனால் கோபமுள்ள வலிய பசுவைத் தோற்றுவித்து அனுப்புவோம். அதைக் கொண்டு மன்னனையும் மக்களையும் அச்சுறுத்துவோம் என்று தீர்மானித்து அதன் படியே மாயப்பசு ஒன்றைத் தோற்று வித்து மதுரையை அழித்து விட்டு வரும்படி அனுப்பினர்.

சிவந்த கண்களுடன், பித்தம் தலைக் கேறியது போல் ஆர்ப்பரித்து வந்த அந்தப் பசுவைக் கண்டு எல்லோரும் மிரண்டனர். பசுவைக் கொன்றால் அளவற்ற பாவம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்து சேருமே. தாயைக் கொன்றதைப் போல் நூறு மடங்கு துன்பத்தைஅடைய நேரிடுமே என எண்ணி மனம் சோர்ந்தனர். மன்னனும் மனக் கலக்கம் அடைந்தான். சோமசுந்தரரைத் தஞ்சம் அடைந்தான்.

சிவபெருமான் தன் முன்னிருக்கும் காளையை நோக்கினார். அவரது உள்ளக் குறிப்பை அறிந்த ரிஷபம் ஆற்றலுடன் ஆர்ப்பரித்துப் புறப்பட்டது. ஆலயத்திலிருந்து அது புயல்போலவெளிப்பட்டு மாயப்பசு இருக்குமிடத்தை நோக்கி விரைந்தது.

விண்ணும் மண்ணும் அதிர, நடந்து எதிர்ப்பட்டதை எல்லாம் குத்திக் கிழித்து மிதித்துத் துவம்சம் செய்து திரியும் அகங்கார மாயப்பசு இருக்குமிடத்தை அடைந்த ரிஷபம் சிலிர்த்து நின்றது. மாயப்பசுவின் மீது பாய்ந்து அதைக் குத்திக் கீழே தள்ளிப் புரட்டியது. நெடுநேரம் இரண்டும் போராடின.

பசு இடபத்தின் வீரத்தைக் கண்டு வியந்தது. அவ்வேளையில் இடபம் அப்பசுவைக் கொல்லாது தனது மாயத்தால் தனது பேரழகைக் காட்டி மயக்கியதுடன், தானும் அதன்மீது மோகம் கொண்டது போல் நடித்து நின்றது.

பசுவிற்கும் அதைக் கண்டு காமம் மிகுந்தது. காமத்தை அடக்க முடியாமல் அல்லல்பட்டது. காமவிரகத் துன்பத்தால் வீழ்ந்து தன் உயிரையே விட்டது. அதன் உடலும் அழகிய மலையானது. அதைக் கண்டு இடபம் மகிழ்ந்து தனது உடலையும் விட்டு ஒளியுடம்பு பெற்றுச் சோமசுந்தரப் பெருமானை அடைந்தது. ரிஷபத்தின் உடலும் மலையானது. அவையே பசுமலை, இடபமலை என்னும் பெயரில் மதுரைக்கு அருகில் உள்ளன. சிவபெருமான் இடபத்தைத் தழுவிக் கொண்டார். அந்த இடபகிரியின் மீது இராமர் தங்கியிருந்து சிவபூசை செய்ததாக வரலாறு கூறுகிறது. ❀

"ஒன்று ஆகிய காளை"

சிவபெருமான் பவனி வரும் இடபத்திற்குப் பல்வேறு பெயர்கள் வழங்குகின்றன. அவற்றில் "ஒன்று" என்பதும் ஒன்றாகும். தேவாரத்துள் பல இடங்களில் ஒன்று என்னும் சொல்லால் இடபவாகனம் குறிக்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் ஒன்றலாது ஊரார் (அச்சிறு பாக்கம்),ஊர்வது ஒன்றுடையானை (திருச்சிராப்பள்ளி) என்றும், திருநாவுக்கரசர், ஒன்றுகொல் ஆம் அவர் ஊர்வது தானே என பல இடங்களில் இடபத்தை ஒன்று என்றும் குறிக்கின்றனர். ஆதிகாலத்தில் இடபம் முதற்பொருளாகக் கருதப்பட்டிருக்க வேண்டுமென்றும், அதையொட்டி அது ஒன்று என்னும் சொல்லால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். அந்த வழக்கப்படியே தேவார ஆசிரியர்கள் இடபத்தை ஒன்று என்னும் சொல்லால் போற்றியுள்ளனர்.

ஊழிக்காலத்திலும் அழிவின்றி பிரிவின்றிப் பெருமானுடன் ஒன்றியிருத்தலாலும் அது ஒன்றி என்றும், அதுமருவி ஒன்று எனவும் அழைக்கப்பட்டதென்பர் பௌராணிகர். தொண்டை நாட்டுத் தலமான திருஒற்றியூருக்கு அப்பெயர் ஏற்பட்டதற்கான காரணங்கள் பலவற்றைச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.அவற்றில் ஒன்று, ஒற்றியான இடபம் பூசித்துப் பேறுபெற்றதால், அப்பெயர் வந்தது என்பதாகும். இத்தலத்தில் நந்தி உயரமான தூண் மீது எழுந்தருளியுள்ளார். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷப தீர்த்தங்கள்



இடபதீர்த்தம் திருவண்ணாமலை

ரிஷபம் பூமிக்கு வந்து சிவபூசை செய்த போது பூசைக்கு வேண்டிய நீரைப் பெறவும், தீர்த்தமாடவும் தனது கொம்பாலும் குளம்பாலும் திருக்குளங்களை அமைத்தது. அவை அதன் பெயரால் ரிஷபதீர்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, செங்கம், ராமேச்சுரம் முதலிய தலங்களில் ரிஷப தீர்த்தங்கள் சிறப்புடன் விளங்குகின்றன. இத்தீர்த்தங்களின் கரையில் உயர்ந்த மேடைமீது சுதையால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட ரிஷபத்தின் பெரிய உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருக்கழுக்குன்றத்தில் ரிஷப தீர்த்தத்தின் கரையில் அமைக்கப்பட்டுள்ள பெரியகல்லாலான இடபம் மலை மீதுள்ள வேதகிரீசரைப் பார்த்த வண்ணம் இருக்கிறது.

சில தலங்களில் ரிஷபதீர்த்தங்கள் நடைபாவிக் கிணறுகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன. கிணற்றுப் படிக்கட்டுக்களின் மீது அமையும் கட்டிடத்தின் மீது ரிஷபத்தின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.



ஸ்ரீஸ்வர்ணாம்பிகை ஸமேத ஸ்ரீசுகவனேஸ்வரர் திருக்கோயில்- சேலம்

சேலம் சுகவனேசுவரர் கோயில், அவிநாசி மாதவிவனேஸ்வரர் கோயில் முதலியவற்றிலுள்ள ரிஷப தீர்த்தங்கள்மீது இடப உருவம் அமைக்கப்பட்டுள்ளன.

ஆற்றில் அமைந்துள்ள நீராடும் துறைகளுக்கும் இடபத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மயிலாடுதுறையில் காவிரியில் அமைந்துள்ள புனித நீர்த்துறை துலாக் கட்டம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு ரிஷப தீர்த்தத் துறை என்பதும் பெயராகும். காவிரியின் நடுவில் மண்டபம் அமைக்கப்பட்டு, அதில் இடபதேவர் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறைப் புராணம் இந்த ரிஷபத்துறையின் பெருமைகளையும் ஐப்பசி மாதத்தில் இதில் மூழ்கி மயிலாடுதுறைப் பெருமானை வணங்குவதால் கிடைக்கும் நன்மைகளையும் விரிவாகக் கூறுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீரூற்றுக்களும் நந்திகேசுவரரும்

பூமியின் அடியில் ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீர் சிறிய துளைகள் வழியாகப் பொங்கிப் பூமிக்கு மேல் வெளிப்பட்டு, சிற்றோடையாக ஓடிக் கொண்டிருப்பதைப் பல இடங்களில் காண்கிறோம். இவ்வாறு ஊறி வரும் நீர் ஊற்றுநீர் எனப்படும். இத்தகைய ஊற்றுக்களின் தெய்வீகத் தன்மை கருதி, அதன்மீது இடபத்தின் வடிவங்களை அமைக்கும் வழக்கம் உள்ளது. திருக்கயிலை மலையில் இடபரின் வாய்வழியாகக் கங்கை பொங்கி வரும் சிற்பம் உள்ளதாகப் புராணங்கள் கூறுகின்றன. அதையொட்டிச் சில தலங்களில் ஊற்றுக்கண் மீது நந்திகேசுவரர் திருவுருவத்தை அமைத்து அவரது வாய் வழியாக ஊற்றுநீர் வெளிப்படும்படிச் செய்துள்ளனர். அத்தகைய செய்திகளின் சிறு தொகுப்பை இங்கே காணலாம்.

பகீரதனின் தவத்தால் மகிழ்ந்து வானத்திலிருந்து அகங்காரத்துடன் பூமியை நோக்கிக் குதித்த கங்கையைச் சிவபெருமான் தனது சடையில் சிறை வைத்துவிட்டார். பின்னர் பகீரதனின் வேண்டுகோளைஏற்று, அவளைவெளியே விட்டார். சிவபெருமானின் சடையில் இருந்து விடுபட்ட கங்கை கடலை நோக்கி ஆர்ப்பரித்துச் சென்றாள். அகங்காரம் கொண்ட அவள் கயிலையில் இறைவன் முன்னால் அமர்ந்திருக்கும் இடபதேவரை மதிக்காமல் பொங்கிப்பெருகி அவரைத் தள்ளிக் கொண்டு ஓடினாள்.



அதைக் கண்டு கோபித்த இடப தேவர் அவளைஎடுத்து விழுங்கிவிட்டார். பகீரதன் பணிந்து வேண்டியதால், அவளைத் தன் வாய் வழியாக வெளிவிடுத்தார். அதையொட்டிக் கயிலையில் இடபத்தின் வாயிலிருந்து நீர் பெருகிவரும்படியான சிலையை அமைத்து, சிவகணங்கள் வழிபட்டனர். பழைய காலத்திய திருக்கயிலைப் படங்களில் இடபத்தின் வாயிலிருந்து நீர் வெளியே விழுந்து ஓடிக் கொண்டிருக்கும் காட்சியைக் காணலாம்.

அதையொட்டி அன்பர்கள் தெய்வீக ஊற்றுக்களாகக் கருதப்படும் ஊற்றுக்களின் மீது இடபதேவரின் திருவுருவத்தை அமைத்து அதன் வாய் வழியாக ஊற்றுநீர் வெளியேறும்படி செய்யும் வழக்கத்தை மேற்கொண்டனர்.

திருத்தணியை அடுத்துள்ள பைரவத் தலமான ராமகிரியில் மலையிலிருந்து பெருகும் ஊற்றுநீர் அங்கு அமைக்கப்பட்டிருக்கும் இடபத்தின் வாய் வழியாக் வெளிப்படுவது போல் அமைத்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதற்கு ரிஷப தீர்த்தம் என்றும், பைரவ குண்டம் என்றும் பெயர். நீர் குளத்தில் விழுந்து அதை நிறைவாக்கிக் கொண்டே இருக்கிறது. குளத்தில் மிகுதியாகும் நீர் மற்றொரு இடபமுகத்தின் வழியாக வெளி யேறிக் கொண்டிருக்கின்றது.

ஊட்டத்தூர் என்றழைக்கப்படும் ஊற்றத்தூரிலும் ஆலயத்திலுள்ள நந்தியின் வாய் வழியாக ஊற்றுநீர் வெளிவந்து கொண்டிருந்ததாகக் கூறுகின்றனர். இந்த ஊற்றுநீர் நந்தி இங்குள்ள சிவாலயத்தின் மகா மண்டபத்தில் உள்ளது. (இப்போது நீர் வரத்து இல்லை)

தேவாரப் பாடல் பெற்ற திருத் தலமான திருவூறல் இந்நாளில் தக்கோலம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு ஏழு சிவாலயங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று கங்காதீசுவரர் ஆலயம். இங்கு கண்ணுக் குப் புலப்படாத இடத்தில் இருந்து ஊறி வரும் நீர் இடபத்தின் வாய் வழியாக வெளிப்பட்டுக் கருவறையைச் சூழ்ந்து ஓடி மற்றோர் இடபத்தின் வாய் வழியாக வெளியேறி அருகிலுள்ள நீர்நிலையில் சேர்ந்து விடும்படி அமைத்திருக்கின்றனர். ஊறல் (ஊற்று)நீர் நடுவே பெருமான் மகிழ் வுடன் வீற்றிருக்கின்றார். (இப்போது நீர் வரத்து அடைபட்டுவிட்டது. கோயிலும் சிதிலம் அடைந்துள்ளது)

திருஞானசம்பந்தர் வீடுபேறு பெற்ற தலமான ஆச்சாள்புரத்தில் நீரூறி ரிஷப தீர்த்தம் என்னும் திருக்குளம் உள்ளது. இங்கு ஆதியில் ரிஷபத்தின் வாயிலிருந்து ஊறிவந்த நீர் பெருகித் திருக்குளமாக இருந்துள்ளது. இத்தலத்திலும் நந்தியின் வாயிலிருந்து கங்கை வெளிப்பட்டதாகக் கூறுகின்றனர். நீர் ஊறும் ரிஷபத்தைக் கொண்டிருந்ததால், இத்தீர்த்தம் இப்பெயர் பெற்றது என்கின்றனர்.

பாரததேசத்தில் பரவலாகவும், தென் னகத்தில் அதிகமாகவும் ஊற்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் இடபங்கள் பல உள்ளன. இயற்கையின் மாறுபாட்டாலும்,



In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அதிக ஆழ்துளைக் கிணறுகள் பெருகி விட்டதாலும், பெரும்பாலான இடங்களில் நீர் வெளிப்படுவது நின்றுபோய்விட்டது என்பது மிகவும் வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

இமயத்தில் அமைந்துள்ள தலங்களில் இயற்கைப்பொங்கிவரும் ஊற்றுநீரை, இடபமுகத்தின் வழியாக வெளிப்படும்படி அமைத்துள்ளனர். முக்திநாத் எனுமிடத்தில் 108 இடப முகங்கள் அமைக்கப்பட்டு, அதன் வழியாக நீர்த் தாரைகள் விழும்படிச் செய்துள்ளனர்.

ஆந்திர, கன்னட மாநிலங்களிலுள்ள பல தலங்களில் ரிஷபத்தின் வாய்வழியாக ஊற்றுநீர் பொங்கிவரும் அமைப்புகள் உள்ளன. புகழ் பெற்ற தலமான நந்தியாலில் உள்ள நவநந்தி க்ஷேத்திரங்களில் உள்ள நந்தி தீர்த்தங்கள் புகழ்பெற்றவையாகும். பெங்களூருவில் உள்ள மல்லேசுவரம் ஆலயத்தில் ரிஷப முகத்திலிருந்து வெளிப்படும் நீர் சிவலிங்கத்தின் மீது விழுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் இதை வியப்புடன் தரிசிக்கின்றனர்.

இடபத்தின் வாய் வழியாக வெளிப்படும் நீர் மிகுந்த தூய்மை உடையதாகக் கருதப்பட்டதால், சிவபெருமானுக்கு அபிஷேகப் பாத்திரங்களான கெண்டி, தாரா பாத்திரம் முதலியவற்றின் நீர் வெளியேறும் குழாய் அமைப்புகளில் இடப முகத்தை அமைத்துள்ளனர்.

ஆதிமுதலே இடப வழிபாடும் தண்ணீர் வழிபாடும் இணைந்துள்ளன. ஆலயங்களில் பெருமானுக்கு அபிஷேகம் செய்யப்படும் திருமஞ்சன தீர்த்தம் இடப முகத்தின் வழியாக வெளியேறும்படிச் செய்துள்ளனர். இந்த அமைப்பிற்குக் கோமுகம் என்பது பெயர். கோ என்பதற்குப் பெரியது, தலைமை பெற்றது. நீண்டிருப்பது என்பது பொருள். கோ என்பது பசுவிற்குப் பெயராதலாலும், பசு தெய்வீகமாகக் கருதப்பட்டதாலும், ரிஷபமுகத்தை மக்கள் பசுமுகம் என்று நினைத்து விட்டனர். ரிஷபமுகத்தின் வழியாக வெளிப்படும் நீர் மந்திரத் தன்மை மிகுந்ததாகக்கூறுகின்றனர். வேள்விச் சாலைகளில் பயன்படுத்தப்படும்ஹோமக் கரண்டி(சிருக்கின்)யிலிருந்து நெய் வெளியேறும் வழியிலும் ரிஷப முகத்தை அமைத்துள்ளனர்.(காளையின் முகமும் பசுவின் பின்புறமும் பூசைக்குரியதாக இருப்பது இங்கே எண்ணத் தக்கதாகும்.) ❀

மழை வேண்டும் பிரார்த்தனைகளில் ரிஷபதேவர்

ஆதியில் இடபதேவர் தண்ணீரின் தெய்வமாகப் போற்றப்பட்டார். பொங்கிவரும் நீரூற்றுக்களின் மீது அவரது திருவுருவம் அமைக்கப்பட்டு, ஊற்றுநீர் அவரது வாய் வழியாக வெளிப்படும்படிச் செய்துள்ளனர். இது அவர் தண்ணீருக்குரிய தெய்வமாகப் போற்றப்பட்டதைக் குறிக்கிறது.

மேலும், வானம் பொய்த்து வறட்சி நிலவும்போது மழை வேண்டிச் செய்யும் பிரார்த்தனைகளில் ஒன்றாக ரிஷப தேவரிடமும் பிரார்த்தனை செய்யப்படுகிறது. ரிஷப தேவரைச் சுற்றி தொட்டி போல் கட்டி அதில் நீரைத் தேக்கி அவர் மூழ்கியிருக்கும்படிச் செய்து பூசிப்பர். சில இடங்களில் அத்தண்ணீரில் மிளகை அரைத்துக் கலந்து வைக்கின்றனர். இப்பிரார்த்தனைகளால் விரைவில் மழை பெய்யும் என்பது நம்பிக்கையாகும். கொங்கு நாட்டில் பல தலங்களில் தொட்டி போன்ற அமைப்பிற்குள் இருக்கும் ரிஷபரைக் காண்கிறோம். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடப மலைகள் (ரிஷபாத்திரிகள்)

இயற்கையின் கம்பீரத்தைப் பறை சாற்றுபவை மலைகளாகும். ஆதிமனிதனின் வாழ்வு மலையின் மடியில் இருந்தே தொடங்கியது. மலைகளைப் போற்றுவதும் வழிபடுவதும் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. மலைகளை வலம் வந்து வழிபடும் வழக்கம் இன்றும் தொடர்கிறது.

தெய்வங்கள் மலை வடிவம் கொண்டு தவத்தில் மூழ்கி இருக்கின்றன என்று புராணங்கள் கூறுகின்றன. முருகக் கடவுளின் மயிலாக விளங்கும் சூரபத்மன் மலை வடிவம் கொண்டு தவத்தில் மூழ்கி இருப்பதாகக் குன்றக்குடி, மயிலம் தல புராணங்கள் கூறுகின்றன.

கர்நாடகாவிலுள்ள சைய மலைத் தொடரின் நடுவில் ரிஷபதேவர் மலை வடிவங்கொண்டு தவம்புரிந்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த ரிஷபமலை நந்திகிரி என்றும், ஸ்ரீசைலம் என்றும் அழைக்கப் படுகிறது. இதன்மீது மல்லி கார்ச்சுனர் என்னும் பெயருடன் ஸ்ரீசைலநாதர் எழுந்தருளியுள்ளார். இது ஜோதிர் லிங்கமாகும். இடப மலையை வடமொழி யில் ரிஷபாத்திரி என அழைக்கின்றனர். திருப்பதி திருவேங்கட மலையின் ஏழு தொடர்களில் ஒன்று ரிஷபாத்திரி.

திருவண்ணாமலையில் தெற்கு சரிவிற்கு **நந்திமுக பர்வதம்** என்று பெயர். இந்தச் சரிவில் உள்ள பெரிய பாறையைத் தொலைவில் இருந்து பார்க்கும் போது ரிஷபதேவரின் முகம் போலக் காணப்படுகிறது. அதையொட்டி இது ரிஷபமுக பர்வதம் என்று அழைக்கப்படுகிறது. (மேலேயுள்ள படம்)

இதே மலையின் ஈசான பாகத்தில் பவழப்பாறை என்னும் பகுதியும், அதில்



அர்த்தநாரீசுவரர் கோயிலும் அமைந்துள்ளன. இப்பகுதியின் மலை உச்சியில் உள்ள சில பாறைகள் ஒன்றுகூடிப் படுத்திருக்கும் இடபத்தின் வடிவைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அடிவாரத்தில் உள்ள பச்சையம்மன் கோயிலில் இருந்து காணும் போது இந்த நந்தி தரிசனம் கண்ணையும் கருத்தையும் கவர்கிறது. அண்ணாமலையார் இடபத்தைத் தன்னுள் கொண்டிருப்பதை இதுகுறிக்கிறது என்கின்றனர்.

மதுரைக்கு அருகே திருவிளையாடற் புராணம் குறிக்கும் இடபமலை உள்ளது.

திருச்சிமலை ஒரு பக்கத்திலிருந்து காணும் போது இடபம் படுத்திருப்பது போல் காணப்படுவதால், இடபாத்திரி என்றழைக்கப் படுகிறது.

இமயமலைத் தொடரில் கேதாரத்திற்கு அருகே **இந்திரநீல பருப்பதம்** என்னும் மலைக் குன்று உள்ளது. இங்கு ஆலயங்கள் இல்லை. ஒரு பெரியகுன்றை நீலாசல நாதர் என்றும், அதற்கு எதிரிலுள்ள பெரிய பாறையை நீல ரிஷபர் என்றும் அழைக்கின்றனர். மற்றோர் பாறையை இந்திரனின் வடிவம் என்கின்றனர். இந்திரன் வழிபட்ட இந்த இந்திர நீல பருப்பதம் தேவாரப்பாடல் பெற்ற தலம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வீக மலைகளின் சுற்றுப் பாதைகளில் ரிஷபதேவர்

தெய்வீகம் நிறைந்த மலைகளை மக்கள் சிவமாகப் போற்றி வழிபடுகின்றனர். திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருச்சி(திருசிராமலை)முதலிய மலைகளை வலம் வந்து வணங்கும் வழக்கம் இன்றும் உள்ளது.

மலைப் பாதைகளில் மலையின் நான்கு புறங்களிலும், மலைகள் மீது அமைந்துள்ள சிவ பெரு மானை வணங்கிக் கொண்டிருக்கும் கோலத்தில் ரிஷபர்கள் எழுந்தருளி வைக்கப் பட்டுள்ளனர். சில தலங்களில் எட்டுத் திசைகளிலும் ரிஷபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலையில் மலை சுற்றும் பாதையில் நான்கு திசைகளிலும் அளவால் பெரிய இடபத்தின் கல் திருமேனிகள் பெரிய மண்டபங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இடபங்கள் கலையழகு மிக்கவையாகும். திருச்சியில் மலைமீதுள்ள தாயுமானவ சுவாமியை நோக்கியவாறு இடபத்திற்கான சிற்றாலயம் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் இதை நந்தி கோயில் என்று அழைக்கின்றனர். ❀

ரிஷப தண்டம் ; ரிஷப செண்டு

ரிஷப வடிவம் மங்கலச் சின்னமாகவும், சிவபெருமானின் முத்திரையாகவும் இருப்பதால், சிவாலயங்களில் உள்ள செங்கோல், தண்டம், செண்டாயுதம் முதலியவற்றின் உச்சியிலும் ரிஷபத்தின் வடிவத்தை அமைத்திள்ளனர்.

தங்கம் அல்லது வெள்ளித் தகடு போர்த்திய செங்கோல்களின் உச்சியில் படுத்திருக்கும் வடிவிலான இடப வடிவங்களை அமைத்துள்ளனர். ரிஷப தண்டங்களும், ரிஷபம் கொண்ட செங்கோல்களும் ஆங்காங்கு இப்போதும் வழக்கத்தில் உள்ளன. பெருந்திருவிழாவில் சுவாமி பவனி வரும் வேளையில் அந்த ஊர்வலத்தின் முன்னதாகக் கோயில் பணியாளர் ரிஷப தண்டத்தைத் தாங்கிச் செல்லுகிறார்.

செண்டு என்பது நீண்ட கோலின் தலைப் பகுதியில் மூன்று வளைவுகளைக்கொண்டது. செண்டாயுதத்தை ஏந்தியிருப்பதால் இறைவன் செண்டலங்காரர் எனப்படுகிறார். திருவீழிமிழலையில் சிவபெருமான் செண்டு ஏந்தும் மணவாள கோலத்தில் காட்சி அளிக்கின்றார். இவர் ஏந்தும் செண்டின் உச்சியில் இடபத்தின் வடிவம் அமைந்துள்ளது. மாப்பிள்ளை சாமியான சிவபெருமான் இருப்பிடத்தை விட்டு விழா மண்டபத்திற்கு வரும் போது, அவர் கையிலிருக்கும் செண்டை எடுத்துச் சிறப்பு வழிபாடுகள் செய்து, அதை முன்னால் கொண்டு செல்கின்றனர். இதற்குச் செண்டு இறங்கல் என்பது பெயர். ❀

நின்ற ரிஷபம் - சிவாலயங்களில் கருவறைக்கு நேராக இருக்கும் இடபதேவர் எப்போதும் அமர்ந்த கோலத்திலேயே காட்சி அளிக்கிறார். தியாகராஜர் சந்நிதிகளில் மட்டும் அவர் உலோகத்தால் செய்யப்பட்டவராகவும் நின்ற கோலத்தில் இருப்பவராகவும் உள்ளார். இவரை நின்ற இடபம் என்கின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபதேவருக்கு நிறைமணிக்காட்சி

சைவ சமய ஆலயங்களில் புரட்டாசி பௌர்ணமி நாளில் நிறைமணிக் காட்சி என்னும் விழா நடைபெறுகிறது. புதிதாக விளைந்த காய்கனிகள், மலர்கள் கொண்டு ஆலயத்தை அலங்கரிப்பர். இந்நாளில் முறுக்கு, வடை, சீடைமுதலிய தின்பண்டங் களையும் மிட்டாய்கள், சாக்லேட்டுகளைக் கொண்டும் அலங்கரிக்கின்றனர். விளை பொருளையும், உண்பொருளையும் இறைவ னுக்குச் சமர்ப்பிக்கும் விழாவாக இது அமைகிறது.

தீம்புனல் உலகம் எனப்படும் மருதநிலத் தின் தலைவனும், விவசாயத்தின் (வேளாண் மையின்) தெய்வமாகவும் போற்றப்படும் இந்திரன் பூமிக்கு வந்து இவ்விழாவை நடத்துவதாகப் புராணங்கள் கூறுகின்றன.

சிவபெருமான் ஏறி வரும் இடப வாகன தேவருக்கும் இதுபோன்ற நிறைமணிக் காட்சி கொண்டாடுகின்றனர். இந்த நிறை மணிக் காட்சி மாட்டுப்பொங்கலன்று சிறப் பாக நடைபெறுகிறது.

நிறைமணிக் காட்சியில் இடபம் மயிலாப்பூர்



நிறைமணிக் காட்சியில் இடபம் திருவண்ணாமலை

கருவறைக்கு நேராகக் கொடிமரத்தின் முன்பாக எழுந்தருளியிருக்கும் ரிஷபதேவ ருக்கு மாட்டுப் பொங்கலன்று நிறைமணி நடைபெறுகிறது.

இவரது மண்டபம் பல்வகைத் தோர ணங்களாலும், மலர் மாலைகளாலும் அலங் கரிக்கப்படுகிறது. இவருக்குக் காய்கறிகள், பழங்கள், முறுக்கு, லட்டு, தேன்குழல், அதிரசம் முதலியவற்றால் செய்யப்பட்ட மாலைகளை அணிவித்துச் சிறப்புத் தீபாராத னைகள் செய்கின்றனர். அன்னப்படையல் விழா போல இவ்விழா கண்கவர் விழாவாக அமைகிறது.

பூசையின் நிறைவில் அணிவிக்கப்பட்ட அலங்கார மாலைகளில் உள்ள பழங்கள் உண்பொருட்கள் அன்பர்களுக்குப் பிரசாத மாக வழங்கப்படுகின்றன.

மாட்டுப் பொங்கலன்று நந்திதேவரை வழிபடுவதால் வாழ்வில் குறையாத வள மும் செல்வச் செழிப்பும் உண்டாகும். திரு வண்ணாமலை அண்ணாமலையார் ஆலயம், மயிலாப்பூர் கபாலீசுரர் ஆலயம் ஆகியவற் றில் உள்ள நந்திதேவருக்கு மாட்டுப்பொங் கலன்று பெரிய அளவிலான அலங்காரமும் படையலும் நடைபெறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபக் கொட்டில்

மக்கள் தாம் வணங்கும் தெய்வத்தோடு தொடர்புடைய பறவைகள், விலங்குகள் முதலியவற்றை விருப்பமுடன் போற்றுகின்றனர். வைணவர்கள் திருமாலின் வாகனமான கருடனைக் கண்டதும் வணங்குகின்றனர். கருட தரிசனம் சிறந்த பலனைத் தரும் என்பர். மக்கள் யானையை விநாயகராகவும், குரங்குகளை ஆஞ்சநேயரின் அம்சமாகவும் எண்ணி, அவற்றிற்கு உணவுப் பொருட்களைத் தந்து தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வதைக் காண்கிறோம்.

இவ்வகையில்ஆலயங்களிலும் இறைவனோடு தொடர்பான பறவைகள் விலங்குகள் வளர்க்கப்பட்டன. பெரிய ஆலயங்களிலும் யானைகள் வளர்க்கப்படுகின்றன. முருகன் ஆலயங்களில் மயில்கள் வளர்க்கப்படுகின்றன. அதுபோல, சிவாலயங்களில் இடபங்கள் வளர்க்கப்பட்டன. இவற்றிற்காகக் கட்டப்பட்ட கொட்டகைகள் ரிஷபக் கொட்டில்கள் என்று அழைக்கப்படுகின்றன.

பண்டியல் காளை ஆவுடையார்கோயில்

கல்வெட்டுகளில் ஆலயங்களில் காளைகளைப் பராமரிக்க ரிஷபக் கொட்டில் கட்டித் தரப்பட்ட செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சிலர் ரிஷபக் கொட்டில் என்பதற்குக் கருவறைக்கு நேர் எதிரில் உள்ள ரிஷபதேவர் திருவுருவம் எழுந்தருளியுள்ள மண்டபம் என்று கூறுவர். அது பொருந்தாது. பெரிய காளைகள் வசிப்பதற்காகக் கட்டப்பட்ட கொட்டகைகளே ரிஷபக் கொட்டில்கள் எனப்படும்.

முன்னாளில் பெரிய ஆலயங்களில் பெருங் காளைகள் வளர்க்கப்பட்டன. இவை கோயிலுக்குரிய வண்டிகளை இழுக்கவும், நீர் இறைக்கவும், பயன்படுத்தப்பட்டன. ஆவுடையார்கோயிலில் பெரிய காளைகள் உள்ளன. இவை இறைவன் பவனி வரும் வண்டியை இழுத்துச் செல்கின்றன. இவற்றைப் பண்டியல்காளை என்பர்.

சென்னிமலையில், இரண்டு காளை மாடுகள் தினமும் முருகனின் அபிஷேகத்திற்கான தீர்த்தக் குடங்களைச் சுமந்தவாறு படிஏறிச் செல்வது தெய்வீக அதிசயமாகத் திகழ்கிறது. திருக்கடையூரில் ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவிலுள்ள அசுபதி தீர்த்தத்திலிருந்து கொண்டு வரப்படும் தீர்த்தக் குடங்கள் ஏற்றிய வண்டியைக் காளைகள் இழுத்து வருகின்றன. ரிஷபங்கள் வலிமைக்கும் வீரத்திற்கும் அடையாளமாகத் திகழ்ந்தன. செல்வாக்கு மிகுந்தவர்கள் ரிஷபங்களை வளர்த்தனர். அவை வளர்ப்பவரின் வலிமையையும் செல்வாக்கையும் குறித்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண்களிடம் காளைகளை வளர்க்கும் வழக்கம் இருந்தது. ஆயர்குலப் பெண்கள் தாங்கள் வளர்க்கும் காளையை அடக்கும் வீரம் மிகுந்த வாலிபனுக்கே மணமாலை சூட்டி அவனைக் கணவனாக ஏற்றுக் கொண்டனர். கொல்லேறு தழுவக் கூசுவா னை மறுபிறப்பிலும் புல்லாள் ஆயர் மகள் என்ற தொடர் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. தனது கொல்லும் தன்மையுள்ள வீரம் மிகுந்த காளையை அடக்குவதற்குத் தயங்கி அஞ்சி பயத்தால் கூச்சப்பட்டு, நிற்ப வனை இந்தப் பிறவியில் மட்டுமல்ல, இனி வரும் அடுத்த பிறவியில் கூட ஆயர்குலப் பெண் மணந்துகொள்ள மாட்டாள் என்பது இதன் பொருளாகும். இதன்மூலம் முன்னா ளில் பெண்கள் காளையை வளர்ப்பதும், அதனை அடக்கிய வீரர்களை அவர்கள் விரும்பி மணந்து கொண்டதையும் அறிகி றோம். கண்ணபிரான் ஏழு இடபங்களை ஒரே நேரத்தில் அடக்கி, அஞ்சி ஓடச் செய்ததை ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. ஆழ்வார்களும் இந்த வரலாற்றைத் திரும்பத் திரும்பப் பல இடங்களில் குறித்துள்ளனர். ❀

கோயில் மாடுகள்

மாடுகள் கோயிலுக்கு நேர்ந்து விடப் பட்டன. அவற்றைக் கோயில் மாடுகள் என்பர். அவை சுதந்திரமாகத் திரிபவை. அவற்றை ஏரில் பூட்டி உழுவதோ வண்டியில் பூட்டி இழுக்கச் செய்வதோ இல்லை. பெரும்பாலும் பெருமாள் கோயிலுக்கே மாடுகளை நேர்ந்துவிடுவர். இவற்றைப் பெருமாள் மாடு எனவும் அழைக்கின்றனர். கோயிலுக்கு நேர்ந்து விட்ட மாடுகளின் முதுகில் அவை இன்ன கோயிலுக்குரிய மாடுகள் என்பதைக் குறிக்கும் வகையில், சமயக் குறியீட்டைச் சூடு போட்டுப் பொறிப் பர். சிவாலய மாடுகளுக்கு சூலக்குறியும், வைணவக் கோயில் மாடுகளுக்குச் சக்கரக் குறியும் அடையாளமாகப் பொறிக்கப் பட்டன. ❀

ரிஷப தானம்



பசுக்களைத் தானமாக அளிப்பது கோ தானம். கோதானம் சகல பாவங்களையும் நீக்குவதாகும். அதுபோலவே ரிஷபதான மும் புண்ணியம் தருவதாகும். மிகுந்த உழைப்பாளியாகவும், நிலங்களில் பயிர்த் தொழிலை விரும்பிச் செய்பவனாகவும் இருப்பவருக்கு ரிஷபதானம் செய்ய வேண்டும். உறுதியான இரட்டைக் காளை களைத் தர்மமாகவும், சிவமாகவும் பூசித்து அளிப்பதே ரிஷப தானமாகும்.

சிவாகம நூல்களில் கஜதானம், கோ தானம், ரிஷப தானம் முதலியன சொல்லப் பட்டுள்ளன. வெள்ளி அல்லது பொன்னால் பெரிய காளையின் வடிவைச் செய்து அதன் கொம்புகளில் வைரமிழைத்த குப்பிகளை மாட்டி, முதுகின் மீது பட்டையைப் போர்த்தித் தருமதேவதையாகப் பூசித்து, மேலானவர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். ரிஷப தானத்தால் தன்னையும் அறியாமல் செய்த பெரும்பாவம் நீங்கும். புண்ணியம் பெருகும். பசுவைக் கன்றுடன் அளிப்பது போல் ரிஷபங்களை இரட் டையாக அளிக்க வேண்டும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடப முத்திரை

ஒருவருடைய முத்திரை என்பது அவருக்கே உரிய தனித்த அடையாளச் சின்னம். அவர் தனக்குரிய பொருட்களின் மீது அதைப் பதிப்பார். அந்த அடையாளத்தைப் பார்த்த உடனேயே இது இன்னாருடைய தனிப்பொருள் என்பதை அறிந்து கொள்ள முடியும். ரகசியமாகப் பாதுகாக்கும் பொருட்களை உறையில் இட்டு, அதன்மீது அரக்கை ஊற்றித் தமது முத்திரையைப் பதிக்கின்றனர். கருவூலக் கதவுகள் பண்டக சாலைகள் முதலியவற்றைப் பூட்டி, பூட்டின் மீது துணி சுற்றி, அதன்மீது அரக்கை ஊற்றி அதில் முத்திரையிடும் வழக்கம் இப்போதும் உள்ளது.

முன்னாளில் தமக்குரிய பொருட்கள் மீது பதிக்கும் தமது அடையாளங்களான



முத்திரைகளின் அச்சுகளை மோதிரங்களாகச் செய்து அணிந்திருந்தனர். இவை முத்திரை மோதிரங்கள் எனப்பட்டன. அரசனது ஆணைகளில் இந்த முத்திரை பதிக்கப்படும். அரசு முத்திரைகளை ஆணைகளில் பொறிக்கும் அதிகாரப் பொறுப்பில் இருப்பவர் முத்ரா அதிகாரி எனப்படுவார். அரசாங்கக் கடிதங்களில் உள்ள செய்திகளைப் படித்துப் பார்த்துக் கவனத்துடன் சோதித்து, அதில் முத்திரை பதிக்கும் அதிகாரியே முத்ரா அதிகாரி எனப்பட் டான். பாண்டியர்கள் மீனையும், சோழர்கள் புலியையும், பல்லவர்கள் சிங்கம் அல்லது இடபத்தையும் சாளுக்கியர் பன்றியையும் தமது முத்திரைகளாகக் கொண்டிருந்தனர்.

சைவ சமயத்தில் சூல வடிவமும், இடப வடிவமும் முத்திரைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவை சூலமுத்திரை, இடப முத்திரை என்று அழைக்கப்படுகின்றன. கோயில் மாடுகள், பாத்திரங்கள், நில அளவைக் காட்டும் எல்லைக் கற்கள் முதலியற்றின் சூலக்குறி பொறிக்கப்பட்டது. திரிசூலம் சிவனாகவே போற்றப்பட்டது. கோயில் ஆணைகள், கருவூலங்கள் முதலியவற்றில் இடபமுத்திரை பதிக்கப்பட்டது.கோயில்களுக்குத் தம்மை அடிமைப் படுத்திக் கொண்ட ஆடவர்களும் கோயில்களில் ஆடற்பணிக்கு ஈடுபடுத்திக் கொண்ட ஆடல் மகளிரும் இம்முத்திரைகளைத் தமது தோள் களில் பொறித்துக் கொண்டனர். இந்த இரண்டு குறியீடுகளையும், அடியவர்கள் தமது தோளில் பொறித்துக் கொள்ளும் வழக்கம் இப்போதும் இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செம்பினால் செய்த இவ்வடிவங்களைப் பழுக்கக் காய்ச்சித் தோள்களில் பதிப்பர். அது வடுவாகப் பதிந்து விடும் இதற்கு முத்திரை சாற்றிக் கொள்ளுதல் என்பது பெயர். இப்படிச் சாற்றிக் கொண்ட பெண்கள் நக்கன் என்ற அடை மொழி யை இட்டுக் கொண்டனர். நக்கன் புவனி முழுதுடையாள், நக்கன் பிறைநாறு சீர்அடியாள் எனவரும் கல்வெட்டுப் பெயர்களால் இதை அறியலாம்.

அப்பர் சுவாமிகள் தாம் சிவனடிமை என்று அறிவித்துக் கொள்ளும் பொருட்டு இந்த முத்திரைகளைத் தமது மேனியில் பொறித்தருளும்படி இறைவனை வேண்டிக் கொண்டார். இறைவனும் அவரது தோளில் அந்தக் குறிகளை இடும்படித் தமது ஏவலரிடம் கூறினான். அந்த வரலாற்றைக் காணலாம்.

திருநாவுக்கரசர் திருநல்லூர் சென்று வணங்கியபோது "ஓ பெருமானே! நான் தாங்கியுள்ள உடல் நெடுநாள் வேறு சமயத்தில் (சமண) இருந்தது. இத்துடன் நான் வாழ விரும்பவில்லை. இதைத் தூய்மைப்படுத்தி உனதென்று ஆக்கிக் கொள்வதுடன் அதை உறுதிப்படுத்தும் வகையில் உனது முத்திரைகளைப் பதிப்பாய்" என்று வேண்டி நின்றார். சிவபெருமான் "உரிய வேளையில் உம் இச்சையை நிறைவேற்றுகிறோம்" என்றார். பின்னர் பல தலங்களைப் போற்றிப் பணிந்தபின் திருநாவுக்கரசர் பெண்ணாகடம் என்னும் தலத்தை அடைந்தார்.

அது இந்நாளில் பெண்ணாடம் என வழங்கிறது. அங்கே பெண்ணாகடத்துத் தூங்கானை மாடத்துள் எழுந்தருளியிருக்கும் சுடர்க்கொழுந்தாகிய சிவபெருமானைப் பணிந்தார். அப்போது அவரது

வேண்டுகோளை ஏற்றுச் சிவபெருமான் தனது பூதகணத்தை ஏவி, அவரது தோளில் முத்திரையிடும்படி ஆணையிட்டார். அந்தப் பூதம் ஒருவரும் அறியாமல் அப்பர்அடிகளின் வலத்தோளில் சூலத்தையும், இடத்தோளில் இடபத்தையும் குறியாக இட்டது.

இதையொட்டி இந்நாளில் பல சைவ நெறி அன்பர்கள் இந்த இருவுருவங்களையும் தோளில் பச்சை குத்திக் கொண்டுள்ளனர்.

இனி, மதுரை திருவிளையாடற் புராணத்தில் சிவபெருமான் தனது முத்திரையான இடபக்குறியைப் பதித்த வரலாற்றைக் காணலாம்.

முன்னாளில் ஆலயங்கள் பெருஞ் செல்வத்தைக்கொண்டிருந்தன. கோயிலுக்குரியதாக விலையுயர்ந்த அணி, மணிகள், ஆபரணங்கள் இருந்தன. அவற்றுடன் அரசர்களின் சேமிப்புகளும் ஆலயத்துள் வைத்துப் பாதுகாக்கப் பட்டன. இதனால் கோயில்களுக்கு உயர்ந்த கட்டுக் கோப்பான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிகாரிகள் முன்பாகக் கதவுகளை மூடி முத்திரை வைக்கும் வழக்கமும் இருந்தது.

மதுரையில் சமயப் புகழ் பெற்றதும், அரசுக்குச் சொந்தமானதுமான மீனாட்சி உடனாய சோமசுந்தரப் பெருமான் ஆலயம் பெரும் பொக்கிஷமாகவே இருந்தது. அதை நாள்தோறும் இரவு பூசைக்குப்பின் மூடி, அரசு இலச்சினையான மீன் முத்திரையிடு வதும் காலையில் முத்திரைகளைப் பரிசோதித்த பின் திறப்பதுமான வழக்கம் இருந்தது.

அக்காலத்தில் காஞ்சிபுரத்தைக் காடு வெட்டிய சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த சிவபக்தன், அவனுக்கு மதுரையில் எழுந்தருளியிருக் கும் அங்கயற்கண்ணி உடனாய சோம சுந்தரப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. பாண்டிய னுக்கும் அவனுக்கும் பகையிருந்ததால், பாண்டியன் ஆளுகைக்கு உட்பட்டுத் தலை நகராகத் திகழும் மதுரைக்கு எப்படிச் செல்வது என்று எண்ணி மயங்கினான். நாளுக்கு நாள் அவனுள்ளத்தில் மதுரை சோமசுந்தரப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்துவந்தது. ஒருநாள் அதே எண்ணத்துடன் இருந்த அவன் சிவபெருமானைத் துதித்துவிட்டு உறங்கினான்.

அவன் கனவில் எல்லாம் வல்ல சித்தர் வடிவில் தோன்றிய சிவபெருமான், "அன்பனே! அஞ்சாதே! நாளை தனித்துப் பயணித்து, வைகையாற்றின் வடகரைக்கு வந்து சேர். நாமே உன்னை ஆலயத்திற்கு அழைத்துச் சென்று பெருமானைத் தரிசித்து வைப்போம்" என்றார்.

கண் விழித்த சோழன், பெருமானின் பெருங்கருணையை வியந்தான். பயண ஏற்பாடுகளை முடித்துக் கொண்டு புறப் பட்டு, வைகையாற்றின் வடகரையை அடைந்தான். நேரம் கடந்து நள்ளிரவாகி விட்டது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெ டுத்து ஓடிக் கொண்டிருந்தது. இதை எவ்விதம் கடப்பது என்று எண்ணினான்.

சிவபெருமான் அங்கு எல்லாம் வல்ல சித்தனாக அவன் முன்னே தோன்றி, அவனுக்குத் திருநீறு அளித்து அருள்புரிந்து, வைகை ஆற்றைக் கடந்து திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். ஆலயத்தைச் சுற்றிக் காண்பித்துப் பெருமானையும் அம்பிகை யையும் தரிசனம் செய்து வைத்தார். ஆலயத் தின் வரலாற்றையும் பெருமைகளையும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

சோழன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். சித்தர் அவனை வடக்கு வாயில் வழியாக அழைத்துச் சென்று வைகையாற்றைக் கடத்துவித்து விடைகொடுத்தார். சோழன் எல்லையில்லா மகிழ்ச்சிப் பெருக்குடன் காஞ்சியை அடைந்தான். சித்தரின் செயலை எண்ணி எண்ணி வியந்தான்.

மீண்டும் ஆலயத்திற்குச் சென்ற சிவபெருமான், வடக்கு வாயிலை மூடித் தனது சின்னமாக இடப முத்திரையைப் பொறித்துவிட்டு மறைந்தார்.

பொழுது புலர்ந்தது. அதிகாரிகளும் கோயிற்பணியாளர்களும் திரண்டனர். வடக்கு வாயிலில் மட்டும் பாண்டியரின் மீன் முத்திரை விலக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இடபமுத்திரை பதிக்கப்பட்டி ருப்பதைக் கண்டு அச்சமடைந்தனர்.

உடனே அரசனுக்குச் செய்தி அறிவிக் கப்பட்டது. யாரோ கட்டுக்காவலை மீறி உள்ளே நுழைந்து, வெளியேறியது மல்லாது தமது இலச்சினையையும் பொறித்து விட்டுச் சென்றுள்ளனர் என்பதை அறிந்த மன்னன், கோபம் கொண்டான்.விரைந்து கோயிலுக்கு வந்தான். அவனும் தன் பங்கிற்குச்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

சோதனைகள் செய்தான். அவனுக்கும் ஏதும் புரியவில்லை.

முத்திரைகளை அகற்றிக் கோயிலுக்குள் சென்று பார்த்தனர். வைத்தது எல்லாம் அப்படியே இருந்தன. எந்தப் பொருளும் களவு போனதாகத் தெரியவில்லை. அத்துடன் யாரும் உள்ளே வந்ததற்கான அடையாளமும் இல்லை.

மன்னன் சோமசுந்தரப் பெருமான் சந்நிதிக்குச் சென்று பெருமானை வணங்கினான். அவ்வேளையில் சிவபெருமான் விண்ணொலியாக, "மன்னரே, அஞ்சற்க! நேற்று இரவு வடக்கு வாயில் வழியாக வந்து சென்றதோடு, நமது முத்திரையைப் பதித்துச் சென்றதும் நாமே காஞ்சியில் அரசாளும் காடு வெட்டிச் சோழன் நமது பேரன்பன். அவனுக்கு நம்மைத் தரிசிக்க வேண்டும் என்னும் ஆவல் நெடு நாட்களாக இருந்து வந்தது. அதனை நிறைவேற்றவே நாமே அவனை இங்கு அழைத்து வந்து தரிசனம் செய்வித்து அனுப்பி வைத்தோம். உனக்கும் அவனுக்கும் பகை இருப்பதை நாம் அறிவோம். அவனை அழைத்து வந்து தரிசனம் செய்து வைக்கும்படி உம்மிடம் கூறினால் உனக்கு வருத்தம் உண்டாகும் என்பதால், நாமே அவனுக்குத் தரிசனம் செய்வித்தோம். நமதருள் எப்போதும் உனக்குத் துணையிருக்கும்" என்றார்.

அருகம்புல்

சிவபெருமானைப் போலவே ரிஷப தேவரும்அரும்புல்லைச் சூடி மகிழ்கின்றார்.அத்துடன் தாமரை, முல்லை, நந்தியா வர்த்தம் முதலிய மலர்களையும் சூட்டுகின்றனர். ❀

மன்னன், சோமசுந்தரப் பெருமானை வீழ்ந்து வணங்கினான். "உமது பேரன்பனுக்கு நான் அடியவன் அன்றோ! சோழன் மீது கொண்ட பகையை இக்கணமே மறந்து விட்டேன். அவனுடன் நட்பு பூண்பேன் இது உறுதி" என்றான்.

அரண்மனைக்குத் திரும்பிய பாண்டியன், சோமசுந்தரர் பிரசாதத்துடன் உரிய வெகுமதிகளையும் அனுப்பி, காஞ்சிச் சோழனுக்கு நண்பனான். அதுமுதல் காஞ்சிச் சோழன் விரும்பிய போது மதுரைக்கு வந்து மனங்குளிர சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து மகிழ்ந்தான்.

சிவபெருமான் ரிஷபலாஞ்சனன் **(காளை முத்திரையான்)** என்ற தனது பெய ருக்கேற்ப ரிஷபமுத்திரையிட்டதைக் காட்டியதை இவ்வரலாற்றின் மூலம் அறிகி றோம்.

காஞ்சிபுரத்துக் கயிலாயநாதர் கோயிலில் ரிஷபலாஞ்சனன் என்ற விருதுப்பெயர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

❀❀❀❀❀❀❀❀❀❀❀

சூலமும் இடபமும்

சூலமும், இடபமும் சிவபெருமானுக்குரிய அடையாளச் சின்னங்களாக உள்ளன. வடநாட்டு ஆலயங்களில் கோபுரக் கலசத்துடன் நெடிய சூலமும், நாட்டப் பட்டிருப்பதைக் காணலாம். தென்னாட்டு சிவாலயங்களில் மதில்மீது வரிசையாக ரிஷபவடிவங்களை அமைத்திருப்பதைக் காண்கிறோம்.

பண்டைய பாண்டியர்களும் தொடர்ந்து வந்த பல்லவர்களும் தாம் வெளியிட்ட நாணயங்களில் இடபத்தையும் சூலத்தையும் இலச்சினையாகப் பொறித்துள்ளனர். அம்முறை மக்களிடம் பரவலாக இருந்து வந்துள்ளது. அதையொட்டியே திருநாவுக்கரசரும் தம் திருமேனியில் சூல, இடபமுத்திரைகளைப் பொறிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடபம் பொறித்த காசுகள்



இலங்கையில் 200 ஆண்டுகளுக்கு முன்பாகப் புழக்கத்தில் இருந்த காசுகளில், இடபத்தின் வடிவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இத்தகைய மூன்று காசுகள் இப்போது கிடைத்துள்ளன. முதல் காசில் இடபமும் அதற்கு முன்பாக ஆறு இதழ்கள் கொண்ட மலரும் உள்ளன. ஆறு இதழ்கள் கொண்ட இம்மலர் காந்தளைக் குறிப்பதாகும். காந்தள் முருகனோடு தொடர்புடைய மலராகும். முருகனைக் காந்தளம் கண்ணியன் என அழைக்கின்றனர். காந்தளுக்குக் கார்த்திகைப்பூ என்பதும் பெயர்.

இரண்டாவது காசில் இடபமும் அதற்கு முன்பாக மயிலும் காட்டப்பட்டுள்ளன. அந்த மயில் வாயில் பாம்பைப் பற்றியுள்ளது. மூன்றாவது காசில் நந்திக்கு முன்பாக மனிதஉருவம் காட்டப்பட்டுள்ளது. இது முருகனாக இருக்க வேண்டும் என்கின்றனர். இக்காசுகள் முருகன், சிவன் ஆகிய இருவரின் வழிபாடும் சிறப்பாக இருந்ததைக் காட்டுகின்றன. இவற்றில் இடப வடிவத்தின் மீது சந்திரனும், கீழே செது என்ற எழுத்துப் பொறிப்பும் உள்ளன. சேது என்பதே அக்கால வழக்கப்படி இவ்விதம் எழுதப்பட்டுள்ளது. இலங்கை மன்னர்கள் தம்மை "சேதுகாவலர்" என்று அழைத்துக் கொண்டதாலும், சேதுபதிகளோடு கொண்டிருந்த தொடர்பாலும் இவ்விதம் பொறித்துள்ளனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

சிவபெருமானின் இடபம் பொறித்த காசுகள் இலங்கையில் சைவ சமயம் பெற்றிருந்த உன்னத நிலையைக் காட்டுகின்றன. இலங்கையை ஆண்டு வந்த அரசர்கள் பலரும் தம்மைச் "சேது காவலர்" என்று அழைத்துக் கொணடனர். அவர்கள் வெளியிட்ட காசுகள் இவை என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ❀

காப்பரிசி நிவேதனம்

பிரதோஷ வேளையில் திருஇடப தேவருக்குக் காப்பரிசி நிவேதனம் செய்யப்படுகிறது. வெல்லத்தைத் தண்ணீரில் கரைத்து அத்தண்ணீரில் சிவப்பு நிறத்துடன் இருக்கும கைக்குத்தல் அரிசியைக் நன்கு ஊற வைத்து அதனுடன் தேங்காய் துருவல் ஏலக்காய் முதலியவற்றை இட்டுத் தயாரிக்கப்படுவதே காப்பரிசியாகும். காப்பரிசியை நிவேதிப்பதால் வாழ்வில் உண்டாகும் தொல்லைகள் நீங்கும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபக்கொடி



அரசர்களுக்குரிய சின்னங்களில் முதன்மை பெற்றது கொடி. அரசர்கள் தம் எல்லைப் பரப்பை நிலைநாட்ட எல்லைகளில் தமது இலச்சினை பொறித்த கொடிகளை நட்டு வைக்கின்றனர். கொடிகளில் இருக்கும் சின்னங்களின் பெயராலேயே மீனவன் என்று பாண்டியனும், புலியன் என்று சோழனும், வில்லவன் என்று சேரனும் அழைக்கப்படுகின்றனர்.

தெய்வங்களும் கொடிகளின் பெயரால் ரிஷபத் துவஜன்,சேவற் கொடியோன், கருடக் கொடியோன், ஆனைக் கொடியோன் என்று அழைக்கப்படுகின்றனர்.

சிவபெருமானின் வாகனமாகவும், கொடிச் சின்னமாகவும் இருப்பது இடபமாகும். இடபம் பொறித்த கொடியைக் கொண்டிருப்பதால் சிவபெருமான் ஏற்றுக் கொடியான், இடபக்கொடியோன், ரிஷபத் துவஜன் எனப் பலவாறு அழைக்கப்படுகிறார்.

சிவனடியார்கள் ரிஷபக் கொடியைப் பல விதங்களாக அமைத்துள்ளனர். ரிஷபத் துவஜம் என்பது வெண்பட்டுத் துணியில் சிவப்பு அல்லது நீல நிறத்தில் இடப தேவரின் வடிவம் எழுதிய கொடியாகும்.

சிவனடியார்களின் இல்லங்களிலும், அவர்கள் கொண்டாடும் விழாக்களிலும் ரிஷபக் கொடி ஏற்றப்படுகிறது. தோரணங்களிலும் ரிஷபம் பொறிக்கப்படுகிறது.

ஆலயங்களில் ஏற்றப்படும் இடபக் கொடி தனித்தன்மை கொண்டதாகும்.

இதில் நீண்ட துணியின் தலைப்பைச் சதுரமான சட்டத்தில் பொருத்துகின்றனர். இதன் மையத்தில் இடபதேவர் திருவுருவம் கருவறையை நோக்கியிருக்கும்படி காவி அல்லது வண்ணங்கள் கொண்டு தீட்டப்படுகிறார். இவருடைய முதுகின்மீது திரிசூலம் ஆகிய பாசுபதாஸ்திரம் தீட்டப்படுகிறது. அதன்மீது குடை எழுதப்படும். இருபக்கமும் சூரியன் சந்திரன், சாமரங்கள் தீட்டப்படும்.சுற்றிலும் மணி, அடுக்கு தீபம், சங்கு ஸ்வஸ்திகம், ஸ்ரீவத்சம் முதலிய அஷ்டமங்கலப் பொருட்களின் வடிவங்கள் தீட்டப்படும்.

கொடிச்சீலையின் நீண்ட பகுதியிலும் அஷ்டமங்கலங்கள் தீட்டப்படும்.

கொடியேற்றுவதற்கு முன்னாளில் கொடியில் தீட்டப்பட்டுள்ள இடபதேவரின் கண்களில் நெய்யும் தேனும் கலந்த கலவையை பூசிப் பிராணப் பிரதிஷ்டை நடைபெறுகிறது. பிறகு கொடிப் படத்திலுள்ள ரிஷப தேவருக்குச் சிறப்புப் பூசைகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யப்படும். தொடர்ந்து ரிஷபயாகம் நடைபெறுகிறது.

கொடிச்சீலையைப் பல்லக்கில் வைத்து ஊர்வலமாக வரச் செய்கின்றனர். பின்னர் கொடி மரத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கயிற்றில் இணைத்துக் கொடியேற்றப்படும். தொடர்ந்து ரிஷபதாளம் இசைக்கப்படும்.

விழா முடிந்ததும், கொடியிறக்கம் நடைபெறும். கொடிப்படத்துடன் சுவாமி ஊர்வலம் நடைபெறும். சில தலங்களில் 10ஆம் நாளில் வீதிவலம் முடிந்து சுவாமி ஆலயத்திற்குள் வந்ததும் கொடியிறக்கும் விழா நடைபெறும். அத்தலங்களில் கொடிப்படத்துடன் சண்டீசுவரர் வீதி வலம் வந்து விழாவை நிறைவு செய்வர். ❀

ரிஷப யாகம்

முன்னாளில் தெய்வங்களை வழிபடும் முன்பாக, அத்தெய்வங்களையும் ஆயுதங்களையும், அவற்றின் வாகனங்களையும் வழிபடும் வழக்கம் இருந்து வந்தது. படைக்கலமாகிய ஆயுதங்களை வழிபடுதல் "படைக் கலம் சாய்த்தல்" என அழைக்கப்பட்டது. பின்னர், அத்தெய்வத்தின் வாகனம் (ஊர்தி) சிறப்புடன் வழிபடப்பட்டது. சிவாலயங்களில் கொடியேற்றத்திற்கு முன்பாக சூலம் வழிபடப்பட்டதுடன், ரிஷபமும் வழிபடப்பட்டது. அத்துடன் ரிஷப யாகம் செய்யப்படுகிறது. இப்போதும் ரிஷபயாகம் நடை பெறுவதைக் காணலாம். முன்னாளில் கோயிலில் இருந்த ரிஷபத்தை முன்னிருத்தி இப்பூசைகள் நடைபெற்றதாகக் கூறுவர். இந்நாளில் இவ் வழக்கம் இல்லை. யானைகளை வைத்து கஜ பூஜையும், பசுக்களை வைத்து கோபூஜையும் நடத்து போல ரிஷபங்களை வைத்து ரிஷப பூஜைகள் நடைபெற்று வந்தன என்கின்றனர் ❀

ரிஷப தாளம்

உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சியின் காரணமாக ஆடத் தோன்றுகிறது. அந்த ஆட்டம் ஒவ்வொருவரின் உடல் வாகிற்கு ஏற்பவும், மகிழ்ச்சியின் நிலைக்கேற்பவும் அமைகிறது. அந்நிலையில், சீரான தாள கதியில் ஆட்டம் நிகழ்கிறது. தொடக்கத்தில் மெதுவாக இருக்கும் தாளகதி நேரம் செல்லச் செல்ல வேகமெடுக்கிறது. இந்தத் தாள கதியைக் கொண்ட பாடலைச் சொற்கட்டாலும் மேளம் முதலிய தோற் கருவிகளை இயக்குவதாலும் வெளிப்படுத்துகின்றனர்.

திருக்கோயில் வழிபாட்டில் தீபாராதனையின் போது கணபதி தாளம், மயூரதாளம் போன்றவை இசைக்கப்படுகின்றன. ரிஷப தாளம் என்னும் ஜதிக்கோர்வையும் வழக்கில் இருக்கிறது. கொடியேற்றம், கொடியிறக்கம், ரிஷப வாகன சேவை முதலிய பூஜா காலங்களில் இது இசைக்கப்படுகிறது. ❀

புன்னகை புரியும் நந்தி

விலங்குகளின் முகத்தில் சிரிப்பைக் காட்ட முடியாது என்றாலும் சிரிக்கும் கோலத்தில் உள்ள நந்தி, காஞ்சிபுரம் கச்சபேசுவரர் ஆலயத்தில் இருக்கிறார். கொடி மரத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்த நந்தியின் முகத்தில் சிரிப்பைக் காணலாம். ❀

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

கடலையைத் தின்ற கல் இடபம்



திருவாவடுதுறை ஆதீனத்தின் குரு முதல்வரான நமச்சிவாய மூர்த்திகளின் நேரடிச் சீடர் சிவப்பிரகாசர். இவர் மிகச் சிறந்த ஞானி. சிதம்பரம் ஆலயத்தில் ஏற்பட்ட இன்னல்களை நீக்கக் குருவின் ஆணைப்படி வீர சைவம் புகுந்தவர். அந்நாளில் வேலூரில் இருந்த அரசப் பிரதிநிதிகளைச் சந்தித்து, வைணவர்களால் சிதம்பரத்தில் ஏற்பட்டிருந்த தொல்லைகளைக் களைந்து தீட்சிதர்களின் உரிமைகளை நிலைநாட்டி வழக்கம் போல் நடராசரின் பூசைகள் நிகழத் துணை நின்ற பெருமை மிக்கவர்.

பல அற்புதங்களைச் செய்தவர். ஒரு சமயம் இவர் கொங்குநாட்டில் தல யாத்திரை மேற்கொண்டு சிவாலயங்களை வழிபட்டு வந்தார். அவர் திருச்செங்கோடு சென்று மலை மீதினில் விளங்கும் மலைத் தம்பிரானானஅர்த்தநாரீசுவரரை வழிபட்டார்.

அவ்வேளையில் இவர்பால் பொறாமை கொண்ட சிலர், "இவர் அற்புதங்கள் செய்வதுஉண்மையானால் இதோ இந்தக் கொடி மரத்திற்கு அருகில் இருக்கும் இடபத்தை நாங்கள் தரும் கடலையைத் தின்ன வைக்கட்டும் பார்க்கலாம்" என்றனர்.

சிவப்பிரகாசர் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், அவர்களது சீடர்கள் குருவிடம் 'ஐயனே! இவர்கள் நாணும்படியாக இந்த நந்தியைக் கடலையைத் தின்னச் செய்யுங்கள்" என வேண்டினர். சிவபெருமான் அருள் துணையிருக்க அது ஒன்றும் பெரிதில்லை என்று கூறியவாறு சிவப்பிரகாசர் விபூதியை எடுத்து

வில்லார் பொதுச் சபையின் வித்தகா நீயுமுனங்
கல்லானைக் கருத்திக் காட்டியவன் - வல்லாண்மை
கட்டுரை யாயின் இந்தக் கல்லேறுழ், இக்கடலை
இட்டஇவர் முன்தினச் செய்யே

என்ற வெண்பாவை ஓதி, இடபத்தின் மீது இட்டார். அக்கணமே அந்தக் கல் இடபம் உயிர் பெற்றெழுந்து ஊங்கார மிட்டுச் சிலிர்த்தது. அவர்கள் வைத்திருந்த கடலையை உண்டு அசை போட்டுவிட்டு மீண்டும் கல்லாகி விட்டது.

அதைக் கண்டவர்கள் வியந்தனர். வீண் வாதம் புரிந்தவர்கள் அஞ்சினர். இச்செய்தி கொங்குமண்டல சதகம், திருச்செங்கோட்டு பனுவல்கள் முதலான நூல்களில் இடம்பெற்று உள்ளது.

கஞ்சனூர் தலத்தில் உள்ள கல் நந்தி ஹரதத்தர் அளித்த அருகம்புல்லை உண்டு அதிசயம் நிகழ்த்தியதையும் வரலாறு கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுதா நந்திகள்



சுதை என்பது அமிர்தத்தைக் குறிக்கும். அமிர்தமயமானவரும் அழிவற்றவரும் ஆகிய சிவபெருமானுக்கு வாகனமாகவும், அவரைப் போலவே அழிவற்றதான தர்மத்தின் வடிவாக விளங்குபவரும் ஆகிய இடபதேவரும்அமிர்ததேவனாகப் போற்றப் படுகிறார். அவரைச் சுதாரிஷபன் என்கிறோம்.

நாட்டு வழக்கில் சுதை என்பது கடுக்காயும் வெல்லமும் கலந்த நீரில் சுண்ணாம்பை ஊற வைத்து வெண்ணெய் போல் மென்மையாக அரைத்து, செங்கல் கட்டு வேலைக்கு மேலே பூச்சு வேலைக்குப் பயன்படுத்தும் கலவையாகும். இதைக் காரை எனவும் அழைப்பர்.

பெரியவடிவில் அமைக்கப்படும் நந்தி வடிவங்களைக் கருங்கல் கொண்டு செய்யாமல் செங்கல் சுதையால் செய்து காரையிட்டு, வண்ணம் தீட்டி அலங்கரிப்பர். இத்தகைய செங்கல் கட்டுவேலை நந்திகள் சுதாநந்திகள் என்று அழைக்கப்படுகின்றன.

காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சுதா சந்தி உள்ளது. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர், கங்கை கொண்ட சோழபுரம், சோழீசுவரர், நெல்லை நெல்லையப்பர், இராமேசுவரம் ராமநாதர், திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி முதலான பெரிய ஆலயங்கள் பலவற்றில் சுதா நந்திகள் உள்ளன. திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தில் இருக்கும் சுதாநந்தி அளவால் பெரியது. அழகில் சிறந்தது. வண்ணம் தீட்டப் பட்டுப் பொலிவுடன் விளங்குவது.

சுதை சந்திகள் அளவால் பெரியதாக இருப்பதால் பெரியது என்ற பொருளில் பிரம்ம நந்திகள் என்றும் அழைக்கப் படுகின்றன. பிரம்மதேவனே இத்தகைய பெரிய வடிவம்கொண்டு வழிபட்டுக் கொண்டிருக்கிறான் என்றும் கூறுகின்றனர்.



ரிஷபர் - காஞ்சி கயிலாயநாதர் கோயில்



ரிஷபர் - கங்கை கொண்ட சோழபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மாக்காளையப்பர்(பிரம்மநந்தி) திருவிடைமருதூர்



பிரம்மநந்தி - காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலயம்

மாக்காளை எனப்படும் பெரிய ரிஷபங்களை கருவறை நோக்கி மட்டுமே அமைக்கும் வழக்கம் இருக்கின்றது. துணைச் சந்நிதியை நோக்கி அமைக்கப்படும் இடபங்களின் வடிவம் அளவில் சிறியதாகவும் கல்லால் அமைக்கப்பட்ட தாகவும் இருக்கும். சிதம்பரத்தில் கருவறை யான மூலட்டநாதரை நோக்கியும், சிற்சபையான நடராசரின் பொற்கோயிலை நோக்கியவாறும் பெரிய இடபங்கள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு மண்டபங்களும் அமைக் கப்பட்டுள்ளன. கிழக்குப் பிராகாரத்திலும் தெற்குப் பிராகாரத்திலும் அமைந்துள்ள இந்தப் பெரிய நந்திகள் கம்பீரமாகவும் அழகாகவும் காட்சியளிக்கின்றன. ❀

மகாலிங்கத்தின் மகா ரிஷபம்

சோழநாட்டையே பெரிய சிவாலயமாக உருவகம் செய்வர். அந்த உருவகத்தில் கருவ றையில் வீற்றிருக்கும் பெருமானாக இருப்பவர் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி. அவருக்குரிய பரிவாரங்களாக திருவாவடுதுறை இடபம், ஆலங்குடி தட்சிணாமூர்த்தி, சேய்ஞ்சலூர் சண்டீசர், தில்லை நடராசர், திருவாரூர் தியாகராஜரான சோமாஸ்கந்தர் திருநாகேசுவரம் கிரிகுஜாம்பிகை, சுவாமிமலை குமரன், திருவலஞ்சுழி விநாயகர் ஆகியோர் உள்ளனர். இவ்வகையில் திருவாவடுதுறை ரிஷபத்திற்கு மகாரிஷபம் என்பதும் பெயரானது. மகாலிங்கத்திற்குரிய மகாரிஷபமாக அவர் விளங்கி வருகிறார். ❀

வாயிலின் மீது ரிஷபதேவர்

கொங்குநாட்டுச் சிவாலயங்கள் சிலவற்றில் நுழைவாயிலின் மீது கோபுரத்திற்குப் பதிலாக ரிஷபதேவரின் உருவத்தை அமைக்கும் வழக்கம் உள்ளது. கோவை, போரூர் பட்டீசுவரர் கோயிலுக்கு வடக்கில் அமைந்துள்ள காலவேசுவரர் கோயில் வாயில் மீது பெரிய ரிஷபம் படுத்திருப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. கொங்கு நாட்டுக் கோயில்கள் பலவற்றில் இந்த அமைப்பு உள்ளது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லட்சக்கல் நந்தி

சைவமும் தமிழும் வளரும் தொட்டிலாக இருந்து வரும் திருவாவடுதுறை ஆதீனம் இருக்கும் ஊர் திருவாவடுதுறை. திருநந்திதேவராலும், ஞானப் பெருமக்களான நந்திகணத்தினராலும் இடபதேவராலும் பெருமை பெற்றது இத்தலம்.

இங்குள்ள கோமுத்தீசுவரர் ஆலயத் தில் கொடிமரத்திற்கு முன்பாக மிகப் பெரிய இடபம் உள்ளது. தென்னகத்தில் உள்ள நந்தி(இடப) வடிவங்களில் இதுவே பெரியதாகும். ஏறத்தாழ 20 அடி உயரம் கொண்டது. மைசூர் நந்தி, தஞ்சாவூர் நந்தி முதலியவை இதன் முன்னே சிறியதேயாகும். இது பல துண்டுக் கற்களை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. உபசாரத்திற்காக லட்சம் கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகக் கூறி, லட்சக்கல் நந்தி என்று அழைக்கின்றனர்.

இவர் இவ்வளவு பெரிய திருவுருவுடன் இருப்பதற்கு ஒரு வரலாறு உள்ளது.

சிறப்புமிக்க இத்தலத்தில் திருமாளிகைத் தேவர் என்னும் சித்தர் வாழ்ந்து வந்தார். அவர் அளவில்லா ஆற்றல் பெற்றவர். பலவகையான சித்துக்கள் செய்பவர். போகரின் மாணாக்கர். இவர் மிகவும் அழகானவர். பிள்ளைப் பேறு இல்லாத பெண்கள் இவரிடம் இருந்து திருநீறு பெற்றுச் சென்றனர். அவர்கள் பக்தியுடன் இவர் திருவுருவத்தை நினைத்து அதை அணிந்து கொண்டதுடன் அருந்தினர்.

அதன்பயனாகக் கருவுற்றுப் பிள்ளைகளைப் பெற்றனர். அக்குழந்தைகள் யாவும் தேவருடைய சாயலிலேயே இருந்தன. இதைக் கண்ட அவருடைய எதிரிகள் அப்பகுதியை ஆண்டு வந்த நரசிங்கமுனையன் என்னும் அரசனிடம் சென்று "திருமாளிகைத் தேவர் பெண்களை மயக்கி இன்பம் துய்த்துள்ளார். அதனாலேயே குழந்தைகள் எல்லோரும் அவருடைய சாயலில் இருக்கின்றனர். ஒழுக்கமற்ற அவரைத் தண்டித்தே தீர வேண்டும்" என்று கோள் மூட்டினர்.

மன்னர், ஏவலர்களிடம் தேவரை அழைத்து வரும்படி ஆணையிட்டான்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னிடம் வந்த அரச காவலர்களைத் தேவர் அலட்சியம் செய்து அனுப்பிவிட்டார். அதனால் கோபம் கொண்ட அரசன் அவரைச் சங்கிலியால் கட்டி இழுத்து வரும்படிக் கூறினான். சங்கிலிகளுடன் சென்ற ஏவலர்கள் அவர் முன்பு சென்றதும், தாங்களே ஒருவருக்கு ஒருவர் கட்டிக் கொண்டு மன்னனிடம் வந்து வீழ்ந்தனர். அதைக் கண்டதும் அரசனின் கோபம் அதிகமானது.

படையெடுத்துச் செல்லும்படி சேனா திபதியிடம் கூறினான். அவன் ஆணைப்படி சேனாதிபதி பெரும்படையுடன் திருவா வடுதுறையை நோக்கி வந்தான். தேவர், அத்தலத்தில் வீற்றிருக்கும் அம்பிகையைத் துதித்துத் தம்மைக் காத்தருளும்படி வேண்டினார்.

அம்பிகை திருமதிலில் இருந்த நந்திகளுக்கு உயிர் கொடுத்துப் படையாக்கி அனுப்பினாள். அவை பெரும்படையாகச் சென்று மன்னனின் படையை அழித்து மீண்டன.

வேந்தன்பட்டிநெய் நந்தி

புதுக்கோட்டை மாவட்டம் பொன்ன மராவதியை அடுத்துள்ள ஊர் **வேந்தன் பட்டி**, இங்குள்ள மீனாட்சி சுந்தரேதசுவரர் ஆலயத் தின் இடபம் புகழ்பெற்றதாகும். இவ ருக்கு மக்கள் நெய்அபிஷேகம் செய்கின்றனர். அபிஷேகம் செய்யப்பட்ட நெய் ஒரு கிணற்றில் சேமித்து வைக்கப்படுகிறது.❀

தேவர் அவைகளை மகாரிஷபத்தில் ஒடுங்கும்படிச் செய்தார். திருமதில் நந்திகள் யாவும் ஒவ்வொரு கல்லாகி இந்த ரிஷபத்தில் அடங்கின. லட்சம் நந்திகள் லட்சம் கற்களாகி இந்த மகா ரிஷபத்தில் கலந்துள்ளன என்று கூறப்படுகிறது. இந்த லட்சக்கல் ரிஷபத்தை வழிபட்டால் லட்சம் ரிஷபங்களையும் லட்சம் சிவலிங் களை யும் வழிபட்ட புண்ணிய பலன் உண்டாகும்.

தேவரின்ஆற்றலை அறிந்து கொண்ட நரசிங்க மன்னன் பணிவுடன் வந்து அவரை வணங்கி ஆசிபெற்றான் என்று புராணம் கூறுகிறது. ❀

திருமதில் - விமானம் - கோபுரங்களில் வீற்றிருக்கும் இடபங்கள்

சிவபெருமான் மகாரிஷபத்துடன் அனேக காளைக் கணங்களைப் படையாகக் கொண்டுள் ளான். அவை அவரது திருமதில் கோபுரம், விமானம் முதலியவற்றில் வீற்றிருக்கின்றன. சிவாலயங்களில் அமைந்துள்ள உயரமான மதில்களின் உச்சியில் சீரான இடைவெளியில் ரிஷப உருவங்கள் அமைக்கப் படுகின்றன. ஸ்ரீ விமானங்களில் கிரீவம் எனப் படும் கழுத்துப் பகுதியில் எட்டு இடபங்கள் அமைக்கப் படுகின்றன. ரிஷபவடிவங்களுடன் அவற்றிற்குத் துணையாகப் பூதங்களின் வடிவங்களும் அமைக்கப்படுகின்றன. ராஜ கோபுரங்களின் உச்சியில் அமையும் கண்டப் பகுதிகளிலும் நான்கு முனைகளிலும் முனைக்கு இரண்டு வீதம் எட்டு ரிஷபங்கள் அமைக்கப்படுகின்றன. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானின் மகேசுவர வடிவங்களில்

இடபதேவர்

சிவபெருமான் சிவலிங்க வடிவில் இருக்கும் போது இடபதேவர் அவர் எதிரில் அமர்ந்தவாறு தியானத்தில் ஆழ்ந் திருக்கிறார்.

சிவபெருமான் பவனி வரும் வேளை யில் அவரைச் சுமந்து வருகிறார். சிவபெரு மான் மணக்கோலத்துடன் பவனி வரும் போது தொடர்ந்து வருகிறார். சில சமயம் சிவபெருமானால் அன்புடன் தழுவப் படுகிறார். சில சமயங்களில் அவருக்குச் சிம்மாசனமாக விளங்குகிறார். அவர் சிவபெருமானோடு இருக்கும் நிலையை ஒட்டிச் சிவபெருமானுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன.

ரிஷபர் சிவபெருமானைச் சுமந்து பவனி வரும் நிலை, அவருக்கு ஆசனமாக விளங்கும் நிலை, சிவபெருமானின் ஆடலுக்கு அரங்கமாக இருக்கும் நிலை, அவரால் அன்புடன் தழுவி நிற்கும் நிலை, அவரு டைய ஆற்றலைக் கண்டு வியந்து நிற்கும் நிலை என ஐந்து நிலைகளில் விளங்கு கிறார். இவை ஒவ்வொன்றையும் தனித் தனியாகச் சிந்திக்கலாம்.

இடபாரூடம் எனப்படும் சிவபெருமானைச் சுமந்து வலம் வரும் நிலை

சிவபெருமான் அன்பர்களுக்கு அருள வரும் போது செம்பொன்மலைவல்லியான உமாதேவியுடன் விடைமேல் அமர்ந்து வருகின்றார். இக்கோலமே இடபாரூடம் என்றழைக்கப்படுகிறது. திருஞான சம்பந்தர் கோளறு பதிகத்தில்,

எருதேறி ஏழையுடனே பொன்பொதி
மத்தமாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்

எமக்கு எதனாலும் இடர்வராது என்கி றார். சிறுத்தொண்டருக்கு அருள் புரிய வந்த வேளையில்,

மலை பயந்த தையலோடும் சரவணத்
தனயனோடும் தனி வெள்ளி விடைமேல்
நெடுவிசும்பில் தோன்றினார் என்று சேக் கிழார் பாடிப் பரவுகின்றார். அடியவர்கள் அன்பர்களுக்கு அருளச் சிவபெருமான் தேவி யுடன் விடைமேல் வரும் கோலத்தை மங்கல வடிவமாகப் போற்றி வணங்குகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாசனமாக விளங்கும் இடபதேவர்

உயர்ந்த செயல்களைப் புரியும் வேளையில் சிறப்பு மிக்க ஆசனத்தில் அமர்ந்து அச்செயல்களைப் புரிவர். அரசன் வீரசிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு புரிகிறான்.

குருமார்கள் புலித்தோல், மான்தோல் ஆகியவற்றை விரித்து அதன்மீது அமர்ந்து உபதேசம் புரிகின்றனர்.

பூஜைகளின் போது தெய்வங்களை நிலைப்படுத்தும் பூரணகும்பங்களுக்கு தான்யக் குவியலை ஆசனமாக அமைக் கிறோம். இவற்றை நோக்க ஆசனங் களுக்குச் சமய வாழ்வுதரும் முக்கியம் புலப்படுகிறது.

சிவபெருமான் ஆகமங்களையும் அதன் நுண்பொருளையும் விளக்கும் வேளையில் தருமத்தை ஆசனமாகக் கொண்டு அதன்மீது அமர்ந்து உபதேசிக்கின்றார். தருமத்தின் வடிவமான இடபம் இங்கு ஆசனமாக அமைக்கப்பட்டுள்ளது. படுத்திருக்கும் இடபதேவரின் மீது அமர்ந்தவாறு உபதேச கோலத்தில் விளங் கும் தட்சிணாமூர்த்தி வடிவங்கள் பல திருக்கோயில்களில் உள்ளன.

மயிலாடுதுறை, வள்ளலார் கோயில், அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் கோயில், சேந்த மங்கலம் ஆபத்சகாயேசுவரர் கோயில் முதலான கோயில்களிலுள்ள தட்சிணா மூர்த்தி இடபத்தின் மீது அமர்ந்திருக்கும் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

ரிஷபாந்திகர் எனப்படும் காளையைத் தழுவி நிற்கும் கோலம்.

சிவபெருமான் தனதுமெய்ப்பொருள் வடிவமாகத் தோன்றிய இடபதேவரை ஆரத் தழுவி மகிழ்கின்றார். இக்கோலம் ரிஷபாந்திகர் எனப்படுகிறது.

சிவபெருமான் உமாதேவியை மணம்

புரிந்தபின், எல்லோருக்கும் திருமணக் கோலத்தில் காட்சியளித்தார். பின்னர், மண மண்டபத்தில் வைத்திருந்த முளைப் பாலிகைகளை எடுத்துச் சென்று கங்கை யில் விட ஊர்வலமாகச் சென்றார். அப்படிச் செல்லும் வேளையில் இடபதேவர் அவருடன் செல்கின்றார். சிவபெருமான் தனது இடது கையை அவர் முதுகின் மீது ஊன்றி உள்ளங்கையை அவர் கொம்பு களுக்கு இடையே உச்சந்தலையில் வைத் துக் கொண்டிருக்கிறார். வேளாண்மை புரியும் பள்ளனாக வரும் கோலத்திலும், பெருமான் இடபத்தைத் தழுவிக் கொண் டிருக்கிறார்.

அர்த்தநாரீசுவரர் கோலங்கள் சிலவற்றி லும் பெருமானை இடபாந்திகனாகக் காணமுடிகிறது. குடந்தைக் கீழ்க்கோட்டம், பழையாறை, திருவிடைமருதூர் போன்ற தலங்களில் இடபதேவருடன் கூடிய அர்த்த நாரீசர் காட்சி தருகிறார். திருக்கண்டியூரில் அமர்ந்த நிலையில் இடபத்துடன் கூடியவராக விளங்கும் அற்புதக் கலைப்படைப்பான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்த்த நாரீசர் பிராகாரத்தில் வீற்றிருக்கிறார்.

முனைழு

பெருமானுக்கு ஆடரங்காக விளங்கும் நிலை

சிவபெருமான் வெற்றித் திருநடனம் ஆடும் போது இடபதேவரின் திருமுதுகு அவருக்கு ஆடுகளமாக உள்ளது. இடபத்தின் மீது நின்று வாளை வீசி, வெற்றித் திருநடம் புரிவதை ரிஷபதாண்டவம் என்றழைக்கின்றனர். மேலைக் கடம்பூரில் உள்ள சிற்பத்திலும், கர்நாடக மாநிலத்தில் காணப்படும் பல சிற்பங்களிலும் பெருமான் இடபத்தின் மீது வீரநடனம் புரிவதைக் காண்கிறோம்.

ஆற்றலைக் கண்டு வியந்து நிற்கும் நிலை

சிவபெருமானிடமிருந்து அளவில்லாது வெளிப்படும் ஆற்றலைக் கண்டு ரிஷபர் தலைதூக்கி வியந்து நிற்பத்தைச் சில வடிவங்களில் காண்கிறோம். திருவெண்காட்டில் தன்னை வருத்திய மருத்துவாசுரனைப் பெருமான் சூலத்தைச் சுழற்றி சம்ஹாரம் செய்து ஆடல் புரிவதைக் கண்டு வியந்து தனது தலையைத் தூக்கிப் பார்க்கும் கோலத்தில் உள்ளார். அதுபோலவே பகீரதனின் வேண்டுகோளை ஏற்று,, ,சிவபெருமானின் சடையில் பாய்ந்து விழும் கங்கையை அதிசயத்துடன் தலை நிமிர்த்திப் பார்க்கும் ரிஷபத்தைக் காண்கிறோம். அவர் முதுகில் சாய்ந்து கொண்டு அக்காட்சியைக் காண்பவளாகப் பார்வதியும் அமைக்கப்படுகிறாள்.

இவ்விதம் பல்வேறு நிலைகளில் சிவபெருமானைப் பிரியாதவராக இடபதேவர் உள்ளார். ❀

தலபுராணங்களில் இடபதேவர் துதிகள்

திருத்தலங்களின் பெருமைகளை விளக்க எழுந்தவை தல புராணங்கள், தலபுராணங்களின் தொடக்கத்தில் வாழ்த்துப்பகுதி இடம் பெறுகின்றன. இதில் விநாயகர், முருகன், தலக்கடவுள், தலஅம்பிகை, சண்டீசர், அடியவர்கள் முதலியோருக்கு வாழ்த்து கூறப்பட்டிருக்கும். சில புராண நூல்களில் இடபதேவருக்கும் வணக்கம் கூறப்பட்டுள்ளது. அவிநாசித் தலபுராணத்தில் இடம் பெற்றிருக்கும் பாடலைக் காணலாம்.

முற்சிலம்பு விடும் மதனை முளரிஅம்கண்
ணால்எரித்த முதல்வர், வேதச்
சொற்சிலம்பு புக்கொளியார் கோதை பா
கத்து டனே தோற்றஞ் செய்யும்
விற்சிலம்பு நிகர் மேனி விடை இடபத்
தனித்தேவர் மிளிர்மா ணிக்கப்
பொற்சிலம்பு கிண்கிணிசேர் புனைவுதரு
கனை கழல்கள் போற்றல் செய்வாம்



விளக்கம்: முன்னொரு காலத்தில் வனசாதி மதலர்ப் பாணங்கள் பிரயோகித்த மன்மதனைத் தனது அழற் கண்ணாலெரித்த தலைவனும் வேதங்கள் முறையிட்டு அழைக்கும் பெருமானும் ஆகிய திருப்புக்கொளி அவினாசியில் (இடப்பாகத்தில்) பெருங்கருணையம்மை சமேதராய் ஏறி வரும் வெள்ளி மலை போலுந் திருமேனியுடைய ஊர்தியாக விளங்கும் இடபதேவரின் ஒளிவீசும்மாணிக்க பொற்சிலம்பின் கிண்கிணியோசை சேர ஒலிக்கும் பாதங்களைப் போற்றுவோம்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பிரதோஷ விழாவில் இடபதேவர் வழிபாடு

சிவபெருமானுக்குரிய உயர்ந்த விரதங்களில் ஒன்றாக இருப்பது பிரதோஷ விரதமாகும். பிரதோஷ விழா சிவபெருமான் பாற்கடலில் இருந்து தோன்றிய நஞ்சை உண்டு திருவிளையாட்டாக நடனம் புரிந்ததை நினைவூட்டும் விழாவாகும். அவர் விஷத்தை அருந்தி அதனால் உன்மத்தன் (பைத்தியக்காரன்) ஆனது போல் நடித்து, சூலத்தைச் சுழற்றி உடுக்கையை ஒலித்துப் பிச்சாடல் புரிந்தான். அந்தக் காட்சியைக் கண்டு தேவர்கள் அஞ்சி ஆளுக்கொரு திசையாக ஓட்டம் எடுத்தனர்.

ரிஷபதேவர் மட்டும் அவரது திருவிளையாடலைக் கண்டு உளமும் உடலும் ல் பூரித்தார். அப்பூரிப்பால் அவர் உருவம் பருத்தது. அதனால் கயிலாயமே மறைத்துக் கொண்டது. ஓடிப் போன தேவர்கள் சற்று பயம் தெளிந்து திரும்பிவந்தபோது, சிவபெருமான் ஆடுவது ரிஷபதேவரின் கொம்புகளுக்கு நடுவேயுள்ள இடை வெளியில் மட்டுமே தெரிந்தது. அதைக் கண்டு அவர்கள் மகிழ்ந்தனர்.

அன்று முதல் பிரதோஷ வேளையில் ரிஷபரின் கொம்புகளுக்கு இடையேயுள்ள வழியாகச் சிவலிங்கத்தைத் தரிசித்து வணங்கும் வழக்கம் வந்தது.

சிவபெருமான் பிரதோஷ வேளையில் ரிஷபத்தை வணங்குவோர் எல்லா செல்வங்களையும் அடைவார்கள் என்ற வரத்தை அளித்தார். அன்று முதல் பிரதோஷ காலத்தில் ரிஷப தேவருக்கும் சிவலிங்கத்திற்கும் ஏககாலத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகின்றன. ரிஷப ருக்கு அருகம்புல் மாலையுடன் மலர் மாலைகளும் சூட்டப்பட்டு, அலங்கார தீபாராதனைகள் செய்யப்படுகின்றன.

சிவபெருமானை உமாதேவியுடன் சிறிய இடப வாகனத்தில் அமர்த்தி ஆலய உட் பிரகாரத்தில் மும்முறை வலம் வரச் செய்வதுடன், ரிஷபதேவரை முன்னிறுத்தி தீபாராதனையும் செய்கின்றனர். பிரதோஷ காலத்தில் சிவபெருமானையும் ரிஷபத்தையும் வழிபடுவது சகல பாவங்களையும் போக்கிப் பெரும் புண்ணியத்தை அளிப்பதாகும்.

சாதாரணமாகவே சிவாலயங்களுக்குள் செல்லும்போது ரிஷபரை வணங்கி, அவரது அனுமதி பெற்றே சிவசந்நிதிக்குச் சென்று அவரைத் தரிசிக்க வேண்டும். அவரை வணங்கி வலம் வந்து கோமுகிக்கு அருகில் வீற்றிருக்கும் சண்டீசரை வணங்கிச் சிவ தரிசன வழிபாட்டின் பலனைத் தருமாறு பிரார்த்திக்க வேண்டும்.

பிரதோஷ காலத்தில் நந்திதேவரை மும்முறை வணங்க வேண்டும். பிரதோஷ காலத்தில் தரிசனம் செய்யும் முறையை விளக்கும் பாடலில் ரிஷபதேவரைத் தரிசனம் செய்து வணங்க வேண்டியதன் அவசியம் குறிக்கப்பட்டுள்ளது. சிவபூஜா விதி நூல்களில் பிரதோஷ நாளில் சிவாலயத்தை வலம் வரவேண்டிய முறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பிரதோஷ நாளில் வலம் வரும் முறையைச் சோம சூத்திர பிரதட்சணம் என அழைக்கின்றோம். ஆலகால விஷத்தால் தாக்குண்ட தேவர்கள் இடமும் வலமுமாகத் திசை

ஸ்ரீ இடபதேவர் (அருள்மிகு காளையப்பர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



புரியாது அஞ்சி ஓடிய நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையில் இது அமைகிறது. இதைக் குறிக்கும் கடம்பவனப் புராணப் பாடல்கள் வருமாறு:-

தரிசித்துத் திடவிடையைச் சென்றிடபஞ்சண் டேசன்
திருவடியைத் தெரிசித்து மீண்டு திடவிடையைத்
தெரிசித்துச் சென்றவலஞ் சோமதிசை சேர்ந்து
மீண்டிடபந் தெரிசித்துத் திகழ்சண்ட னடியைத்
தெரிசித்துப் பராசக்தி யெனும் சோமஞ் சேர்ந்து
மீண்டுதிறற் சண்டனடி தெரிசித்து விடையைத்
தெரிசித்துச் சிவலிங்கத்தைத் தெரிசித்துப் பணிக
இதுசோம சூத்திரமொன்று அனந்தபலஞ் செய்யுமே.

இப்பாடலின் பொருள்:-ரிஷபதேவரைத் தரிசனம் செய்து, அங்கு இருந்து இடமாகச் சென்று சண்டீஸ்வரரைத் தரிசனம் செய்து, சென்ற வழியே திரும்பி வந்து ரிஷபதேவரை மீண்டும் தரிசனம் செய்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று பராசக்தியாய் விளங்கும் கோமுகி எனப்படும் சிவபெருமானின் அபிஷேக நீர்வரும் துவார வழியைத் தரிசனம் செய்து, சென்ற வழியே திரும்பி வந்து, ரிஷபதேவரை மீண்டும் தரிசனம் செய்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசனம் செய்து, அங்கு நின்றும் சென்ற வழியே திரும்பி வந்து ரிஷப தேவரைத் தரிசனம் செய்யாது வலமாகச் சென்று, பராசக்தியாகிய கோமுகியைத் தரிசித்து, மீண்டும் வந்தவழியே திரும்பவந்து ரிஷப தேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசனம் செய்து, சென்ற வழியே திரும்ப வந்து நந்திதேவரைத் தரிசனம் செய்து, பின்னரே சிவலிங்கத்தைத் தரிசித்தல் வேண்டும். இதுவே சோமசூத்திரப் பிரதட்சிணமாகும். இப்பிரதட்சிணத்தைச் செய்தால் அது ஒன்று அனந்தகோடி பலனைத் தரும் என்பதாகும்.

பிரதோஷ வேளையில் கருவறையில் இருக்கும் பெருமானை அவருக்கு முன்பாக உள்ள ரிஷபத்தின் பின்னால் நின்று ரிஷபத்தின் கொம்புகளுக்கு இடையேயுள்ள இடைவெளியின் வழியாகத் தரிசித்து வணங்க வேண்டும். பிரதோஷ கால சிவதரிசனத்தின் பலன் ரிஷப தேவரின் மூலமாகவே கிடைக்கும் என்பதால், அவரைப் போற்றி வணங்கிப் பிரார்த்திக்க வேண்டும்.

அனைத்து ஆலயங்களிலும் பிரதோஷ காலத்தில் கொடிமரத்திற்கு அருகிலிருக்கும் ஆத்மநந்தி எனப்படும் (ருத்ர நந்திக்கே) சிறப்பு வழிபாடுகள் செய்யப்படும். மற்றைய நந்திகளுக்குச் செய்யும் வழக்கமில்லை. திருவண்ணாமலையில் கருவறைக்கு முன்னுள்ள ரிஷபம், நந்தி மகாமண்டபத்திலுள்ள நந்தி, கொடி மரத்திற்கு அருகிலுள்ள ஆத்ம ரிஷபம், கிளி கோபுரத்திற்கு முன்னுள்ள ரிஷபம், வள்ளாள மகாராஜன் கோபுரத்திற்கு முன்னுள்ளரிஷபம் ஆகிய ஐந்து நந்திகளுக்குமே சிறப்பு அபிஷேக அலங்காரங்களுடன் வழிபாடு செய்யப்படுகிறது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தஞ்சாவூர் நந்தி

பெரிய லிங்கத்திற்கு ஏற்ப, பெரிய நந்தியை இங்கு ராஜராஜன் அமைத்துள்ளான். விசாலமான மண்டபத்தில் பெரிய வடிவுடன் அலங்காரத்துடன் ரிஷபர் அமர்ந்துள்ளார்.

திருவிடைமருதூர், திருவாவடுதுறை, முதலிய தலங்களில் உள்ள ரிஷபங்கள் அளவால் பெரியவை என்றாலும் அவை சுதையாலும் துண்டுக் கற்களாலும் உருவாக்கப்பட்டவை. அளவால் பெரிய கல் ரிஷபமாக இருப்பது தஞ்சாவூர் ரிஷபம் ஆகும்.

பிரதோஷ காலங்களிலும், மாட்டுப் பொங்கலன்றும் பெரிய அளவில் அபிஷேக அலங்காரங்களும் சிறப்பு வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன. இந்த ரிஷபம் பார்ப்பதற்கு மலைப்பை உண்டு பண்ணுகிறது.

இக்கோயில் ஸ்ரீவிமானத்தில் கிரீவப் பகுதியில் எட்டு நந்திகள் நிலைப் படுத்தப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஆறடி உயரமும் நிறையும் கொண்டவைகளாகும்.

வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம் தஞ்சாவூர். இங்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மாமன்னன் ராஜராஜன் எடுப்பித்த பெருவுடையார் கோயில் கம்பீரமாக நின்று சைவத்தையும், தமிழர் தம் சிற்பக் கலையின் உன்னதத்தையும், பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. இக்கோயிலில் உள்ள லிங்கமே தமிழகத்துச் சிவாலயங்களில் இடம் பெற்றுள்ள லிங்கங்களில் மிகப் பெரியதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பசவண்ணர்கோயில்கள்

ரிஷபம் - நந்திதேவர் ஆகிய இருவருக்கும் உள்ள வேறுபாடுகளை மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்வில்லை. அன்பர்களுக்கு நந்தி என்றதும் சிவபெருமானோ ஞானத் தலைவர்களான நந்தி கணத்தினரோ நினைவுக்கு வருவ தில்லை. நந்தி என்றதும் காளை வடிவமே மனதுக்குள் வந்துவிடுகிறது. பேரறிஞரான பசவண்ணர் சிவபெருமானின் நந்திகணத்தைச் சேர்ந்த பரமஞானி. மண்மேல் வந்து வீர சைவத்தை பிரகாசப்படுத்தியவர். அவருக்கு முன்னமே வீரசைவம் தோன்றி பெருமை பெற்றிருந்த போதிலும், பசவண்ணரே அதைப் புதுமையுடன் பொலிவுறச் செய்து பரவச் செய்தவர். பசவண்ணரை நந்தி தேவரின் அவதாரம் என்று போற்றுகின்றனர்.

பசவண்ணருக்கு அமைத்த ஆலயங்களில் அவரது திருவுருவத்தை அமைக்காமல் ரிஷபத்தை அமைக்கும் வழக்கத்தை அன்பர்கள் மேற்கொண் டுள்ளனர். நந்தி என்றதும் அன்பர்களுக்குச் சிவ பெருமானைப் போலவே விளங்கும் நந்தி நினைவுக்கு வருவதில்லை. ரிஷபமே நினைவுக்கு வருவதால், ரிஷபத்தின் வடிவில் அவரை வைத்து வழிபடும் வழக்கம் வந்து விட்டது. பசவர் கோயில்கள் என்பவை இந்நாளில் ரிஷபர் கோயில்களாக உள்ளன.

வீர சைவர்கள் போற்றிப் பணி செய்த ஆலயங்களில் வாயிலின் மீது கோபு ரத்திற்குப் பதிலாக ரிஷபத்தின் திருவுருவத் தை நிலைப்படுத்தியுள்ளனர். பசவர் மீது கொண் டுள்ள பெருமதிப் பால் ரிஷபங் கள் அனைத்தையும் பசவன் என்று பெயரிட்டு அழைக் கின்றனர். ரிஷபத்திற்கு பெரிய ஆலயம் அமைந்த பகுதி மைசூ ருக்கு அருகில் உள்ள பசவன்குடியாகும். தென்னகத் திலும் பசவரை ரிஷபத்தின் வடிவில் அமைத் து வழிபடும் ஆலயங்கள் உள்ளன.

அழகுக்காக வைத்த இடபம் வழிபாட்டிற்கு உரியதானது.

தெய்வசக்தி எங்கும் உள்ளது. அன்பர்கள் வழிபடும் பொருட்களில் அது தாமாக வந்து குடிகொண்டு அவர்களுக்கு அருள்பாலிக்கிறது. அழகுக்காக நிலைப்படுத்தப்பட்ட சிலைகள் அருள் வழங்கும் தெய்வமானதை அனேக இடங்களில் காண்கிறோம்.

சென்னை மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் சி.ஐ.டி காலனி அமைந்துள்ளது. அழகுக்காகவும், புதிய குடியிருப்பு தோற்றுவிக்கப்பட்டதை அறிவிக்கும் அடையாளமாகவும், தூண் ஒன்று அமைக்கப்பட்டு அதன்மீது ரிஷப வடிவத்தை அமைந்திருந்தனர். காலப்போக்கில் அந்த இடபம் வழிபாட்டிற்குரியதாகவிட்டது. இந்நாளில் இவை நாட் பூசையுடன், பிரதோஷ காலத்தில் சிறப்பு வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன. பெருமளவு மக்கள் கூடி வழிபடுகின்றனர். இதுபோன்று சென்னை அண்ணாசாலையில் உள்ள வருமானவரித் துறையில் உள்ள வளாகத்தில் இடம் பெற்றுள்ள ரிஷப வடிவத்தையும் சில அன்பர்கள் வணங்கி வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகரகண்டிகையில் இடபவாகனக் காட்சியும் அதிகாரநந்தி சேவையும்

சிவபெருமானைச் சுமந்து வலம் வரும் பேற்றைப் பெற்றவர் ரிஷபர். ரிஷபர் மீது பவனி வரும் பெருமானை ரிஷபாரூடர் என அழைக்கிறோம். ரிஷபரைப் போலவே சில சமயங்களில் அதிகாரநந்திதேவர் சிவபெருமானைத் தோளில் சுமந்தவாறு காட்சி தருகிறார். அதற்கு அதிகார நந்திசேவை என்பது பெயர். இவை இரண்டும் சைவ அன்பர்கள் போற்றும் அற்புதக் காட்சிகளாகும். இவை இரண்டையும் ஒருசேர உருத்திராட்ச கண்டிகைகளில் கலைஞர்கள் அமைத்து மகிழ்ந்துள்ளனர். அத்தகைய கண்டிகையை இங்கே காணலாம். ❀

கண்டிகை என்பது கழுத்தை ஒட்டி அணியும் அணியாகும். கண்டம் என்னும் சொல் கழுத்தைக் குறிப் பது. கழுத்தை ஒட்டி அணியப்படுவதால், அந்த அணிகலன் கண்டிகை எனப்பட்டது.

சைவர்கள் உருத்திராக்க வடத்தை ருத்ராட்ச கண் டிகை என அழைப்பர். கண்டிகையின் நடுவில் தங் கத்தால் கலைநுணுக்கத்துடன் செய்த மங்கலச் சின்னமான இரட்டை மகரங்களின் வடிவங்களை அமைக்கின்றனர். அதனால் அது மகரகண்டிகை எனப்படுகிறது. மகர வடிவங்களின் நடுவே கலையழகுடன் சிவ வடிவங்களை அமைக்கும் வழக்கம் பெருமளவில் உள்ளது. இந்த அமைப்பிற்கு மதாணி என்பது பெயர்.

அற்புதக்கலை உணர்ச்சி மேலோங் கிய கலைஞர்கள் மதாணியான மகரங்களின் நடுவே இடபவாகனத்தில் உமையுடன் சிவபெருமானை அமைத்து, அவர்களுக்கு இருபுறமும் கந்தர்வர்களையும் பூதகணங்களையும் அமைத்தனர். இந்நிலை மேலும் வளர்ந்து சிவனும் உமையும் இடபத்தில் இருக்க, அவருடன் விநாயகர் பெருச்சாளி மீதும், முருகன் வள்ளி தெய்வயானையுடன் மயில் மீதிலும் இருக்கும்படி அமைத்துள்ளனர். மேலும், இந்த அமைப்பை அதிகாரநந்தி தாங்குவது போலவும் அமைத் துள்ளனர். அதிகாரநந்தி எல்லையற்ற ஆற்றலுடன் இடபவாகனத்தில் வீற்றிருக்கும் உமையுடன் ஆன பெருமானைத் தாங்கும் காட்சி கண்ணையும் கருத்தையும் கவர்வதாக உள்ளது. இதன்கீழ் கௌரி சங்கரம் தொங்கலாக அமைக்கட்டுள்ளது. இதில் ஒருசேர பெருமானின் இடப வாகனக் காட்சியையும் அதிகார நந்தி சேவையையும் கண்டுகளிக்கிறோம்.

இத்தகைய அற்புத அணிகலன்களான மகரகண்டிகை திருப்பரங்குன்றம் சுப்பிர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவநிதிகள் காட்டும் செல்வத்தின் அடையாளம் காளை,

உலகில் உள்ள உயர்ந்த செல்வங்கள் நவநிதிகளாகும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அடையாளம் உள்ளது. தாமரை, சங்கு, ஆமை என அவை குறிக் கப் படுகின்றன. இவ்வரிசையில் காளை, மாகாளை என இரண்டு நிதியங்கள் காளை யின் பெயரால் குறிக்கப்படுகின்றன.

மணியசுவாமி ஆலயத்திலும், திருவண்ணா மலை அண்ணாமலையார் ஆலயத் திலும் உள்ளன.

ரிஷபாரூடராக அமைக்கும் வழக்கத் தைப் பின்பற்றி அன்பர்கள் நடராஜர், சந்திரசேகரர் முதலிய வடிவங்களை அமைக்கும் வழக்கமும் வந்துள்ளது. செட்டிநாட்டு அன்பர்களில் பலர் நடராசன் உருவம் அமைந்த மகரகண்டியைகை அணிகின்றனர்.

முருகன் ஆலயங்களில் உள்ள, கண்டிகை களில் தெய்வயானை உடனாய முருகனை அமைக்கும் வழக்கம் உள்ளது. காஞ்சிபுரம் ஏகாம் பரநாதர் ஆல யத் தில் அம்பிகை சிவ லிங்கத்தைத் தழுவி நிற்கும் கோலத்தை முகப் பில் கொண்ட மகர கண்டிகை உள்ளது.

பாதாள இடபமும் ஆகாச இடபமும்

சிவபெருமான் பாதாளேசுவரராக பூமி மட்டத்தின் கீழேயும் ஆகாச லிங்கமாக உயரமான இடத்திலும் வீற்றிருந்து அருள் புரிவதைப் போலவே அவரது வாகன மான ரிஷபமும் ஆகாச ரிஷபமாகவும், பாதாள ரிஷபமாகவும் காட்சியளிக்கிறது.

பூமிமட்டத்திற்குக் கீழே அமைக்கப் பட்டள்ள இடபங்களைப் பாதாள ரிஷபம் என்று அழைக்கின்றனர். திருவீழிமிழலை ஆலயத்தில் பாதாள ரிஷபம் என்னும் பெயரில் ரிஷபம் உள்ளது. இக்கோயிலில் கொடி மரத்திற்கு முன்பாகக் கருவறையை நோக்கியவாறு ஆதிசிவாலயம் அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் கம்பத்தடி பெரு மானுக்கு ஸ்ரீமூலநாதர் என்பது பெயர். இவருக்கான இடபம் இவருக்கு எதிரி லுள்ள மகாமண்டபத்தின் கீழ் குகை போன்ற அமைப்பிற்குள் உள்ளார். இவரைப் பாதாள நந்தீசர் என்றழைக் கின்றனர்.

சில தலங்களில் ரிஷபம் சிவபெரு மானுக்கு நேராக இல்லாமல், சற்று உயர மான மேடை அல்லது தூண் மீது அமைக் கப்பட்டிருக்கும். இவரை உச்சிநந்தி அல்லது ஆகாச நந்தி என்று அழைக்கின் றனர்.

திருஒற்றியூர் ஆலயத்தில் கருவறைக்கு நேரே அமைந்துள்ள நந்தி உயர்ந்த தூண் மீது இருப்பதும், திருவண்ணாமலையில் தெற்குப் பக்கத்தில் பெரும்பாறை மீது நந்தி அமைக்கப்பட்டிருப்பதும் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

ஆந்திர கர்னாடகமாநிலங்களில் மலை களின் உச்சிமீது அருகிலுள்ள நகரத்தை நோக்கி யிருக்கும்படி பெரிய ரிஷபங்களை அமைத்துள்ளனர். இவை ஆகாச ரிஷபங் களைக் குறிப்பதாகும். நந்திகிரி, ஸ்ரீசைலம் முதலிய அனேகத் தலங்களில் மலையுச் சியில் வடிவால் பெரிய ரிஷபங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்தி வழிபாட்டில் ரிஷபம்

சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்று, அவரைப் பிரியாதிருக்கும் பராசக்தியும் இடப வாகனத்தைக் கொண்டிருக்கின்றாள். பெரிய சிவாலயங்களில் அமைந்திருக்கும் அம்பிகை சந்நிதிகளில் அவளுக்கு நேர் எதிரில் ரிஷபமே அமைக்கப் பட்டுள்ளது. இந்த நந்திக்குச் சோமநந்தி என்பதுபெயர். பிற்காலத்தில்தான் ரிஷபத்திற்குப் பதில் சிங்கத்தை அமைக்கும் வழக்கம் வந்ததென்பர்.

சிவபெருமான் ரிஷபத்தில் பவனி வரும் போது அம்பிகையும் தனி ரிஷபத்தில் உடன் வருகிறாள். சிவபெருமானை வெள்ளி ரிஷபத்திலும் அம்பிகையைத் தங்க ரிஷபத்திலும், பவனி வரச் செய்வர். கங்காதரர் சிற்பங்களில் ரிஷபரும் தேவியும் முக்கியமாக இடத்தைப் பெற்றுள்ளனர். இரவிவர்மாவின் ஓவியங்களில் கங்கையைச் சிவன் ஏற்கும் காட்சியில் தலையைத் தூக்கிப் பார்க்கும் ரிஷபத்தையும் அதன் முதுகின் மீது சாய்ந்து கொண்டு நிமிர்ந்து பார்க்கும் உமாதேவியையும் காண்கிறோம். பண்டைய ஓவியங்களில் கங்கையை வாயில் ஏற்று அடக்கிக் கொள் ளும் காளையையும் காண்கிறோம்.

கங்கையை அழகிய நதி என்னும் பொருளில் இராமநதி என்று அழைக்கின்றனர். அவள் பூசித்துப் பேறு பெற்ற தலம் ராமநதீச்சரமாகும்.

இங்கே கங்கை பொங்கி வந்த போது அவளை அடக்க ரிஷபதேவர் முன்வந்ததாகவும், அம்பிகை அவரை அதட்டித் தன் பின் இருக்கச் செய்ததாகவும், கூறப்படுகிறது. இதைக் குறிக்கும் வகையில் இங்குள்ள சோமாஸ்கந்தர் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அம்பிகை பெருமானுக்கு இடப்புறம் அமர்ந்துள்ளாள். அவள் தனது கையைப் பீடத்தில் ஊன்றியுள்ளாள். ஊன்றிய கரத்தின் கீழ் இடபர் படுத்த நிலையில்காணப்படுகிறார். அம்பிகை அவரது முதுகில் கை வைக்கும் பாவனையில் உள்ளார். இத்தகைய அமைப்பு வேறெந்தத் தலத்து சோமாஸ்கந்தர் வடிவிலும் இல்லையென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சக்தியின் கூறுகளாகத் தோன்றி மண்ணில் நிலை பெற்றுள்ள காளிதேவி, மாரியம்மன் முதலிய ஆலயங்களிலும் ரிஷபம் எதிரில் நிலைப்படுத்தப்படுவதுடன் ரிஷப வாகன சேவைவிழாவும் நடத்தப்படுகிறது.

அங்காளம்மன் கோயில்களில் கருவறைக்கு நேர்எதிரில் ரிஷபம் அமைத்துள்ளனர். அங்காளம்மன் கோயில்களிலும் ரிஷப வாகன சேவை நடத்தப்படுகிறது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காளையாக வந்து அருள்புரிந்த சிவபெருமான்

சுந்தரமூர்த்தி நாயனாரின் பெருமைகளைத் தில்லைக் கூத்தனின் திருவருள் மூலமாகக் கேள்வியுற்ற சேரநாட்டு மன்னரான சேரமான் பெருமாள் நாயனார் அவரை நாடிச் சிதம்பரத்திற்கு வந்தார். தில்லைக் கூத்தனை வணங்கியபின் சுந்தரர் திருவாரூரில் இருப்பதை அறிந்து, அங்கு சென்றார். சிவபெருமான் மூலமாகச் சேர மன்னரின் பெருமைகளை அறிந்திருந்த சுந்தரர் அவரை எதிர்கொண்டழைத்தார்.

இருவரும் சோழ நாட்டுத் தலங்களைத் தரிசித்தனர். பின்னர், இருவரும் பாண்டிய நாட்டுக்குப் பயணமாயினர். அங்குள்ள பல தலங்களைத் தரிசித்தவாறு திருச்சுழியல் சென்றனர். அங்கு சுந்தரர் ஊனாய் உயிராய் என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

அங்கிருந்த மாளிகையில் சுந்தரரும் சேரமன்னரும் தங்கியிருந்தனர். அதிகாலையில் சுந்தரர் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். அவருடைய கனவில் அழகிய காளையொன்று தோன்றியது. அதைக் கண்டு மகிழ்ந்த சுந்தரர், அதைத் தொடர்ந்தார். காளை மறைய அழகிய இளைஞன் தோன்றினான். அவன் இந்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏந்தி நின்றான். தலையில் வட்டணை (சுழியம்) சூடிக் கொண்டிருந்தான்.

அவன் திருவடிவம் எங்குமில்லாத அதிசய வடிவாய் இருந்தது. அவன் சுந்தரரை நோக்கிப் புன்னகைத்து நாம் இருப்பது கானப்பேரூர் என்று கூறிப் பார்த்திருக்கும் போதே மறைந்தான்.

சுந்தரரின் உறக்கம் கலைந்தது. கண் விழித்த அவர் தாம் கண்ட கனவினைச் சேரமானிடம் தெரிவித்தார். அதைக் கேட்டு சேரர் மகிழ இருவருக்கும் கானப்பேர் எனும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானைக் காண வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. அப்போதே, "தொண்டர் அடி தொழலும்" என்ற பதிகத்தைப் பாடினார். அந்தப் பாடலில், "கானப்பேர் உறையும் காளையை என்று எய்துவதோ அடியேன்" என்று ஏங்கியுள்ளார். முதற்பாடலில் பெருமானின் வடிவழகைப் புகழ்ந்து பாடினார்.

பின்னர், அன்பும் ஆசையும் மேலிட விரைந்து காளையார்கோயில் எனும் கானப்பேரை அடைந்தார்கள். அங்கு உறையும் காளையப்பரைச் சுந்தரர் சொன்மாலைகளால் துதித்தார். சேரமன்னரும் வழிபட்டு மகிழ்ந்தார்.

காளையப்பர் வீற்றிருக்கும் காளையார்கோயில்

காளை என்பது நடைமுறையில் மாடுகளில் ஆண் இனத்தைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. இலக்கியங்கள் காளை என்பதை வாலிபப் பருவத்தில் மிடுக்கோடு அழகு நிறைந்தவனாக வலம் வரும் ஆண் மகனைக் குறிக்கின்றன. பேரழகனான, கம்பீரமான தோற்றத்துடன் பவனி வரும் சிவபெருமானைக் காளையப்பன் என்று அழைக்கிறோம்.



திருச்சுழியல் என்னும் தலத்தில் தங்கியிருந்த போது, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அவன் கனவில் முதலில் காளை மாடு வடிவத்திலும், பின் அழகிய வாலிபனாகப் பொற்சுழியும் அணிந்து, செண்டேந்திய செல்வனாகக் காட்சியளித்தார். காளை மாடாகவும், காளைப்பருவத்து அழகனாகவும் பெருமான் காட்சியளித்து வாவென்று அழைத்து அருள்புரிந்த இடம் இந்நாளில் காளையார் கோயில் என அழைக்கப்படுகிறது. இங்குவீற்றிருக்கும் பெருமான் காளையப்பர் என்று அழைக்கப் படுகிறார். அம்பிகையின் பெயர் சுவர்ண வல்லி என்பதாகும்.

மதுரைக்கு அருகில் (சிவகங்கைச் சீமையில் அமைந்துள்ள தலம் காளையார் கோயில். சங்ககாலத்தில் இது கோட்டை கொத்தளங்களுடன் பெரிய நகரமாக இருந்தது. அந்நாளில் இதற்குக் கானப்பேர் என்ற பெயர் வழங்கி வந்தது. இதற்குக் கானகத்தின் நடுவே அமைந்த பெரிய ஊர் என்பது பொருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தரருக்குப் பெருமான் காளை வடிவில் காட்சியளித்ததையொட்டி இத்தலம் காளையார் கோயில் என வழங்குகிறது. காளை வடிவில் காட்சி கொடுத்ததுடன், பெருமான் காளிக்கும் அருள்புரிந்தார். காளியால் வழிபடப்பட்டதால் காளீசர் என்றும் அவளுக்குப் பொன் மயமான திருமேனியே அளித்ததால் சுவர்ண காளீசுவரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

சுவர்ணகாளீசுவரர் சுயம்பு வடிவினர். சுவர்ணகாளீசருக்குத் தெற்கில் அமைந்த சந்நிதியில் சோமநாதேசுவரர் எழுந்தருளி உள்ளார். இது தனி ஆலயமாக உள்ளது.

காளீசருக்கு வடக்கில் தனிக் கோயிலில் சுவர்ணவல்லியம்மன் எழுந்தருளியுள்ளாள். சுவர்ணகாளீசுவரர், சுவர்ணவல்லி சந்நிதிகளுக்கு நடுவே பரிவாரங்களுடன் தனிக்கோயிலில் மீனாட்சி சுந்தரேசுவரர் வீற்றிருக்கின்றார்.

சோமநாதர், சுவர்ணகாளீசுவரர், சுவர்ணவல்லி, மீனாட்சி சுந்தரேசுவரர் ஆகிய நான்கு சந்நிதிகளையும் சுற்றி மதில் அமைக்கப்பட்டுள்ளது.

சுவர்ணகாளீசுவரருக்கு எதிரே ஐந்து நிலை கோபுரமும், சோமேசருக்கு எதிரே ஒன்பது நிலை கொண்ட ராஜகோபுரமும் உள்ளன.

சோமேசர் கோபுரத்தைக் கட்டியவர்கள் மருதுபாண்டியர்கள். அவர்கள் இக்கோயிலின் இறைவன் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தனர். அவர்களது திருவுருவங்களை அம்பிகை சந்நிதியில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

சோமேசுவரர், சுவர்ணகாளீசர், மீனாட்சி சுந்தரேசுவரர் சந்நிதிகளில் தனித்தனி பள்ளியறை அமைக்கப்பட்டுள்ளன. தினமும் மூன்று பள்ளியறை பூசைகள் தனித்தனியே நடத்தப்படுகின்றன. சுவர்ணகாளீசர் சுவர்ணவல்லி பள்ளியறை தங்க மஞ்சத்துடன் யானைத் தந்தங்களையும் கொண்டது.

தலத்தின் பெருமைக்கும் கோயில் சொத்துக்களுக்கும் காளையப்பர் உரியவராக இருந்தாலும், அனைத்து விழாக்களும் சோமநாதருக்கே நடத்தப்படுகின்றன. இதையொட்டிக் "காளை தேட, சோமர் சுகிக்க" என்னும் பழமொழி இப்பகுதியில் வழங்குகிறது.

இது சுந்தரரும், திருஞானசம்பந்தரும் பாடிப் பரவிய தலம்.

திருப்பூவணம், திருவாடானை, திருவெற்றியூர் முதலிய தலங்கள் இத்தலத்திற்கு அருகில் உள்ளன. ❀

காளையார் மங்கலம்

காளையார் கோயிலைப் போலவே சிறப்பு பெற்ற தலம் காளையார் மங்கலம். இங்கு மீனாட்சி அம்பிகை உடனாய சுந்தரேசுவரர் ஆலயம் உள்ளது. நாட்டரசன் கோட்டையிலிருந்து இவ்வூர் எட்டு கி.மீ. தொலைவில் உள்ளது. ❀

அழகன் முருகனோடும் மலைபயந்த கற்பகக் கொடியோடும்
அலங்கல் விடை மேல் வந்தருளி, ஆசைதீரக் கொடுக்கும்
கண்ணுதற்பெருமான் அருளினால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வளர்க!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருபுன்கூரில் நந்தனருக்காக நந்தி விலகியிருக்கும் ஐதீகப் படம்



அருள்மிகு ரிஷப தேவர்-திருவிடை மருதூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy